www.padippakam.com

16-28 பிப்ரவரி 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

## என்ரானின் வழிப்பறிக் கொள்ளை






## "தலித்" அரசியலின் விபரீத வளர்ச்சி

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே தேசிய மனித உரிமை கமிசன் உள்ளது. போலீசார் எப்படி விசாரணை நடத்த வேண்டும் என்பது குறித்து உச்சநீதி மன்றத்தின் கட்டளைகள் உள்ளன. ஆனாலும், கொட்டடிக் கொலைகள் இம்மியளவு கூடக் குறையவில்லை. கடந்த ஓராண்டில் மட்டும் நாடெங்கும் நடந்துள்ள கொட்டடிக் கொலைகள் 1000-ஐத் தாண்டிவிட்டன. மாநிலம் வாரியாக எடுத்துக் கொண்டால், பீகாரில் 112, மகாராஷ்டிராவில் 89, ஆந்திராவில் 61, தமிழ்நாட்டில் 41, இராசஸ்தானில் 39, பஞ்சாபில் 38 - என போலீசார் தங்கள் 'கைத்திறமையை'க் காட்டியுள்ளனர். ''கொட்டடிக் கொலை வழக்குகளில், பிரேதப் பரிசோதனை அறிக்கைதான் முக்கிய சாட்சி; பெரும்பாலான வழக்குகளில் இந்த அறிக்கை திரித்துப் புரட்டப்பட்டுள்ளது'' என உச்சநீதி மன்றம் புலம்பும் அளவுக்கு மனித உரிமைகள் 'பாதுகாக்கப்படுகின்றன'!

## ஆந்திராவின் இன்னொரு முகம்

தேவதாசியாக்குவதற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்த ஆந்திராவைச் சேர்ந்த நான்கு இளம் பெண்கள், ''சங்கா விகாஸா'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் முயற்சியினால் சமீபத்தில் காப்பாற்றப்பட்டனர். இந்த நான்கு பெண்களுள், இரண்டு பேர் ஆறே வயதான பால் மணம் மாறாத சிறுமிகள். ஆந்திராவின் தெலுங்கானா பகுதியில் உள்ள மாவட்டங்களில், இளம் பெண்களை/சிறுமிகளைப் பொட்டுக் கட்டிவிடும் பழக்கம் இன்னும் தடையின்றித் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், கிட்டதட்ட 4000 பெண்கள் தேவதாசிகளாக வாழ்க்கை நடத்தி வருவதாகவும் இவ்வமைப்பு கூறுகிறது. நிலப்பிரபுக்கள் தாங்கள் விரும்பும் பெண்களைத் தேவதாசிகளாக்கும்படி, அப்பெண்களின் பெற்றோர்களை நிர்பந்திப்பதால்தான் இந்த விபச்சாரம் தொடர்வதாக அவ்வமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

## அமெரிக்க பயங்கரவாதம்

யுகோஸ்லாவியா மீது அமெரிக்காவின் தலைமையிலான ''நேடோ'' படைகள் நடத்திய போரில் ஈடுபட்ட மேலை நாட்டு இராணுவ வீரர்களுள் சிலர், ''லுகோமியா'' என்ற புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சமீபத்தில் இறந்து போயினர்; இதையடுத்து, அந்தப் போரில் அமெரிக்க விமானப் படை, திறன் குறைந்த யுரேனியம் குண்டுகளை யுகோஸ்லாவியா மீது வீசியது அம்பலமாகிவிட்டது. இத்தாலி, போர்த்துகல், ஹாலந்து, பெல்ஜியம் நாடுகள் சொன்ன புகாரையடுத்து, ஐ.நா. மன்றம் விசாரணை நடத்தியதில், யுகோஸ்லாவியவிலுள்ள ஏழு இடங்களின் மீது 31,000 திறன் குறைந்த யுரேனியம் குண்டுகள் வீசப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. குண்டு போட்டவனே புற்றுநோய் வந்து செத்தான் என்றால், குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளான யுகோஸ்லாவிய மக்களின் கதி என்னவாயிருக்கும்? வியட்நாம், ஈராக் நாடுகளின் கதிதான் யுகோஸ்லாவியாவுக்குமா?

**யுகோஸ்லாவியா மீது திறன் குறைந்த யுரேனியம் குண்டுகளைப் போட்ட அமெரிக்காவின் பயங்கரவாதத்தைக் கண்டித்து கிரீஸ் நாட்டுத் தலைநகர் ஏதென்ஸில் நடந்த ஆர்ப்பாட்டம்.**



## நவீன வழியில் ''பெண் சிசுக் கொலை''

பெண் சிசுக்களைக் கருவிலேயே அழித்து விடுவது, தப்பி தவறி பிறந்துவிட்டால் கள்ளிப்பால் ஊற்றிக் கொன்றுவிடுவ என்பதன் தொடர்ச்சியாக, கருவில் பெண் சிசுவே உருவாகா வண்ணம் செய்யும் நவீன விஞ்ஞான வழியொன்று தில்லியில் அ வேகமாகப் பரவி வருகிறது. ஆணின் விந்தில் உள்ள பெண் சிசுவை உருவாக்கும் ''எக்ஸ்'' என்ற குரோமோசோமை அகற்றவிட்டு, ஆண் சிசுவை உருவாக்கும் ''ஒய்'' என்ற குரோமோசோமை மட்டு செயற்கை முறையில் பெண்ணின் கரு முட்டைக்குள் செலுத்துவத மூலம் பெண் குழந்தை உருவாவது தடுக்கப்படுகிறது. இந்த நவீ முறை செலவு குறைவானதாகவும், அதேசமயம் வேதனையின்றியு இருப்பதால், இந்த நவீன பெண் சிசுக் கொலை முறைக்கு ஏகப்பட் கிராக்கி. கர்ப்பப் பையில் உள்ள கருவின் குறைபாடுகளை நீக்கு தற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த விஞ்ஞான வழிமுறை, ஆண திக்க பிற்போக்குத்தனத்தால் பெண்ணுக்கு எதிராகத் திரும்ப விட்டது.

## நொறுக்குத் தீனியும் பற்றாக்குறையும்

சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்களால் அவர்களால் தலைமை தாங்கப்படும் அதிகார வர்க்கக் கமிட்டிகளா கடந்த நான்கு ஆண்டுகளில் தின்று தீர்க்கப்பட்ட நொறுக்குத் தீனிகள் குடிக்கப்பட்ட காபி, தேநீர், ஹார்லிக்ஸ், குளிர்பானங்கள் - இவை ளுக்கு ஆன செலவு மட்டும் இருபது லட்ச ரூபாய். இதில் மாநகராட் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தின்று தீர்த்தது 12 இலட் ரூபாய்; அதிகார வர்க்க கமிட்டிகள் முழுங்கியது எட்டு இலட் ரூபாய். மக்களின் வரிப்பணத்தை இப்படி வகை தொகையின்றி தின்று தீர்த்து ஏப்பம் விடும் ஆளும் கும்பல், நகர மக்கள் சுகாதா வசதி கேட்டுப் போராடும்பொழுது, பற்றாக்குறை என்றல்லவ பல்லவி பாடுகிறது!

## வர்க்க நீதி

''போ..பர்ஸ் ஊழல் விசாரணைக்காக இந்தியா வந்திருக்கு இந்துஜா சகோதரர்களை மைய புலனாய்வுக் கழகம் கைது செய்ய போவதாகச் சொன்னாலே, உலகளாவிய அளவில் நடந்து வரு அவர்கள் வியாபாரம் பாதிக்கப்படும்; கோடிக்கணக்கான டாலர்கள் நட்டமேற்படும்'' என் இந்துஜா வழிக்கறிஞர்களின் வாதத்தை ஒப்புக் கொண்டு சிறப்பு நீதிமன்றம் அவர்க ளுக்குப் பிணை வழங்கிவிட டது. போ..பர்ஸ் ஊழல் வழக்குக் குற்றவாளிகளான இந்துஜா சகோதரர்களை சிறையில் அடைத்தால், அவ களின் வியாபாரம் பாதிக்கப் படும் என அக்கறைப்படும் நீதி மன்றத்திற்கு, பல்லாயிரக் கண க்கான விசாரணைக் கைதிகள் பிணை கிடைக்காமல் சிறையில் இருப்பதால், அவ களின் குடும்பம் நாதியற்று போகும் என்பது மட்டும் புரி யாதா?





படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 16**

**இதழ் 6-7**

1 பிப். 2001 - 28 பிப். 2001

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


# "தலித்" அரசியலின் விபரீத வளர்ச்சி

அம்பேத்கருக்கு ''பாரத் ரத்னா'' விருது வழங்கி, நூற்றாண்டு விழா நடத்தி, அவரது தொகுப்பு நூல்கள் வெளியிட்டதைத் தொடர்ந்து தலித் இளைஞர்களிடையே ஏற்பட்டதாகக் கூறப்பட்ட எழுச்சி - அலை காரணமாக பல திடீர்த் தலைவர்கள் உருவானார்கள். கிருஷ்ணசாமி, திருமாவளவன், பூவை.மூர்த்தி, சந்திரகேசன், ஜான்பாண்டியன், பசுபதி பாண்டியன் - இப்படி ஒரு நீளமான பட்டியல் உள்ளது. இவர்களெல்லாம் புதிய தலைமுறை ''தலித்'' தலைவர்கள். ஒரு பத்தாண்டுகளில், கடந்த ஐந்தாண்டுகளில் வியக்கத்தக்க வளர்ச்சி கண்டுவிட்டதாக இவர்கள் உரிமை பாராட்டுகிறார்கள்.

''1997-இல் ஜுன் 30-இல் நடைபெற்ற மேலவளவு படுகொலைக்குப் பிறகு 'புதிய தமிழகம்' அழைத்த தலித் பேரணியில் கோடிக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்'' என்கிறார் கிருஷ்ணசாமி. ஓட்டுப் பொறுக்கிகளுக்குரிய தகுதியை முழுமையாகப் பெற்றுவிட்டார் கிருஷ்ணசாமி என்று தெரிகிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் தனது கட்சிப் பேரணிக்குத் திரண்டு விட்டதாகக் கூறுகிறார். இவ்வளவு பேர் திரண்டிருந்தால் சென்னையின் கதி என்னவாகி இருக்கும்!

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் ஓட்டுக் கட்சியாக சீரழிந்து போனது குறித்துக் கேட்டபோது, ''நாலு பேர் இருந்தால் புரட்சி பேசலாம், 40 இலட்சமாக வளர்ந்து விட்ட பிறகு அதற்குத் தகுந்த வடிவத்துக்கு (தேர்தல் முறைக்கு) மாறிக் கொள்ளத்தான் வேண்டும்'' என்று சித்தாந்தம் பேசுகிறார், திருமாவளவன்.

இந்த ''தலித்'' தலைவர்கள் மீது யாராவது, ஏதாவது புகார் கூறினால் தம்முடைய வியத்தகு வளர்ச்சி கண்டு பொறாமை காரணமாக அப்படிச் செய்வதாக விளக்கம் அளிக்கிறார்கள்.

ஆனால், இவர்களின் வளர்ச்சி எத்தகையது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது. புதிய தமிழகம் கட்சியின் அமைப்புச் செயலாளர் செல்வம் என்பவரது விவகாரம்.

இந்தச் செல்வம் ஒரு திடீர் பணக்கார அரசியல் கிரிமினல் என்பது தெரிந்தும் புதிய தமிழகம் கட்சியில் அவரை இணைத்துக் கொண்டு மாநில அமைப்புச் செயலாளர் பதவியும் தந்துள்ளார், கிருஷ்ணசாமி.

செல்வம், சென்னை சட்டப்பேரவை உறுப்பினர் விடுதியில் எடுபிடி ஆளாக வேலை செய்தவர். யார் யாரையோ பிடித்து, ரிசர்வ் வங்கியில் கடைநிலை ஊழியராக சில ஆண்டுகளுக்கு முன்பு வரை வேலை செய்து வந்தார். இவர் ஆளும் கட்சிகள் எதிலும் பிரமுகரும் இல்லை; அதிகாரங் கொண்ட பதவியிலும் இல்லை; கோடி கோடியாக லாட்டரிப் பரிசும் அடிக்கவில்லை. திடீரென்று ஒரு சில ஆண்டுகளிலேயே கோடீசுவரப் பணக்காரராகி, பெரும் செல்வத்தைக் குவித்துவிட்டார். இது எப்படி நடந்தது?

கோடி கோடியாக இலாபமீட்டுவதற்கான குறுக்கு வழிகளை முதலாளிகளுக்குச் சொல்லிக் கொடுத்து ஏராளமாகக் கமிஷன் சம்பாதிக்கும் தணிக்கையாளர் பாண்டியன் என்பவர், ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரான ''ஸ்பிக்'' முதலாளி முத்தையாவுக்குச் சொந்தமான ஒரு நலிவுற்ற ஆலைக்குப் பொறுப்பேற்று கோடிக் கணக்கில் இலாபமீட்டும் நிறுவனமாக்கினார். பின்னர், அந்நிறுவனப் பங்குதாரராகினார். அதையே முழு உடமையாக்கிக் கொள்ளவும் முயன்றார்.

இதனால் பாண்டியன், முத்தையாவின் பகைமையைத் தேடிக் கொண்டார். தனது தகுதிக்கு ஏற்றவரல்ல என்பதால், மனைவியை விவாகரத்து செய்து பெற்ற மகனோடு விரட்டிவிட்டார். முத்தையா, பாண்டியனின் முன்னாள் மனைவி ஆகியோர் தூண்டுதலால் சென்னையின் பிரபல கிரிமினல் ரௌடிகள் மூலம் பாண்டியனுக்குக் கொலை மிரட்டல் வந்ததாகக் கூறப்படுகிறது. தன் ''ஐ.ஏ.எஸ்.'' நண்பர் ஒருவர் மூலம் சென்னை தாதா கும்பலின் பாதுகாப்பை பாண்டியன் நாடினர். அப்போது அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியை வைத்து ''தாதா'' வேலைகள் செய்துவந்த பூவை. மூர்த்தி அறிமுகமானார். ரிசர்வ் வங்கி ஊழியராக இருந்து கொண்டே பூவை.மூர்த்தி தலைமையிலான தலித் அமைப்பின் பொதுச் செயலாளராகியிருந்த செல்வத்திடம் பாண்டியனின் பாதுகாப்பு ஏற்பாடு ஒப்படைக்கப்பட்டது. பாதுகாப்பு கொடுத்ததோடு பாண்டியனுடன் நெருக்கமாகிவிட்ட பூவை. மூர்த்தியும், செல்வமும் அவரிடமிருந்து ஆளுக்கு 4 கல்குவாரிகளை திரிசூலத்தில் பெற்றனர்.

பாண்டியனின் அதீத நம்பிக்கையைப் பெற்ற செல்வம் அவரது நிதி, சொத்துக்களைக் கையாளும் அளவு நெருக்கமானார். வாரிசு இல்லாத பாண்டியனின் சொத்துக்களை முழுமையாகச் சுருட்டிக் கொள்ளத் திட்டமிட்டார். ஏற்கனவே விவாகரத்தான பாண்டியன் தன்னிடம் வேலை செய்த பெண் ஊழியரை வற்புறுத்தி மணமுடிக்கவும் முயன்றார். இந்நிலையில் 1995-ஆம் ஆண்டு தனது வீட்டில் பாண்டியன் மர்மமாகக் கொல்லப்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

சொத்து கைநழுவிப் போய்விடும் என்பதால் கூலிக்கு ஆள்வைத்து செல்வம் அவரைக் கொன்றுவிட்டதாக போலீசுக்கு ஆதாரம் கிடைத்தது.

கொலை நடந்த அடுத்த சில மாதங்களுக்கு விறுவிறுப்பாக நடந்த விசாரணை நின்றுபோனது. கொலை நடந்து ஆறாண்டுகளாகின்றன; ஆயினும், கொலைகாரர்கள் பிடிக்கப்படாமல், வழக்கு கிடப்பில் போடப்பட்டது. ஆனால், கொலையின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் செல்வம் பெரும் பணக்காரனாகி அனைத்து வசதிகள் - மரியாதைகளோடு சமூகத்திலும் அரசியலிலும் பவனி வந்தார். சென்னை அருகே நாற்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள பண்ணை வீடு, 21 ஏக்கர் நிலம், வெளிநாட்டு இறக்குமதி லேன்சர் கார் மற்றும் ஜென் மாருதி கார்கள், சென்னை திருவான்மியூரில் முப்பது லட்சம் ரூபாய் அடுக்குமாடி வீடு, இன்னும் கோடிக் கணக்கில் செல்வம் குவித்துவிட்டார்



**செல்வம் விவகாரம் வெடித்து அம்பலப்பட்டுப் போன பீதியில் கிருஷ்ணசாமி.**

செல்வம். கல், மணல் குவாரிகள், லாரிகள் என வியாபாரம், அடியாள் - தாதா, கட்டைப் பஞ்சாயத்து வசூல் என்று பல வழிகளிலும் சட்ட விரோத, கிரிமினல் தொழில்களில் ஈடுபட்டார்.

"ரிசர்வ் வங்கியில் கிளார்க்காக உள்ள, ஒரு கோடி ரூபாய் சொத்துள்ள வாலிபருக்கு மணமகள் தேவை" என விளம்பரம் செய்தார். பெண் கொடுக்க நடந்த கடும் போட்டிக்கிடையே தி.மு. கழக தலைமை செயற்குழு உறுப்பினரின் மகளும் சென்னை மாநகராட்சி கவுன்சிலருமான உமையாளை மணம் செய்து கொண்டார். இலண்டனுக்குத் தேனிலவு போய்விட்டுச் சமீபத்தில் திரும்பினர்.

கொலை வழக்கிலும் சிக்கிக் கொண்டு, சமூக விரோத - கிரிமினல் நடவடிக்கையிலும் ஈடுபட்டுக் கொண்டு இவ்வளவு வளமாகவும் உல்லாசமாகவும் செல்வம் வாழ்வது - வளர்ந்தது எப்படி? சட்டம் - போலீசு பிடியில் சிக்கால் இருந்தது எதனால்? தாழ்த்தப்பட்ட சாதியிலும் ஒரே உட்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்கிற முறையில் சென்னை மாநகர போலீசு ஆணையாளர் காளிமுத்து உட்பட பல போலீசு - ஆட்சி அதிகாரிகளுடன் நெருக்கமான உறவு வைத்துக் கொண்டிருக்கிறார். பணபலத்தால் கிரிமினல் குற்றக் கும்பல் "தாதா"க்களை மட்டுமல்ல; பல அதிகாரிகளையும் விலைக்கு வாங்கினார். போலீசு அதிகாரிகளின் மனைவி, மகன்களையும் கவனித்துக் கொண்டார்.



**"தலித்" அரசியல் தளபதி! - திடீர் பணக்கார கிரிமினல் "தாதா" செல்வம்**

மறுபுறம், தன்னைத் "தலித்" அரசியல் தலைவராக முன்னிறுத்தி பலத்தைத் தேடிக் கொண்டார். பூவை.மூர்த்தி தலைமையிலான அம்பேத்கர் மக்கள் முன்னணியிலும் அது புரட்சி பாரதமாக அவதாரமெடுத்த போதும் அவற்றின் பொதுச் செயலாளராகவும் ஆனார். கல், மணல், குவாரி மற்றும் பிற மக்கள் விரோதத் தொழில்களில் பூவை. மூர்த்தியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது சகாக்களுடன் பிரிந்து புதிய தமிழகம் கட்சியில் இணைந்து அங்கும் அமைப்புச் செயலாளராக்கப்பட்டார். புரட்சி பாரதம் கட்சியின் மாநில மாநாட்டை நடத்தி ஜெயலலிதாவுக்கு அறிமுகமானார். கிருஷ்ணசாமியோடு போயும் அனைத்துக் கட்சி கூட்டங்களில் அவரது பிரதிநிதியாகப் போயும் முதல்வர் மற்றும் மந்திரிகளுடன் அறிமுகமானார்.

திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளில் செல்வத்துடன் கலந்து கொண்ட போலீசு ஆணையாளர் காளிமுத்து, செல்வம் வெளிநாடு செல்வதற்கு விசா, துப்பாக்கி உரிமம் ஆகியவை பெறவும், கொலை வழக்கு உட்பட பல கிரிமினல் விவகாரங்களில் இருந்து தப்புவதற்கும் உதவியதாகத் தெரிகிறது. பாண்டியன் கொலை வழக்கை விசாரிப்பதில் உறுதி காட்டிய உளவுத்துறை அதிகாரிகளை மிரட்டியும், இடமாற்றம் செய்தும் வழக்கை அவர் முடக்கி வைத்தார்.

புரட்சி பாரதத்தின் பிரமுகரான சேத்துப்பட்டு கிரிமினல் "தாதா" தங்கையாவின் விவகாரத்திலும் இப்படியே நடக்கிறது. அவர் மீதான கொலை வழக்குகள் பல ஆண்டுகளாகியும் முடக்கப்பட்டுள்ளன. கடைசியாக, தங்கையா கும்பல் புரிந்த கொலைக் குற்றத்துக்கு எதிராக ம.க.இ.க. தலைமையில் சேத்துப்பட்டு மக்கள் கொதித்தெழுந்து போராடிய போது, கொலை வழக்குகளில் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக தங்கையாவுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் குண்டர்கள் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டார்; அதற்கு ஈடுகட்டும் வகையில் போராடியவர்களில் சிலரும் குண்டர்கள் சட்டத்தில் சிறையிலடைக்கப்பட்டனர். இதுதான் கமிசனர் காளிமுத்துவின் சட்டம் - ஒழுங்கு பாணி!

தமிழ்நாடு போலீசு உளவுத்துறையில் புதிய அதிகாரிகள் பொறுப்பேற்று நிலுவையிலுள்ள வழக்குகளின் கோப்புகளைத் தூசு தட்டித் திறந்தபோது பாண்டியன் கொலை வழக்கு மீண்டும் உயிர் பெற்றது. போலீசுத் துறை கூட்டாளிகள் மூலம் தகவலறிந்த செல்வம் தலைமறைவானார். பெங்களூரிலும், சென்னையிலும் தேடிய தனிப்படை சென்னை அடுக்குமாடி குடியிருப்பில் சுற்றி வளைத்த போது, மாடியில் இருந்து குதித்து காலொடிந்தும் ஓட முயன்று துப்பாக்கி முனையில் பிடிபட்டார், செல்வம்.

செல்வம் மீதான நடவடிக்கைக்குக் காரணம் அசியல் சதிதான் என்று அவரும் கிருஷ்ணசாமியுமே ஆரம்பத்தில் விளக்கமளித்தனர். புதிய தமிழகம் கட்சியின் அமைப்புச் செயலாளரான செல்வம் லட்சக் கணக்கில் வாரி வழங்கும் புரவலராகவும் இருந்தார். சென்னையின் கோடீசுவரர்கள் வாழும் மையப் பகுதியில் லட்சக் கணக்கில் முன்பணம் கட்டி பல ஆயிரம் ரூபாய் வாட

**செல்வம் கும்பலால் சூறையாடப்பட்ட புதிய தமிழகம் கட்சி அலுவலகம்.**




படிப்பகம்

கையும் கொடுத்து கிருஷ்ண சாமி தங்கவும், கட்சி அலுவலகம் நடத்தவும் அடுக்கு மாடி வீடு ஏற்படுத்திக் கொடுத்ததே செல்வம்தான்.



செல்வத்தால் "அங்கிள்" என்று வாஞ்சையுடன் அழைக்கப்படும் கவிஞன் காளிமுத்து.

தாழ்த்தப்பட்டவர்களிலேயே ஒரு உட்பிரிவைச் சேர்ந்தவர்களின் கட்சிதான் புதிய தமிழகம் என்ற தோற்றத்தை மறைத்து மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர் என்பதற்காகவே செல்வத்தை சேர்த்துக் கொண்டு, இரண்டாம் நிலையில் வைத்துக் கொண்டார் கிருஷ்ணசாமி. அந்த உட்பிரிவு முழுவதற்கும் ஏகபோக உரிமை கொண்டாடும் திருமாவளவனுக்கு சமாளிப்பாக செல்வம் உதவுவார் என்று கிருஷ்ணசாமி நம்பினார். தனது சாதி உட்பிரிவில் பல தான்தோன்றித் தலைவர்கள் இருக்கையில் கிருஷ்ணசாமியோடு இணைந்தால் செல்வாக்குப் பெறலாம்; அதோடு சட்டப் பேரவை உறுப்பினர் என்கிற முறையில் கிருஷ்ணசாமியுடனான நெருக்கமும் அதிகம் பயன்படும் என்று செல்வம் நம்பினார்.

செல்வம் போலீசால் தேடப்பட்டு தலைமறைவாக வாழ்ந்தபோது, பல மர்மத் தொழில்களில் ஈடுபட்டு கோடி கோடியாக செல்வம் குவித்தபோது கண்டுகொள்ளாத கிருஷ்ணசாமி, அவர் கைதாகி வலுவான வழக்கு இருப்பதாக அம்பலமான பிறகு செல்வம் உட்பட அவரது கும்பலைக் கட்சியை விட்டு நீக்கினார்.

இந்நடவடிக்கை எடுக்கப்பட்ட 24 மணி நேரத்துக்குள் செல்வம் ஆட்கள் நூற்றுக் கணக்கில் திரண்டு கிருஷ்ணசாமி உருவப் பொம்மையைக் கொளுத்திவிட்டு, புதிய தமிழகம் அலுவலகத்துக்குள் புகுந்து சூறையாடி விட்டு போலீசு பாதுகாப்புடன் திரும்பினர். செல்வத்துக்கு சாதகமாக கட்சி அலுவலகத்துக்கு போலீசே சீல் வைத்தது. கிருஷ்ணசாமியின் போராட்ட மிரட்டலுக்குப் பிறகு சீல் அகற்றப்பட்டு, செல்வத்தின் ஆட்கள் கைது செய்யப்பட்டனர். அடுத்த ஒரிரு வாரங்களிலேயே பிணையில் வந்த செல்வம் ஆட்கள், அதைக் கொண்டாடக் கடையடைப்பு நடத்தி, உள்ளூர் பகுதி மக்களைத் தாக்கி நள்ளிரவுக் கலவரமும் நடத்தினர்.

**தான்தோன்றி "தலித்" தலைவர்கள் தமது அமைப்புகளில் கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் யாருமே கிடையாது என்று அறிவிக்கத் தயாரா? அப்படிப்பட்டவர்களை அமைப்பில் சேர்க்க மாட்டோம் என்று விதி செய்யத் தயாரா?**

முந்தைய தலைமுறையைச் சேர்ந்த, தமிழக அம்பேத்கர் குழுக்களின் பிரமுகர்கள், அரசு ஊழியர்களுக்கு சில பதவிகளையும் - இடமாற்றங்களையும் செய்து பிழைப்புவாத அரசியல் நடத்தினர். ஒரு சிலரே விதிவிலக்காக கிரிமினல் - அரசியல்வாதிகளாக இருந்தனர். ஆனால் இன்றைய தலைமுறை "தலித் அரசியலி"ல் செல்வம், தங்கையா, பூவை. மூர்த்தி, ஜான் பாண்டியன், பசுபதி பாண்டியன் போன்ற கிரிமினல் - அரசியல்வாதிகள் விதிவிலக்கல்ல. "தலித் அரசியல்" நடத்தும் ஏறக்குறைய எல்லா குழுக்களிலும் இம்மாதிரியானவர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதிவெறிப் படுகொலைகளும் கொடுமைகளும் முன்னிலும் மூர்க்கமாகத் தொடரும் இன்றைய நிலையில் "தலித் எழுச்சி, தலித் விடுதலை" என்று சொல்லிக் கொண்டு கிரிமினல் - அரசியல் சக்திகள் ஆதிக்கம் பெற்றிருப்பது வேதனைக்குரியது.

இவற்றினால் எங்கே "தலித் அரசியல்" விரைவில் அம்பலப்பட்டுப் போய்விடுமோ என்றஞ்சும் திருமாவளவன், மூப்பனாரைப் புரட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கும் திருமாவளவன், பொதுவில் கம்யூனிச எதிர்ப்பை மட்டுமல்ல; மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களை எதிர்த்து போகும் இடமெல்லாம் அவதூறுப் பிரச்சாரம் செய்து வருகிறார். கிரிமினல் - அரசியல்வாதிகளிடமிருந்து மட்டுமல்ல; ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களிடமிருந்தும் நன்கொடை பெறுவதை இவரும் கிருஷ்ணசாமியும்தான் துவங்கி வைத்தார்கள். சந்திரசேகன் போன்றவர்கள் அதிலேயே ஊறிப் போய்விட்டார்கள்.

இப்படிச் சொல்வது தமது வளர்ச்சிக்கு எதிரான பொறாமை, அவதூறு - சதி என்று தான்தோன்றித் "தலித்" தலைவர்கள் விளக்கமளிக்கலாம்; அல்லது வேறு எந்தக் கட்சியில்தான் கிரிமினல் குற்றவாளிகள் இல்லை என்று எகத்தாளமாகக் கேட்கலாம்; அல்லது தூய்மை, தியாகம், இலட்சியம் உள்ளவர்களை அரசியலில் தேடுவது பார்ப்பனத்தனம் என்று சாடலாம். ஆனால், இவர்களில் எவரும், தமது அமைப்புகளில் அரசியல் காரணங்களுக்காக அல்லாது சொந்த - தொழில் காரணமாக கிரிமினல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்கள் யாருமே கிடையாது என்று அறிவிக்கத் தயாரா? அல்லது அப்படி குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் தமது அமைப்பிலிருந்தால் நீக்குவோம்; இனி அப்படிப்பட்டவர்கள் யாரையும் அமைப்பில் சேர்க்க மாட்டோம் என்று விதி செய்வார்களா? இல்லை; இதற்கு மாறான கூறுகள் "தலித் அரசியலி"லேயே இருக்கிறது. சமூக விரோத - கிரிமினல் குற்றங்கள் புரிவது தவறில்லை; புரட்சிகரமான எதிர்க் கலாச்சாரம் என்று "தலித் அரசியல் கர்த்தாக்கள்" நியாயப்படுத்தியும் வலியுறுத்தியும் வந்துள்ளார்கள்.

புரட்சிகர சித்தாந்தமும், இலட்சியமும் இல்லாத பிழைப்புவாத, சீர்திருத்தவாத கொள்கை - வழிகாட்டுதல்களைக் கொண்ட அமைப்புகள் இப்படித்தான் சீரழிந்து போகும். சாதி, மதவெறி சக்திகளிடமிருந்து உழைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை இவர்களால் ஒருபோதும் விடுதலை செய்ய முடியாது. அதற்கு மாறாக, கிரிமினல் அரசியலில் ஊறிப்போன சமூக விரோத சக்திகள் எந்தச் சாதியினராக இருந்தாலும், ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து உருவானவர்களாக இருந்தாலும் தமது சுயநலனுக்காக யாருக்கும் விலை போவார்கள், தம்



மூப்பனார் நிழலில் கம்யூனிச எதிர்ப்பு. "தலித் அரசியல்" நடத்தும் திருமாவளவன்.

சாதிக்காரர்களையே படுகொலை செய்து ஆதாயம் அடையத் தயங்கமாட்டார்கள். திருவள்ளூர் அருகே கள்ளச் சாராயக் கும்பலை எதிர்த்துப் போராடிய இரு தாழ்த்தப்பட்ட பெண்கள், அதே தாழ்த்தப்பட்ட கள்ளச் சாராய வியாபாரிகளால் கொடூரமாக அடித்துக் கொல்லப்பட்டார்கள். அதே சமயம் கரூர் அருகே ஒரு அப்பாவிப் பெண் மீது சமூக விரோதிகள் - ரௌடி கும்பல் நடத்திய பாலியல் வன்முறையில் இருந்து மீட்க முயன்ற புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் செல்வராசு தன் உயிரையும் தியாகம் செய்தார்.

இப்படிப்பட்ட உறுதியான, தியாகமிகு, சித்தாந்தம், புரட்சிகர அரசியலால் ஆயுதபாணியான இயக்கம்தான் தாழ்த்தப்பட்டவர்களை விடுதலை செய்ய முடியும். இவையில்லாமல் "தலித்"துகளாலேயே நடத்தப்படும் அரசியல் இயக்கங்கள் எனப்படுபவை சீரழியவும் "தலித்"துக்களுக்கே எதிரானதாகவும்தான் சென்று முடியும் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. •

www.padippakam.com

# அமெரிக்க என்ரானின் வழிப்பறிக் கொள்ளை

ஒரு கடைக்காரன் தான் விற்கும் பொருளின் விலையை ஒன்றுக்கு இரண்டாக வைத்து விற்றால், நாம் அதைப் பகற்கொள்ளை என்போம். அந்த வியாபாரி வாடிக்கையாளன் வாங்காத பொருளுக்கும் அவனிடமிருந்து பணம் பறித்தால், கண்டிப்பாக, அது வியாபாரம் இல்லை. வழிப்பறிக் கொள்ளை தான் என்று கூறிவிடுவோம்.

அப்படியொரு வழிப்பறிக் கொள்ளை தாராளமயத்தின் விளைவாக மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்து வருகிறது. வழிப்பறிக் கொள்ளையை நடத்தி வருவது அம்மாநிலத்தில் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ''என்ரான்'' என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம்; மகாராஷ்டிர மாநில அரசோ, என்ரான் நடத்தி வரும் இந்த வழிப்பறிக் கொள்ளைக்குத் துணையாக தரகு வேலை பார்க்கிறது. என்ரானின் கொள்ளை இலாபத்திற்காக அம்மாநில மக்களை மொட்டையடிக்கிறது.

**என்ரானின் நூதனக் கொள்ளை**

மகாராஷ்டிர மாநில மின் வாரியம், ஜூன் '99 தொடங்கி என்ரான் மின் நிறுவனத்திடமிருந்து மின்சாரத்தை வாங்கி வருகிறது. அம்மாநில மின் வாரியம் இந்த மின்சாரத்திற்கு என்ரான் நிர்ணயித்துள்ள விலையைக் கொடுத்தது போக, கடந்த பதினெட்டு மாதங்களாக மாதமொன்றுக்கு 95 கோடி ரூபாயை என்ரானிடமிருந்து வாங்காத மின்சாரத்திற்காகக் கட்டி வருகிறது. அதாவது மகாராஷ்டிர மாநில மின் வாரியம் என்ரானிடமிருந்து ஒரு மாதம் ஒரு யூனிட் மின்சாரம் கூட வாங்கவில்லையென்றாலும், அது இந்த 95 கோடி ரூபாயை என்ரானுக்குக் கொடுத்தேயாக வேண்டும். இதென்னடா இது, கேள்விப்படாதக் கொள்ளையாய் இருக்கிறது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால், என்ரானோ இந்தக் கொள்ளைக்கு இட்டுள்ள பெயர் ''திறன் கட்டணம்.''

நமது நாட்டு மின்வாரியச் சட்டப்படி எந்தவொரு நிறுவனம் மின்சாரத்தைத் தயாரித்தாலும், அதன் கட்டணத்தை நிர்ணயிக்கும் உரிமை, மைய மின்சார ஆணையத்திற்குதான் உண்டு. என்ரான் விசயத்தில் இந்தச் சட்டம் அப்பட்டமாகவே மீறப்பட்டு, என்ரானே தனது மின்சாரத்தின் கட்டணத்தை நிர்ணயித்து வருகிறது. என்ரான் மின் கட்டணத்தைத் தீர்மானிக்கும் முறை, உலகத்திலேயே எந்தவொரு நாட்டிலும் பின்பற்றப்படாத ''அதிசய'' முறையாக இருப்பதோடு, எந்தவொரு வியாபார நாணயத்திற்கும் கட்டுப்படாததாகவும் இருக்கிறது.


ஒரு பொருளின் விலையை, அப்பொருளைத் தயாரிக்க ஆகும் உற்பத்திச் செலவை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிப்பதுதான் பொதுவான வழிமுறை. ஆனால், என்ரானோ, தனது மின்சாரத்தின் விலையை, உற்பத்திச் செலவோடு, திறன் கட்டணத்தையும் கூட்டிக் கொண்டு தீர்மானிக்கிறது.

அது என்ன திறன் கட்டணம் எனக் கேட்கிறீர்களா? ஒரு கடையில் போய் நீங்கள் ஒரு பொருளை வாங்குகிறீர்கள். அந்தக் கடை முதலாளி, 'நான் இம்மாம் பெரிய கடையை உனக்காகத்தான் நடத்துகின்றேன். அதனால், நீ வாங்கிய பொருளின் விலையோடு, இந்தக் கடையில் உள்ள பொருளுக்கெல்லாம் சேர்த்து, ஒரு விலையைத் தந்தாக வேண்டும்' என உங்களை மிரட்டுவதாக வைத்துக் கொள்வோம். அப்படி நீங்கள் வாங்காத பொருளுக்கும் சேர்த்துப் பணம் கொடுக்க வேண்டிய தண்டச் செலவைத் தான் என்ரான், ''திறன் கட்டணம்'' எனக் குறிப்பிடுகிறது.

என்ரான் முதல் கட்டத் திட்டத்தின் மொத்த மின்சார உற்பத்தித் திறன் 740 மெகாவாட், இந்தத் திறனுக்கான மாதாந்திரக் கட்டணம் 95 கோடி ரூபாய் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநில மின்சார வாரியம் என்ரானிடமிருந்து ஒவ்வொரு மாதமும் சராசரியாக 25 கோடியே 40 இலட்சம் யூனிட் மின்சாரத்தை விலைக்கு வாங்குகிறது. இது, என்ரானின் மொத்த உற்பத்தித் திறனோடு ஒப்பிட்டால் சரிபாதிதான். அதற்கு மேல், மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் என்ரானிடமிருந்து மின்சாரம் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை; தேவையும் இல்லை. இதற்குத் தகுந்தாற்போல் என்ரானும் தனது மொத்த உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்கிறது.

மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் மாதா மாதம் என்ரானிடமிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையோடு, என்ரானின் ஒட்டு மொத்தத் திறன் கட்டணம் 95 கோடி ரூபாயையும் சேர்த்துக் கட்டி வருகிறது. என்ரான் தனது உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தைதான் பயன்படுத்துகிறது. ஆனால், மகாராஷ்டிரா மாநில மின் வாரியத்திடமிருந்து மாதா மாதம் தனது முழு உற்பத்தித் திறனுக்கான கட்டணத்தையும் கறந்து விடுகிறது. உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளின் அடக்க விலையிலேயே, முதலாளிக்குச் சேர வேண்டிய இலாபமும் அடங்கிவிடும். என்ரான், தான் விற்பனை செய்யும் மின்சாரத்தின் விலையோடு, தனியாக திறன் கட்டணத்தையும் வசூலித்து வருகிறதென்றால், அந்நிறுவனம் இலாபத்திற்கு மேல் இலாபம் பார்த்து வருகிறது என்றுதான் இதைக் கூற முடியும்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ள என்ரான் மின் நிலையம்.



என்ரானின் மொத்த உற்பத்தித் திறனையும் மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் பயன்படுத்திக் கொள்கிறது என வைத்துக் கொண்டாலும், இந்தத் திறன் கட்டணம் என்பது, தேவையில்லாத, அநியாயச் செலவுதான். மொத்தத் திறனுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் பொழுது, இந்தத் திறன் கட்டணம், வாங்காத மின்சாரத்திற்கு, என்ரான் உற்பத்தியே செய்யாத மின்சாரத்திற்குக் கொடுக்கப்படும் தண்டத் தொகையாகி விடுகிறது. இதை வேறு மாதிரியாகச் சொன்னால், என்ரான் மின்சார உற்பத்தியே செய்யாமல், மாதா மாதம் 95 கோடி ரூபாய் இலாபம் சம்பாதித்துக் கொள்வதற்கான ஒரு


படிப்பகம்

மோசடியான வழிமுறைதான் திறன் கட்டணம் என்பது. இப்பொழுது 95 கோடி ரூபாயாக இருக்கும் இந்தத் திறன் கட்டணம், என்ரான் தனது இரண்டாவது உற்பத்தியை விற்பனைக்காகத் துவக்கும் பொழுது, சனவரி 2002-இல் 478 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்படுகிறது.

முதலாளிகள் கூறிவரும் வியாபார நாணயத்திற்குக் கூட என்ரான் நடத்தி வரும் இந்தக் கொள்ளை கட்டுப்படவில்லை. நட்டத்தில் நடக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு மானியம் கொடுப்பதை நிறுத்தச் சொல்லும் பொருளாதாரப் புலிகள் யாரும், என்ரானுக்கு அநாமத்தாகக் கொடுக்கப்படும் இந்த 'மானிய'த்தை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

டாடா மின்சார நிறுவனம் மகாராஷ்டிரா மாநில மின் வாரியத்திற்கு ஒரு யூனிட் மின்சாரத்தை இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. தேசிய அனல் மின்சாரக் கழகம் ஒரு யூனிட் மின்சாரத்தை கிட்டதட்ட ரூ. 1.80-க்கு விற்கிறது. இப்போதுள்ள நிலவரப்படி என்ரான் மின்சாரத்தின் ஒரு யூனிட் விலை ரூ. 7.00. டாடா நிறுவனமும், தேசிய அனல் மின் கழகமும் என்ரானை ஒப்பீடும் பொழுது குறைவான விலைக்கு மின்சாரத்தை விற்றபோதும், குறைந்த பட்சமாக 16 சதவீதம் இலாபம் ஈட்டுகின்றன. இதை வைத்துக் கணக்கிட்டால் என்ரான் அடிக்கும் இலாபம் கிட்டதட்ட 40 சதவீதம்.



என்ரான் கொள்ளை தொடர வேண்டுமென்பதற்காக, மகாராஷ்டிரா மாநில முதல்வரை (இடது ஓரம்) சந்தித்த அமெரிக்க தூதர் ரிச்சர்ட் செலஸ்டி.

### இந்தியாவிற்குள் ஒரு அமெரிக்கா?

என்ரான் தயாரிக்கும் மின்சாரத்தின் விலை எகிறிப் பாய்வதற்கு, திறன் கட்டணத்தைக் கூட்டி விற்பதும் மட்டும் காரணமல்ல. என்ரான் மகாராஷ்டிரா மாநிலத்தில் தொழிற்சாலையை அமைத்து, மின்சாரத்தை உற்பத்தி செய்து, மகாராஷ்டிரா மாநிலத்திற்கே விற்ற போதும் - தனக்குச் சேர வேண்டிய தொகையை அமெரிக்க டாலரில்தான் கொடுக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளது.

இதனால், டாலருக்கு நிகரான பணத்தின் மதிப்புச் சரிந்து விழும்போதெல்லாம், என்ரானின் மின்சாரக் கட்டணம் எகிறிப் பாய ஆரம்பித்து விடுகிறது. மே '99-இல், ரூ. 3.39 ஆக இருந்த ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை, தற்பொழுது ரூ. 7.00 ஆக கிடுகிடுவென உயர்ந்ததற்கு இந்த அநியாய, அடிமைத்தனமான ஒப்பந்த விதிதான் காரணம்.

''தனது முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்திக் கொண்டால், தன்னாலும் விலை மலிவாக மின்சாரம் வழங்க முடியும்'' என என்ரான் தற்பொழுது விளம்பரம் செய்து வருகிறது. என்ரானின் முழு உற்பத்தித் திறனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு மூடுவிழா நடத்த வேண்டியதுதான்! மலிவான விலையில் மின் உற்பத்தி செய்யும் அரசு நிறுவனங்களை மூடிவிட்டு, என்ரானிடம் மின்சாரத்தை வாங்கினாலும், அதன் மின் கட்டணம் டாலரில் நிர்ணயிக்கப்படுவதால், அது மலிவாகக் கிடைக்கும் என நம்புவதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.

என்ரான், தனது இரண்டாவது கட்ட மின் உற்பத்தியைத் தொடங்கிய பிறகு, அந் நிறுவனம் உற்பத்தி செய்யும் 90 சதவீத மின்சாரத்தையும் மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் வாங்கிக் கொள்வதாகக் கொண்டால், தற்போதுள்ள மின் கட்டணத்தின்படி, மின் வாரியம் மாதமொன்றுக்கு மின் கட்டணமாக 725 கோடி ரூபாயை என்ரானுக்குக் கொடுக்கும். அந்த சமயத்தில் மின் வாரியத்தின் மொத்த வருமானம் 920 கோடி ரூபாயாக இருக்கும். அதாவது, மின்வாரியத்தின் தேவையில் வெறும் 18 சதவீதத்தைத் தரும் என்ரான், மின் வாரியத்தின் வருமானத்தில் 80 சதவீதத்தை உறிஞ்சிஎடுத்துவிடும். இதனால், மாநில மின் வாரியம் மாதமொன்றுக்கு அடையக் கூடிய நட்டம் 442 கோடி ரூபாய்.

இந்த நட்டத்தை மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் தனியாக நோட்டை அச்சடித்துச் சரிக்கட்டிக் கொள்ளவில்லை. பையப் பைய மகாராஷ்டிரா மாநில மக்களின் தலையில் ஏற்றி வருகிறது. என்ரானிடமிருந்து மின்சாரத்தை வாங்கத் தொடங்கிய நான்காவது மாதம், (செப். '99) மாநில மின் வாரியத்தின் ஒட்டுமொத்த பற்றாக்குறை 1,100 கோடி ரூபாயாக உயர்ந்த பொழுது, மின் கட்டணத்தை 9.8% சதவீதம் அதிகரித்தது. ஆறு மாதம் கழித்து, மீண்டும் மின் கட்டணத்தை 20 சதவீதம் உயர்த்துவதற்கு மாநில அரசிடம் அனுமதி கோரியது.

### என்ரானின் உள்ளூர் கூட்டாளிகள்

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளாய் இருப்பவர்கள் அனைவருமே மெத்தப் படித்த மேதாவிகள்தான். அவர்கள் ஆய்வு செய்து, விசாரணை நடத்திதான் ஒப்பந்தங்கள் போடப்படுவதாகக் கூறப்படுகிறது. அப்படியானால், என்ரான் என்ற தனியொரு நிறுவனத்தினால், மகாராஷ்டிரா மாநில மின் வாரியமே குடி முழுகிப் போகும் நிலைமை ஏன் எழுந்தது?

திறன் கட்டணத்தைச் சேர்த்துதான் என்ரான் மின் கட்டணத்தை நிர்ணயிக்கிறது என்பது அவர்களின் கண்களுக்குத் தெரியாமலே போய்விட்டதா? பணத்தின் மதிப்புச் சரியும்; டாலரின் மதிப்பு உயரும்; அதனால் மின் கட்டணம் எகிறிப் பாயும் என்பதெல்லாம் அவர்கள் பேரறிவுக்கு எட்டாமலே போய்விட்டதா?

அவர்கள் அறிவுக்கு எட்டாமலே போய்விட்டது என ஒரு பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும், என்ரானை எதிர்த்த பல்வேறு அமைப்புகளும், இன்று பட்டவர்த்தனமாகத் தெரியும் என்ரானின் இந்தக் கொள்ளையை, அதிகாரிகளின், காங்கிரசு - சிவசேனா - பா.ஜ.க. கும்பலின், உச்சநீதி, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் மரமண்டைகளுக்குப் புரியும்படி புட்டுப்புட்டு வைத்த பொழுது, இவர்கள் அதைச் சாடி ஒதுக்கித் தள்ளினார்கள்; என்ரானை எதிர்த்துப் போராடியவர்களை போலீசை ஏவிவிட்டு ஒடுக்கினார்கள். இன்று, ''அய்யோ இப்படியாகி விட்டதே''எனப் புலம்புபவர்கள், முன்பு நடந்ததை மறந்து போனாலும், நாம் மறந்து விடக் கூடாது.

1993-ஆம் ஆண்டு, காங்கிரசில் இருந்த சரத் பவார் மகாராஷ்டிரா மாநில முதல்வராக இருந்தபொழுதுதான், மகாராஷ்டிராவில் என்ரான் மின் உற்பத்தி நிலையம் அமைக்கவும், அம்மாநில அரசு அதனிடமிருந்து மின்சாரம் வாங்கவும் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. என்ரானுக்கு 16 சதவீத இலாப உத்திரவாதம் அளிக்கப் பட்டது. சரத்பவாரின் நெருக்கத்தால், என்ரான், தனது திட்டத்திற்குத் தேவைப் படும் மூலதனம், மின் கட்டணம் போன்ற விவரங்களை மைய மின்சார ஆணையம் ஆய்வு நடத்த விடாமல் தடுத்தது.

www.padippakam.com

அப்பொழுது எதிர்க் கட்சியாக இருந்த சிவசேனா - பா.ஜ.க. கூட்டணி, 1995-இல் நடக்கவிருந்த தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்காக, என்ரானை எதிர்த்து மக்கள் நடத்தி வந்த போராட்டங்களுக்கு ஆதரவு தந்தது. தங்களின் கூட்டணி ஆட்சியைப் பிடித்தால், "என்ரானைத் தூக்கி அரபிக் கடலில் எறிவோம்" எனத் தேர்தல் வாக்குறுதி கொடுத்தனர். ஆனால், இந்துமதவெறிக் கூட்டணி ஆட்சியைப் பிடித்த பிறகு தேர்தல் வாக்குறுதியைத்தான் அரபிக் கடலில் வீசியெறிந்தது. என்ரானுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, அதனின் இரண்டாவது கட்டத் திட்டத்திற்கும அனுமதியளித்தது. 1996-ஆம் ஆண்டு 13 நாள் பிரதமராக இருந்த வாஜ்பாயி, என்ரானின் இலாபத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுதான் பதவி விலகினார்.

இன்று மகாராஷ்டிரா மாநில முதல்வராக இருக்கும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த விலாஸ்ராவ் தேஷ்முக், "என்ரான் ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்வோம்" என வெறுமனே ஒரு பேச்சுக்குச் சொன்னவுடனேயே, அம்மாநில மின்சக்தித் துறை அமைச்சராக இருக்கும் பதம்சிங் பாட்டில், "அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது" என என்ரானுக்கு ஆறுதல் அளித்தார். இவர், என்ரானை மகாராஷ்டிராவிற்குள் நுழையவிட்ட சரத் பவாரின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்க் கட்சியாக இருக்கும் சிவசேனா - பா.ஜ.க. கும்பலோ, இன்னும் ஒருபடி மேலே போய், "தைரியம் இருந்தால் ஒப்பந்தத்தை ரத்து செய்து பாருங்கள்" எனச் சவால் விட்டது. என்ரானால் மகாராஷ்டிரா மாநில மின்வாரியமே குடி முழுகிப் போன பின்னும், காங்கிரசு - பா.ஜ.க. சிவசேனா கும்பலின் என்ரான் விசுவாசத்தில் எந்தக் குறையும் வந்துவிடவில்லை. ஆனாலும், என்ரானிடம் மும்பய் உயர்நீதி மன்றமும், உச்சநீதி மன்றமும் காட்டிய விசுவாசத்தின் முன், இவர்களின் விசுவாசம் எம்மாத்திரம்?

என்ரானை எதிர்த்து பல்வேறு தனி நபர்களும், பல்வேறு அமைப்புகளும் தொடுத்த வழக்கில், சி.பி.எம். கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு.வும், அபய் மேத்தா என்பவரும் இணைந்து தொடுத்த பொதுநல வழக்கு குறிப்பிடத்தக்கது. இவ்வழக்கில், என்ரான் ஒப்பந்தத்தால் ஏற்படக்கூடிய பொருளாதார இழப்புகள் குறித்தும், என்ரானுக்கு ஒப்புதல் அளித்ததில் நடந்துள்ள சட்ட மீறல்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வழக்குகளை விசாரித்த மும்பய் உயர்நீதி மன்ற நீதிபதி, "இந்த வழக்குகள் எல்லாம் பொதுநல நோக்கத்தோடுதான் தொடுக்கப்பட்டுள்ளனவா?" என்ற கீழ்த்தரமான சந்தேகத்தைக் கிளப்பி, அவ்வழக்குகளைத் தள்ளுபடி செய்தார். இந்தியாவில் மூலதனமிட்டுக் காசு சம்பாதிக்க வந்த ஒரு அந்நிய நாட்டு நிறுவனத்தின் மீது நீதிபதிக்கு இருக்கும் மதிப்பு, தனது சொந்த நாட்டுக் குடிமகன்கள் மீது இல்லையென்றால், அவரை நீதிபதி என்பதைவிட, கைக்கூலி என்றே அழைக்கலாம்.

உச்சநீதி மன்றமோ "பொருளாதார விசயங்களுக்குள் நாங்கள் நுழைய மாட்டோம்" எனக்கூறி, பாதுகாப்பாக ஒதுங்கிக் கொண்டது. மேலும், "வழக்கு தாமதமாகத் தொடரப்பட்டுள்ளது. என்ரானின் திட்டப் பணிகள் ஒரு கட்டத்தை எட்டிவிட்டன. எனவே, இப்பொழுது பணிகளை நிறுத்தச் சொல்லுவது பொது மக்களின் நலனுக்கு உகந்ததல்ல" எனக் கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்தது.

நகரங்களை அழகுபடுத்துவதற்காக, ஏழைத் தொழிலாளர்களின் குடிசைகளை இடிக்கச் சொல்லி உத்தரவிடும்போது, "அந்தத் தொழிலாளர்களும் பல ஆண்டுகளாக வசித்து வருகிறார்களே; அவர்களின் உழைப்பும் நகர மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறதே" என்று ஒரு வினாடியாவது நீதிபதிகள் சிந்தித்திருப்பார்களா? ஏழைத் தொழிலாளியின் குடிசையின் மீது வராத இரக்கம், பாசம், தர்க்க வாதம், ஒரு பன்னாட்டு முதலாளியின் மீது கைவைக்க வேண்டுமென்றால், பொத்துக் கொண்டு வருகிறதே?

உண்மைகளைக் காணாவிடாமல் இந்த அதிகார வர்க்கக் கும்பலின் கண்களை எது மறைத்தது? என்ரான் வீசியெறிந்த காசாக இருக்கலாம் என்று நீங்கள் யூகித்தால், அதில் ஓரளவிற்கு உண்மையுண்டு. 1995 தேர்தலில் வென்ற கையோடு, என்ரானைத் தடை செய்த பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு, அந்நிறுவனத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தொடங்குமுன், மும்பய் உயர்நீதி மன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தது. அதில், என்ரானுடன் போடப்பட்ட ஒப்பந்தம் ஊழல், மோசடி அதிகார முறைகேடுகள் நிறைந்து இருப்பதற்கான ஆதாரங்களைக் காட்டியிருந்தது. மும்பய் உயர்நீதி மன்றமும் இந்த ஆதாரங்களை ஏற்றுக் கொண்டது. என்ரான் நிறுவனமும் தனது செலவுக் கணக்குகளில், "கல்வி அளிக்கவும், வளர்ச்சிக்காகவும் 20 மில்லியன் டாலர் (கிட்டதட்ட 80 கோடி ரூபாய்) செலவழித்திருப்பதாகக் காட்டியிருக்கிறது.

### சந்தி சிரிக்கும் இந்திய சுதந்திரம்

என்ரான் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் நமது நாட்டு மக்களை ஒட்டச் சுரண்டுவதற்கு, ஓட்டுக் கட்சிகளிடமும், அதிகார வர்க்கத்திலும் நிரம்பி வழியும் இலஞ்சம் மட்டும் காரணமல்ல; அதைவிட முக்கியமாக, நமது நாட்டில் பொருளாதார - அரசியல் அமைப்பின் அடிப்படையாக இருக்கும் ஏகாதிபத்திய அடிவருடித்தனம்தான், அரைக் காலனிய தன்மைதான் என்ரானின் வரைமுறையற்ற கொள்ளைக்குச் சாதகமாக இருக்கிறது.

இதனால்தான் என்ரானைத் தண்டிக்கத் துணியாத மகாராஷ்டிரா மாநில அரசு, என்ரானின் கொள்ளையால் மகாராஷ்டிர மாநில மின் வாரியம் அடைந்து வரும் நட்டத்தையே காரணமாகக் காட்டி, மின்துறை முழுவதும் தனியார்மயமாக்கத் துடிக்கிறது.



மாநில மின்வாரியங்களைத் தனியார்மயமாக்கக் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார மசோதாவை எதிர்த்து சென்னையில் நடந்த தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்களின் ஊர்வலம்.

மகாராஷ்டிராவில் என்ரான் நுழைந்திருப்பது போலவே, ஆந்திராவில் இந்துஜா மின் நிறுவனம் நுழைந்திருக்கிறது. கர்நாடகாவில் கோஜெண்டிரிக்ஸ் என்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனம் நுழைந்துள்ளது. தமிழ்நாட்டில், நெய்வேலியில் ஜீரோ யூனிட்டும், ஜெயங்கொண்டத்தில் ரிலையன்ஸும் மின் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளன. அதாவது, இன்று என்ரானால் மகாராஷ்டிரா மாநில மின் வாரியம் போண்டியாகி நிற்பதைப் போல, நாளை, இம்மாநிலங்களின் மின் வாரியங்களும் போண்டியாகி நிற்கும். இன்று, என்ரானின் கொள்ளை இலாபத்திற்கு மகாராஷ்டிரா மாநில மக்கள் பலியாக்கப்படுவதைப் போல, நாளை, இந்துஜா, கோஜெண்டிரிக்ஸ், ரிலையன்ஸ் நிறுவனங்களின் இலாப வேட்டைக்காக, ஆந்திர, கர்நாடக, தமிழக மக்கள் பலியாக்கப்படுவார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

நாளையல்ல, இப்பொழுதேகூட இந்த அபாயம் மற்ற மாநில மக்களைக் கவ்விக் கொள்ளலாம். ஏனென்றால், என்ரான் தயாரிக்கும் மின்சாரத்தைப் பிற மாநிலங்களையும் வாங்க வைப்பதன் மூலம், இந்தச் சிக்கலில் இருந்து தப்பிவிட ஆளும் கும்பல் முயலுகிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்து வரும் என்ரானின் கொள்ளையை, 'தேசிய'க் கொள்ளையாக மாற்றும் நயவஞ்சகத் திட்டம்தான் இது.

மேலும், மேலும் தாராளமயப்படுத்தினால்தான் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவிற்குள் மூலதனத்தைக் கொண்டு வந்து கொட்டும் என்று தாராளமயத்தின் ஆதரவாளர்கள் பசப்பி வருகிறார்கள். ஆனால், தாராளமயத்தின் உண்மை முகத்தை, இந்தத் தாராள சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் நமது நாட்டின் செல்வத்தைக் கொள்ளையடித்துப் போவதை, என்ரான் விவகாரம் பளிச்செனப் படம் பிடித்துக் காட்டிவிட்டது.

என்ரான் மின் நிறுவனத்தின் மொத்த மூலதன மதிப்பு 9,000 கோடி ரூபாய். இந்த 9,000 கோடி ரூபாயையும், என்ரான் அமெரிக்காவில் இருந்து டாலராகக் கொண்டு வந்து கொட்டவில்லை. நமது நாட்டின் அரசு வங்கிகளிடமிருந்து கடன் வாங்கியும், மகாராஷ்டிரா மாநில மின் வாரியத்தைப் பங்குதாரராகச் சேர்த்துக் கொண்டும்தான் மூலதனத்தைத் திரட்டியது. வெறும் 6,500 கோடி ரூபாயை மூலதனமாகக் ''கொண்டு'' வந்துள்ள என்ரான், அடுத்த இருபது வருடங்களில் இந்தியாவில் இருந்து அள்ளிக் கொண்டு செல்லப் போகும் தொகை 1,74,000 கோடி ரூபாய்.

ஒரு பன்னாட்டு நிறுவனம் அள்ளிச் செல்லும் தொகையே இவ்வளவு என்றால், எத்துணை பன்னாட்டு நிறுவனங்கள், எத்துணை ஆண்டுகளாக இந்தியாவில் இயங்கி வருகின்றன. அவை அள்ளிச் சென்றுள்ள/செல்லவுள்ள தொகையைக் கணக்கிட்டால்... அந்த நினைப்பே மலைப்பை ஏற்படுத்தி விடுகிறது.

இப்பொழுது சொல்லுங்கள் இந்தியா வறிய நாடா! இல்லை, ஏகாதிபத்தியங்களின் கொள்ளையால் வறுமை படுகுழிக்குள் தள்ளப்பட்ட மக்கள் நிறைந்த நாடா?

இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் ரிச்சர்ட் செலஸ்டி, ''என்ரான் பிரச்சினையில் இந்திய அரசு நடந்து கொள்ளும் விதத்தைப் பொருத்துதான், அமெரிக்க மூலதனம் இந்தியாவில் நுழையும்'' என எச்சரிக்கிறார். ஏகாதிபத்தியவாதிகளுக்கு ''என்ரான்'' இந்தியாவை மறுகாலனியாக்குவதற்கான குறியீடாக உள்ளது. நாம், ''என்ரானை'' இம்மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராக மக்களைத் திரட்டும் குறியீடாகக் கொள்வோம்.

● ரஹீம்

## *அதிராம்பட்டினம்:*

# அயோத்தி வழியில் ஓர் ஆக்கிரமிப்பு

தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம் இசுலாமியர்கள் அதிகமாக வசிக்கும் சிறு நகரம். அவ்வூரிலுள்ள இசுலாமியர் ஒருவர் இருபது ஆண்டுகளுக்கு முன் தனக்குச் சொந்தமான தென்னந்தோப்பில் காவலுக்காக கோனார் சாதியைச் சேர்ந்த ஒருவரைக் குடியமர்த்தினார். அத்தோப்பை ஒட்டி, பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான வாய்க்காலுக்கு அருகில் இருந்த மாமரம் நெடுநாட்களாகவே அந்த இசுலாமியரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. அம்மரத்திலிருந்து அடிக்கடி மாங்காய்கள் திருடு போவதைத் தடுக்க ஒரு ஆணி அடித்து, அதற்கு மாலை போட்டு அம்மரத்தில் சாமி இருப்பதாகக் காவலுக்கு இருந்தவர் சொல்லி வந்தார். நாளடைவில் அதிராம்பட்டினம் வழியாக தொக்காலிக்காடு கிராமத்துக்குப் போவோரும் வருவோரும் அம்மரத்தைக் கும்பிட்டுச் செல்வது வாடிக்கையானது.

இந்நிலையில் அப்பகுதி வீட்டுமனைகளாக மாற்றப்படவே, மாமரம் வெட்டப்பட்டது. ஆனால், தொக்காலிக்காடு கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் தி.மு.க. நகரவைத் தலைவர் செயபால் தலைமையில் இந்து முன்னணி வெறியர்கள், மாமரம் இருந்த இடத்தை இந்துக் கோயிலுக்கான இடம் என்று கூறி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கின்றனர்.

முதல் கட்டமாக மரமிருந்த இடத்தில் ஒரு வேல் நடப்படுகிறது. அடுத்த சில நாட்களில் வேல் காணாமல் போகிறது. அதன்பிறகு சூலமும் உண்டியலும் வைக்கப்படுகிறது. அதுவும் சில நாட்களில் காணாமல் போகிறது. வேலும், சூலமும், உண்டியலும் காணாமல் போனதற்கு முசுலீம்கள் தான் காரணம் என்று போலீசில் புகார் கொடுத்துவிட்டு, அப்பகுதியைச் சுற்றிக் கம்பிவேலி போட இந்துமத வெறியர்கள் முயற்சி செய்தனர். முசுலீம்களின் எதிர்ப்பின் காரணமாக பெயரளவில் சமரசப் பேச்சு வார்த்தை நாடகமாடினார் போலீசு அதிகாரி மாரிமுத்து. அவரது ஒத்துழைப்போடு திடீரென 7.05.99 இரவு கம்பி வேலி கட்டப்பட்டு அதனுள்ளே குத்து விளக்கும், சூலமும் வைக்கப்பட்டன. இது பற்றி கிராம வளர்ச்சி அதிகாரி வடமலைராசு முன்னிலையில் நடந்த இரு தரப்பு பேச்சு வார்த்தைபடி பொதுத்துறைக்குச் சொந்தமான அந்த இடத்தில் வேறெந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாதென தீர்மானிக்கப்பட்டது. தி.மு.க. உட்பட அனைத்து கட்சிகளும், பொதுமக்களும் இதை ஒப்புக் கொண்டனர். பிரச்சினை இதோடு முடியவில்லை.

முன்னாள் தி.மு.க. நகரவைத் தலைவர் செயபால் மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த வீரப்பன் தலைமையில் இந்து முன்னணியினர் தொடர்ந்து அந்த இடத்தில் இரவோடிரவாக முனீஸ்வரன் சிலை வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதையறிந்த முசுலீம்கள் மீண்டும் போலீசிடம் புகார் கொடுக்க, பதட்டமான சூழ்நிலையில் போலீசே அச்சிலையைக் கைப்பற்றி, தெக்காலிக்காடு சிவன் கோயிலில் வைத்தனர்.

இச்சம்பவத்தை முன்னிறுத்தி செயபாலும், வீரப்பனும் தொடர்ந்து முசுலீம் எதிர்ப்புப் பிரச்சாரத்தைப் பொது மக்களிடையே கட்டவிழ்த்துவிட்டனர். மேலும் குறிப்பிட்ட அந்த இடத்தில் எப்படியும் சிலை வைத்தே தீருவோமென்று இருவரும் அச்சுறுத்தி வந்ததையொட்டி போலீசாரால் கைது செய்யப்பட்டனர். பிணையில் வெளி வந்ததும் 19.05.2000 அன்று கோயிலில் திருவிழா நடத்துவதாகச் சொல்லி முசுலீம்களுக்குச் சொந்தமான தென்னந்தோப்புகளில் இளநீர், தேங்காய்களைச் சூறையாடினர். அதோடு முசுலீம்களின் தோப்புகளில் 'இந்துக்கள்' தேங்காய் வெட்டக்கூடாது என்று தடுத்தும் உள்ளனர். இந்நிலையில் பட்டுக்கோட்டையில் இந்து முன்னணியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இராம. கோபாலன் கம்பிவேலியிட்டு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட அதே இடத்தில் விரைவில் சிலை நிறுவப்படுமென அறிவித்தார். அதற்கென குழுவும் ஏற்பாடு செய்து பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அயோத்தியில் பாபர் மசூதி இருக்கும் இடத்தில்தான் இராமர் கோயில் கட்டுவோம் என்று வெறியாட்டம் போடும் இந்துமதவெறி பாசிஸ்டுகள், இங்கும் பெரும்பான்மை முசுலீம்கள் வாழும் பகுதியில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் கோயில் கட்ட துடிக்கின்றனர். அதிராம்பட்டினத்தில் உள்ள பெரும்பாலான முசுலீம்களோ தி.மு.க. அரசாங்கத்தை சிறுபான்மையினர் நலம் பேணும் அரசாங்கமென நம்புகின்றனர். இங்குள்ள தி.மு.க. கட்சிக்காரர்களே கூட முன்னாள் தி.மு.க. நகரவைத் தலைவர் செயபாலின் நடவடிக்கைகளுக்கு உடன்படவில்லை. ஆனால், பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்துள்ள தி.மு.க. அரசாங்கமோ இந்து மதவெறியர்களின் மேல் நடவடிக்கை எடுக்கத் திராணியற்று வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளது. இனி மதங்களைத் தாண்டி உழைக்கும் மக்களாய் ஓரணியில் திரண்டு இந்துமத வெறியர்களை வீழ்த்துவதைத் தவிர இதுபோன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லை.

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**வேதாரண்யம்.**


படிப்பகம்

# தியாகி லீலாவதி குடும்பம்: மறந்தது துரோகக் கட்சி

**ம**துரை லீலாவதி - என்ற பெயர் நினைவிருக்கிறதா? மதுரை வில்லாபுரம் பகுதி மக்களிடம் மாநகராட்சி குடிநீருக்காக கட்டாய மாமூல் வசூலித்து வந்த தி.மு.க. ரவுடிகளை எதிர்த்து போராடி, குடிநீர் குழாய் அமைக்கப் பாடுபட்டு, அந்த ரவுடிகளாலேயே 23.4.1997 அன்று பட்டப் பகலில் வெட்டிக் கொல்லப்பட்ட வீராங்கனை! வில்லாபுரம் பகுதியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை மாநகராட்சியின் உறுப்பினர்; சி.பி.எம். கட்சியின் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்; மக்களின் நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்ட முன்னுதாரணமிக்கப் போராளி!

மதுரையில் தன் கட்சிக்காரன் செய்த இப்பாவச் செயலுக்கு சம்பளமாக தி.மு.க. தலைவர் கருணாநிதி ரூ. 50,000-ஐக் கொடுக்க முன்வந்தார். அதைக் கையால் கூடத் தொடாமல் வெறுத்தொதுக்கியவர்தான் லீலாவதியின் கணவர் குப்புசாமி. மறைந்த லீலாவதியின் மூன்று மகள்களில் ஒருவருக்கு வேலை போட்டுத் தருவதாக மதுரை மாநகராட்சி அறிவித்தது. ''பதவி சுகத்துக்காக எங்கள் தாயின் மரணத்துக்கு விலை பேச மாட்டோம்!'' என்று இதையும் மறுத்து விட்டனர் லீலாவதியின் குடும்பத்தினர்.

இத்தனைக்கும் லீலாவதி குடும்பம் தினக்கூலி வேலை செய்யும் ஏழைக் குடும்பம்தான். இறக்கும்வரை லீலாவதி ஒரு தறியடிக்கும் தொழிலாளி. கணவர் குப்புசாமி, சில்வர் பட்டறையில் வேலை செய்யும் கூலிக்காரர். இன்று வரை குடியிருக்க குடிசை வீடு கூட சொந்தமாக இல்லாதவர்கள். குடும்பமே சி.பி.எம். கட்சியின் செயலூக்கமிக்க ஆதரவாளர்கள். பணத்துக்கும் பதவிக்கும் விலை போகாத தன்மானமிக்க இந்தப் பாட்டாளி வர்க்கக் குடும்பத்துக்கு சி.பி.எம். கட்சி செய்து வரும் துரோகம் அளவிட முடியாதது.

லீலாவதி படுகொலைக்குப் பின், அவரது குடும்ப நல நிதிக்காக தமிழகம் முழுவதும் வசூல் வேட்டையாடியது, சி.பி.எம். கட்சி. வசூலான தொகை ஏறத்தாழ ரூ. 23 லட்சத்தைத் தாண்டியது. இதன் பின்னர் 17.6.97 அன்று மதுரையில் நடந்த லீலாவதி நினைவுக் கூட்டத்தில், சி.பி.எம். கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினரான என். வரதராசன் பேசும் போது, நலநிதியிலிருந்து சுமார் நாலரை லட்ச ரூபாய் செலவில், மறைந்த லீலாவதி குடும்பத்துக்குப் புதிதாக இடம் வாங்கி வீடு கட்டிக் கொடுப்பது என்றும், குடும்பப் பராமரிப்புக்காக இரண்டு லட்ச ரூபாயை குப்புசாமி பெயரில் வங்கியில் சேமிப்பு முதலீடாகப் போடுவது என்றும் மேலும் மூன்று மகள்களின் திருமணச் செலவுக்காக தலா ரூ. 50,000 வீதம் வங்கியில் வைப்புத் தொகையாகப் போடுவது என்றும் பகிரங்கமாக அறிவித்தார். இது தவிர, லீலாவதி வசித்த வில்லாபுரத்தில் அவர் நினைவாக மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டு அது பெண்களுக்கான தொழிற் பயிற்சி அளிக்கும் மையமாக இயக்கப் படும் என்றும் பரபரப்பாக அறிவித்தார்.

ஆனால், மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் ஓட்டுக் கட்சி அரசாங்கங்களின் மக்கள் நலத்திட்ட அறிவிப்புகளைப் போலவே, சி.பி.எம். கட்சியின் அறிவிப்பும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. மூன்று மகள்களின் திருமணச் செலவுக்காக தலா ரூ. 50,000 வீதம் வங்கியில் வைப்புத் தொகை போடப்பட்டுள்ளது. வில்லாபுரம் அருகில், லீலாவதி குடும்பத்தினருக்கு வீடு கட்டிக் கொடுக்க ஒன்றரை சென்ட் மனை வாங்கியுள்ளனர். ஆனால் இன்று வரை வீடு கட்ட எந்த ஏற்பாடும் காணப்படவில்லை. ஆனால் இதே பகுதியில் கட்சி அலுவலகத்திற்காக தனியே வீட்டு மனை வாங்கி, கட்டிட வேலையும் முடிந்து அலுவலகமும் இயங்கி வருகிறது.

அதேசமயம் லீலாவதி குடும்பமோ இன்னமும் வாடகை வீட்டில்தான் குடியிருக்கிறது. மணிமண்டபம் கட்ட இடம் வாங்கி, அதில் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித் வந்து அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றதோடு சரி; அதன் பிறகு இன்றுவரை எதுவும் நடக்கவில்லை. அதுபோலவே, குப்புசாமி பெயரில் 2 லட்ச ரூபாயை வங்கியில் வைப்புத் தொகையாக போடுவது என்பதும் நடக்கவில்லை. ஆனால், இதற்கான வங்கி வட்டித் தொகை என்று மாதம் ரூ. 1,800 மட்டும் கட்சியே கொடுத்து வருகிறது. அப்படியானால் வசூலான தொகையான 23 லட்ச ரூபாய் என்ன ஆனது? லீலாவதி குடும்ப நலத்துக்காக கட்சி அறிவித்த உதவித் திட்டங்களை இன்று வரை முழுமையாகச் செய்து முடிக்காததற்குக் காரணம் என்ன? எல்லாம் கட்சித் தலைமைக்கே வெளிச்சம்!


மக்கள் சேவையில் மடிந்த வீராங்கனை லீலாவதி

லீலாவதி படுகொலைக்குப் பின் நடந்த 1998 நாடாளுமன்றத் தேர்தலில், மதுரை தொகுதியில் சி.பி.எம். கட்சி சார்பாக பிரச்சாரத்தின்போது லீலாவதியின் பிள்ளைகள் மற்றும் கணவரை முன்னிறுத்தி மக்களின் அனுதாபத்தை ஓட்டுக்களாக்கி வெற்றியும் பெற்றனர். அண்மையில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான பிரச்சார இயக்கத்தின் போது கூட, லீலாவதியின் படத்தை மாட்டிக் கொண்டு மாநிலம் முழுக்க வாகனங்களில் சுற்றினர். தேர்தலுக்கு லட்சக்கணக்கில் செலவழித்த பின்னர் தேர்தல் முடிந்த பிறகு மதுரை மாநகருக்கும் புறநகர் மாவட்டத்துக்கும் என இரண்டு ''டாடா சுமோ'' கார்களைக் கட்சி வேலைக்காக வாங்கியுள்ளனர்.

தேர்தல் பிரச்சாரத்துக்கும் ஓட்டுப் பொறுக்குவதற்கும் லீலாவதி குடும்பம். ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள் ஊர் சுற்ற உல்லாச கார்கள். ஆனால் கட்சிக்கு உழைத்து உயிரை விட்ட ஒரு போராளியின் குடும்பமோ நாதியற்றுக் கிடக்கிறது. தனது கட்சிக்காகப் பாடுபட்ட ஒரு தியாகியின் குடும்பத்துக்குத் துரோகம் செய்து கொண்டே, அந்தத் தியாகத்துக்கு மட்டும் உரிமை பாராட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்குவது அயோக்கியத்தனம் இல்லையா? லீலாவதி குடும்ப நலநிதி என்று தமிழகமெங்கும் வசூலித்த தொகையில் அற்பத் தொகையை மட்டும் அக்குடும்பத்துக்குக் காட்டிவிட்டு, பெருந்தொகையைக் கட்சியே கணக்குக் காட்டாமல் வைத்துக் கொள்வது நிதியளித்த உழைக்கும் மக்களுக்குச் செய்யும் துரோகம் இல்லையா?

இது மட்டுமா? லீலாவதி இறந்தபின் அவரது கணவர் குப்புசாமியும் மூத்த மகள் கலாவதியும் மூன்று வருடங்களாக கட்சியில் முழு நேர ஊழியர்களாக வேலை செய்துள்ளனர். ஆனாலும் அக்காலத்தில் அவர்களது பராமரிப்புச் செலவுக்காகக் கட்சியிலிருந்து சல்லிக் காசு கூடத் தரவில்லை. குப்புசாமி பெயரில் போடப்பட்டுள்ளதாக கூறப்படும் வைப்புத் தொகைக்

www.padippakam.com

கான வட்டி என்ற பெயரில் கட்சியே அளித்து வந்த தொகையான ரூ. 1800 -இல்தான் மொத்த குடும்பமே இயங்கி வந்துள்ளது.

வில்லாபுரத்தில் லீலாவதி குடும்பத்தி னரைப் பற்றி நாங்கள் விசாரித்தபோது ''அவர்கள் இப்போது எங்கே இருக்கி றார்கள் என்றே தெரியவில்லை'' என்றனர். வேறு சிலர், ''அவர்கள் சென்னையில் இருப் பதாகக் கேள்விப்பட்டோம்'' என்றனர். இட்லி விற்கும் ஒரு மூதாட்டி, ''அவுங்களை கட்சிக்காரங்க எங்கேயோ பாதுகாப்பா வெச்சிருக்காங்களாம்! அந்த அம்மா எங்க ளுக்காகத்தான் பாடுபட்டு உசிரை விட்டுச்சு. எங்களைவிட இந்தக் கட்சிக்காரனுங்க அந்தக் குடும்பத்தைக் காப்பாத்திப்புடுவாங் களா?'' என்று குமுறினார்.

லீலாவதி இறந்த பின்னர் அவர் போராடி வந்த குடிநீர் குழாய் இணைப்பு வசதி வில்லாபுரத்துக்கு வந்தது. அப்பகுதிவாழ் பெண்கள் அனைவரும், தாங்கள் குழாயில் பிடித்த முதல் குடத்து நீரை லீலாவதி கொல்லப்பட்ட இடத்தில் ஊற்றி அஞ்சலி செலுத்தி அந்த இடத்தையே குளமாக்கி விட்டனர். பகுதிவாழ் உழைக்கும் மக்க ளிடம் எல்லையில்லா அன்பையும் ஆதர வையும் பெற்ற லீலாவதியின் குடும்பத்தை, அப்பகுதி மக்களுக்கே தெரியாமல் ஒளித்து வைத்துள்ளது சி.பி.எம். கட்சி. பாதுகாப்புக் காக இடம் மாற்றி வைத்துள்ளோம் என்கி றார்கள் கட்சி அணிகள். மக்கள் தான் உண்மையான இரும்புக் கோட்டை; உழைக்கும் மக்கள்தான் போராளிகளுக்கும் அவர்களது குடும்பத்துக்கும் உண்மையான பாதுகாப்பு - இவை கம்யூனிச ஆசான்கள் கற்றுத் தந்த அரிச்சுவடி. ஆனால் சி.பி.எம். கட்சியோ ஒளித்து வைப்பதுதான் பாது காப்பு என்று புது அரிச்சுவடியை எழுதுகி றது.

ஓட்டுப் பொறுக்குவதற்காக தமிழ்நாடு முழுவதும் ஆள்திரட்டும் சி.பி.எம். கட்சி, லீலாவதியைக் கொன்ற ரவுடிக் கும்பலை முறியடிக்க தொண்டர் படையைத் திரட்ட முடியாதா? பிச்சை எடுக்கும் போராட்டம், அரை நிர்வாணப் போராட்டம், சிரிக்கும் போராட்டம், ஒப்பாரி வைக்கும் போராட்டம் - முதலானவற்றுக்கு மட்டும் தான் செம்படைத் தொண்டர்களா?

ரவுடிக் கும்பலுக்கு எதிராக தனது கட்சித் தொண்டர்களைத் திரட்டி, பகுதிவாழ் உழைக்கும் மக்களின் ஆதரவோடு ரவுடிக் கும்பலை அப்பகுதியிலேயே முறியடித்து முடமாக்கியிருந்தால் லீலாவதி குடும்பம் பாதுகாப்பாக வாழ்ந்திருக்க முடியும். உழைக்கும் மக்களும் ரவுடிகளின் அட்டகா சத்திலிருந்து மீண்டு நிம்மதியடைந்திருப் பார்கள். ஆனால் இது சி.பி.எம். கட்சிக்குத் தீவிரவாதப் பாதையாகத் தெரியும். வில்லா புரம் ரவுடிக் கும்பலை எதிர்த்தால் அது கள்ளர் சாதிப் பகையாக வளரும்; பிறகு கட்சிக்குள்ளேயே சாதி மோதல் ஏற்படும்; கட்சிக்குள்ளேயே சாதி கோஷ்டிகள் பெருகி கட்சியே நொறுங்கிவிடும்; கடைசியில் கள்ளர் சாதி ஓட்டுக்களே கட்சிக்குக் கிடைக் காமல் போய்விடும். இதனால்தான் ரவுடி களை முறியடித்து முடமாக்கும் போராட்ட வழியைத் தவிர்த்துவிட்டு, லீலாவதி குடும் பத்துக்குப் பண உதவி செய்து, அதன் மூலம் அவர்களைக் கட்சியில் தக்கவைத்துக் கொள்வது, தியாகி லீலாவதியின் படத்தைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவது என்ற பிழைப் புவாத வழியை சி.பி.எம். கட்சி தெரிவு செய்துள்ளது.

லீலாவதியின் படுகொலையைப் பற்றி நீதிமன்றத்தில் சாட்சியமளித்த பாண்டி, செல்வம் ஆகிய கட்சி ஊழியர்களும் லீலா வதி குடும்பத்தைப் போலவே, கட்சியின் ஆதரவு இன்றி நிர்க்கதியாய் விடப்பட்டுள் ளனர். கொலையாளிகள் இப்போது ஆயுள் தண்டனை பெற்று சிறையில் உள்ளனர். இந்த ரவுடிகள் நாளை விடுதலையாகி வெளியே வந்தால், மீண்டும் லீலாவதி குடும்பமும் சாட்சியமளித்தவர்களும் தாக்கப்படும் அபாயம் உள்ளது. அப்போது சி.பி.எம். கட்சி இவர்களை எப்படிப் பாது காக்கப் போகிறது?

மக்கள் போராட்டத்தில் உயிர்த் தியாகம் என்பது தவிர்க்க முடியாதது. அறுவ டையின் போது நெல்மணிகள் சிதறத்தான் செய்யும் என்பதை நன்கு தெரிந்தேதான் ஒரு கம்யூனிஸ்டு தன்னை போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்கிறான். எனவேதான் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்யும் ஒரு கம்யூனிஸ்டு, தான் இறந்தபின் தனது குடும்பத்துக்குப் பணமும் பதவியும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் போராட் டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வ தில்லை. மாறாக, தான் ஏற்றுக் கொண்ட இலட்சியத்தைத் தனக்குப் பின்னும் தனது குடும்பமும் சக தோழர்களும் போராடி வெல்வார்கள் என்ற உறுதியான எதிர்கால நம்பிக்கையுடன்தான், ''புரட்சி ஓங்குக!'' என்று முழங்கிக் கொண்டே உயிர் விடவும் துணிந்து நிற்கிறான்.

ஆனால் கம்யூனிசப் பாரம்பரியத்துக்கு மாறாக புரட்டல்வாத துரோகக் கட்சியான சி.பி.எம். பிழைப்புவாத அடிப்படை யில்தான் சிந்திக்கிறது; செயல்படுகிறது.

போலீசு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட் டோருக்கும், கோரமான விபத்து, ரவுடிகள், சாதி - மத வெறியர்களால் கொல்லப்பட் டோருக்கும் ஓட்டுக் கட்சி அரசாங்கங்கள் கருணைத் தொகையும் நிவாரண உதவியும் செய்வதைப் போலத்தான், லீலாவதி விவகா ரத்திலும் சி.பி.எம். கட்சி செயல்படுகிறது.

கட்சியின் மீதும் புரட்சியின் மீதும் ஒரு ஊழியர் பற்றுக் கொள்ள வைக்கும் வழி முறை இதுதானா? அல்லது லீலாவதியைக் கொன்ற ரவுடிக் கும்பலுக்கும் அதன் புரவ லர்களான ஓட்டுக் கட்சிகளுக்கும் எதிராக மக்களைத் திரட்டிப் போராடுவது வர்க்க உணர்வை வளர்க்குமா?

இது ஒருபுறமிருக்கட்டும். தியாகி லீலா வதி விவகாரத்தில் குடும்ப நலநிதி வசூ லித்து மூன்றாண்டுகளுக்கு மேலாகியும் பொது மக்களிடம் அறிவித்தபடி ஏன் இன்னமும் வீடு கட்டித் தரவில்லை? லீலாவ தியின் கணவர் குப்புசாமி பெயரில் 2 லட்ச ரூபாயை வங்கியில் வைப்புத் தொகை யாகப் போடாமல் கட்சியே அத்தொகையை வைத்துக் கொண்டு வட்டியாக மட்டும் மாதம் ரூ. 1,800 கொடுத்துவரக் காரண மென்ன? மணிமண்டபம் கட்டத் தாமதம் ஏன்? வசூலான 23 லட்ச ரூபாய்க்கான கணக்கு என்ன? 1998 நாடாளுமன்றத் தேர்தல் செலவுக்கு இத்தொகை முறைகே டாகப் பயன்படுத்தப்பட்டதா? கட்சித் தலை வர்கள் உல்லாசமாக ஊர்சுற்ற இரண்டு ''டாடா சுமோ'' கார்கள் லீலாவதி குடும்ப நல நிதியிலிருந்து வாங்கப்பட்டதா? - ஆகிய கேள்விகளுக்கு சி.பி.எம். கட்சி ஒளிவு மறைவு இல்லாமல் நேர்மையாக கட்சி அணிகளிடமும் பொது மக்களிடமும் பதில் சொல்லியாக வேண்டும்.

இது எங்கள் கட்சியின் உள்விவகாரம்; இதைக் கேட்க நீங்கள் யார்? என்று விதண் டாவாதமாகவோ அல்லது ''நாய்களின் குரைப்பு'', ''பேய்களின் ஓலம்'' என்று தனது வழக்கமான அவதூறு பாணியில் பதில ளித்து தப்பிக்க நினைத்தால், ''கம்யூனிஸ்டு'' என்ற மகத்தான சொல்லைப் பயன்படுத்தும் தகுதி உங்களுக்கு இனி இல்லை என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்படும்.

— பு.ஜ. செய்தியாளர்கள், மதுரை, தேனி மாவட்டங்கள்.



**தேர்தல் பிரச்சாரத்துக்கும் ஓட்டுப் பொறுக்குவதற்கும் தியாகி லீலாவதி குடும்பம்! கட்சித் தலைவர்கள் ஊர் சுற்ற உல்லாச கார்கள்! இதுதான் கம்யூனிசப் பாரம்பரியமா?**

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

கடந்த அக்டோபர் 20 - 23 தேதிகளில் இந்தியக் கல்லுளிமங்கர்களின் சிறப்பு மாநாடு கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. தாங்கள்தாம் உலகமகா கல்லுளிமங்கர்கள் என்று அந்த மாநாட்டில் பிரகடனம் செய்யாத குறைதான். "இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்)" கட்சி என்ற பெயரில் இந்தக் கல்லுளிமங்கர்கள் ஒரு பிழைப்புவாத இயக்கம் நடத்துகிறார்கள். இவர்கள் தங்களது நீண்டகால போர் தந்திரத்துக்கு வழிகாட்டும் பழைய திட்டத்தைக் காலத்துக்கேற்ப மேம்படுத்தி, ஒருமனதாக நிறைவேற்றினார்கள்.

இம்மாநாட்டில் நிறைவேறிய திட்டத்தின் சிறப்பு குறித்து, இந்தக் கல்லுளிமங்கர்களின் இளைய திலகம், நாளைய நம்பிக்கை நட்சத்திரம் சீதாராம் யெச்சூரி ஆற்றிய உரை முக்கியமானது. அவர் ஆற்றிய சிறப்புரையின் தலைப்பு என்னவோ, "மக்கள் ஜனநாயகத்தை நோக்கி முன்னேறு! சோசலித்துக்கான இந்தியப் பாதை" என்பதாக இருந்தது. நாடாளுமன்ற செக்குமாடுகளான் இவர்கள் வேறு ஏதாவது பாதையைத்தான் அறிவிக்கப் போகிறார்களோ என்ற ஆவலை இத்தலைப்பு தூண்டிவிட்டாலும், யெச்சூரியின் சிறப்புரை அதே செக்கைச் சுற்றும் வட்டப்பாதையைதான் உரக்கக் கூவியது .

சி.பி.(எம்)-மின் வழக்கமான மரபிலிருந்து கொஞ்சமும் பிசகாத பாணியில் சீதாராம் யெச்சூரியின் உரை அமைந்திருந்தது. தாம் புரட்சியாளர் என்று காண்பிப்பதற்காகக் கற்பனையாக எதிரியையும் அவன் நடத்தாத தாக்குதலையும் தானே உருவகித்துக் கொண்டு, அதற்கு எதிராக உரக்கக் கூவி சவால் விட்டு சவடால் அடிப்பதுதான் சி.பி.(எம்)-மின் அந்த மரபு. ஆளும் வர்க்கங்கள், அதாவது பெருமுதலாளிகள் தலைமையிலான முதலாளிகளும் நிலப்பிரபுக்களும், அவர்களின் செய்தி ஊடகமும் எப்போதும் சி.பி.(எம்) கட்சியை மட்டுமே அதிகபட்சம் குறி வைத்துத் தாக்குவதாகவும், இருந்த போதும் அதை முறியடித்துத்தான் முன்னேறுவதாகவும் பாசாங்கு செய்வது சி.பி.(எம்) கட்சியின் வழக்கம். அதன்மூலம் எதிரிக்கு எதிராக ஏதோ புரட்சிகர நடைமுறையில் இருப்பதாக அணிகளை ஏய்ப்பதற்குத்தான் இந்த உத்தி பயன்படுத்தப்படுகிறது. இதே உத்தியைத்தான் யெச்சூரியும் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால், அவரும் அவருடைய கட்சியும் கேலிக்குரிய முறையில் அம்பலப்பட்டு நிற்கிறார்கள்.

"முதலாளியச் செய்தி ஊடகம்தான் என்று மீண்டும் வெளிக்காட்டிக் கொண்ட தேசிய செய்தி ஊடகம். திட்டம் குறித்த சி.பி.(எம்)-மின் உட்கட்சி விவாத காலம் முழுவதும் பூரண அறியாமையை வெளிப்படுத்தியது; கட்சியிடம் வடிகட்டாத பகைமை வரை பாராட்டியது; ஆளும் வர்க்கங்களின் ஊதுகுழலான அது, தங்களுடைய வர்க்க ஆட்சியைப் புரட்சிகரமான முறையில் தூக்கி எறிவதைத் தவிர, வேறு எதையும் சி.பி.(எம்) விவாதிப்பதையே விரும்பினார்கள்" என்கிறார் யெச்சூரி.

இதில் இரண்டு அப்பட்டமான பொய்களை யெச்சூரி அவிழ்த்து விட்டிருக்கிறார்.

முதலாவதாக, முதலாளிய தேசிய செய்தி ஊடகம், சி.பி.(எம்) கட்சியிடம் பகைமை பாராட்டுவதாகப் புளுகுகிறார். சி.பி.(எம்) தலைவர்கள்தாம், குறிப்பாக இந்த யெச்சூரி, சுர்ஜித், காரத் ஆகியோர்கள்தாம், செய்தி ஊடகத்தின் முக்கிய அழைப்பாளர்கள். வானொளி அலைவரிசைகளில் இவர்களின் முகம் தெரியாத நாட்களே கிடையாது; செய்தியேடுகளில் இவர்களின் பேட்டி வராத நாட்களே கிடையாது. சி.பி.(எம்) கட்சியிடம் பகைமை பாராட்டினால் இவ்வளவு வாய்ப்புத் தருவார்களா?

இரண்டாவதாக, தங்கள் வர்க்க ஆட்சியைப் புரட்சிகரமான முறையில் சி.பி.(எம்) தூக்கி எறிந்துவிடும் என்று ஆளும் வர்க்கங்கள் கருதுவதாக, அஞ்சுவதாகப் புளுகுகிறார், யெச்சூரி. இப்படிச் சொல்லுவதற்கு துளிகூட அடிப்படையோ, ஆதாரமோ கிடையாது என்பது யெச்சூரிக்கும் தெரியும். சி.பி.(எம்) கட்சியிடம் அதற்கான திட்டமோ, பலமோ, அமைப்போ, தயாரிப்போ ஒருபோதும் இருந்ததில்லை. இந்தியாவில் மூலதன மிட்டுத் தொழில்கள் நடத்துவதற்கு மிகவும் சாதகமான நிலை சி.பி.(எம்) தலைமையிலான இடதுசாரி கூட்டணி ஆளும் மாநிலங்களில்தான் நிலவுகிறது; சி.பி.(எம்). ஆட்சி, பெருமுதலாளிகளுக்கு எதிரானது என்ற எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, சி.பி.(எம்) கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதல் மந்திரிகள் "போராட்டங்களில் ஈடுபடக் கூடாது" என்று தொழிலாளர்களைத் திரும்பத் திரும்ப எச்சரிக்கிறார்கள். "தொழில் அமைதி காப்போம்" என்ற வாக்குறுதியோடு ஏராளமான அரசு சலுகைகளும் கொடுத்து, தாம் ஆளும் மாநிலங்களில் முதலீடு செய்யுமாறு கூவிக்கூவி பெருமுதலாளிகளை அழைக்கின்றனர். இந்திய, வெளிநாட்டுப்பெருமுதலாளிகளும் நாட்டிலேயே தொழிற் தகராறுகள் இல்லாத அமைதியான மாநிலங்கள் சி.பி.(எம்) ஆட்சி நடத்துபவைதாம் என்று நற்சான்றிதழ்களும் வழங்குகின்றனர். அப்படி இருக்கும்போது, தங்கள் வர்க்க ஆட்சியை சி.பி.(எம்) புரட்சிகரமான முறையில் தூக்கி எறிந்துவிடும் என்று ஆளும் வர்க்கங்கள் எண்ணுவதற்கு இடமுண்டா?

இப்படி அப்பட்டமாகப் புளுகத் துவங்கிய சீதாராம் யெச்சூரி, மேலும் பச்சையாகப்

**கேரள மாநிலத் தலைநகர் திருவனந்தபுரத்தில் நடந்த 'மார்க்சிஸ்டு' கட்சியின் சிறப்பு மாநாடு.**





படிப்பகம்

www.padippakam.com

புளுகுவதைத் தொடர்கிறார். ''இந்தியாவில் முதலாளிகளின் ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக அல்லது அதைச் சீர்திருத்துவதற்காக வேண்டிசி.பி.(எம்) கட்சி தனது திட்டத்தைத் திருத்திக் கொண்டு வேலை செய்ய வேண்டும் என்று முதலாளிகளும் அவர்களுடைய கைக்கூலி எழுத்தாளர்களும் நம்பினர்; தமது எழுத்துக்கள் மூலம் அதற்காக ஊக்கத்துடன் வேலையும் செய்தனர்'' என்று புளுகுகிறார் யெச்சூரி.

அதோடு, ''இந்த ஒடுக்குமுறை வர்க்க ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக வேலை செய்வதை விடுத்து இந்த அமைப்பு முறையிலேயே ஒட்டை உடைசலுக்குப் பத்த வைப்புச் செய்யும் சில மாறுதல்களுக்காகவும் கொள்கைகளுக்காகவும் சி.பி.(எம்) வேலை செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ஒரு 'சமூக ஜனநாயக' கட்சியாக சி.பி.(எம்) இருப்பதை அவர்கள் வரவேற்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால் தற்போதைய வர்க்க ஆட்சியை நிரந்தரமாக்குவதில் சி.பி.(எம்) கட்சியையும் இணைத்துக் கொள்வதாகும்'' என்கிறார் யெச்சூரி.

சி.பி.(எம்) கட்சியின் பழைய திட்டமும், நடைமுறையும் இந்தியாவில் முதலாளிவர்க்க ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக இருக்கிறது என்பதை அக்கட்சியில் அரசியல் அறிவு துளியும் இல்லாத ஒரு சில ஏமாளி அணிகளைத் தவிர வேறு யாருமே நம்பியதில்லை என்பதுதான் உண்மை. ஆளும் வர்க்கங்களுக்கோ அப்படி ஒரு அச்சம் கொள்வதற்குக் கொஞ்சமும் காரணமில்லை.

அதற்கு மாறாக, இவ்வளவு காலமும் இந்திய அரசு கடைப்பிடித்து வந்த மதச்சார்பின்மை, அந்நியக் கொள்கை, இந்தியா - பாக். உறவு, காசுமீர் கொள்கை ஆகியவை சரியானவை என்பதுதான் சி.பி.(எம்)-இன் முடிவு. ''தேசிய ஒருமைப்பாட்டை காப்பதிலும் பிரிவினைவாதம், பயங்கரவாதத்தை ஒடுக்குவதிலும்'' இந்திய அரசின் அணுகுமுறையை சி.பி.(எம்) ஆதரித்தே வந்திருக்கிறது. இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு வலதுசாரியிடமிருந்து ஆபத்து வருவதால் அதைக் காப்பதுதான் தனது கடமை என்று சி.பி.(எம்) போராடி வருகிறது. இந்திய அரசியல் சட்டத்திலும் மதச்சார்பின்மை போன்ற பல முற்போக்குக் கூறுகள் இருப்பதாகக் கூறி வருகிறது. தற்போதைய ஆளும் கட்சியான பா.ஜ.க.தான் மேற்கண்டவற்றை மாற்ற விழைகிறது, அதை முறியடிப்பதுதான் தனது முதன்மையான கடமை என்றும் அக்கட்சி கூறி வருகிறது.

சுருக்கமாகச் சொன்னால், தற்போதைய ஆளும் கட்சியை மாற்றுவது, அதனிடத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி இல்லாவிட்டாலும், காங்கிரசு ஆட்சியையாவது நிறுவுவதுதான் தனது இலட்சியம் என்று சி.பி.(எம்) கட்சி பாடுபடுகிறது. மற்றபடி தற்போதைய வர்க்க ஆட்சியை, குறிப்பாக அரசு அமைப்பை மாற்றி அமைக்கும் திட்டமோ, நோக்கமோ, நடைமுறையோ சி.பி.(எம்)-மிடம் கிடையாது.

'போகட்டும், தற்போதைய ஆளும் வர்க்கங்களைத் தூக்கி எறிவதற்கும், அரசு அமைப்பை மாற்றி அமைப்பதற்கும் எள்முனை அளவாவது சி.பி.(எம்) கட்சி முயன்றதற்கான எடுத்துக்காட்டு எதையும் கூற முடியுமா? அப்படி இருக்கும்போது, முதலாளிய ஆட்சியைத் தூக்கியெறியும் வேலையை விட்டுவிட வேண்டும் என்று ஆளும் வர்க்கங்களும் அவர்களது கைக்கூலி எழுத்தாளர்களும் எழுதுவதாகவும் வேலை செய்வதாகவும் புளுகி, புரட்சிச் சாயம் பூசிக்கொள்ள முயலுகிறார், யெச்சூரி.

மற்றவர்கள் யாரும் எதிர்பார்ப்பதற்கு முன்பாக, தற்போதைய வர்க்க ஆட்சியை நிரந்தரமாக நிலைநிறுத்துவதில் சி.பி.(எம்) கட்சி தன்னை இணைத்துக் கொண்டுவிட்டது. ''தேசிய ஒருமைப்பாடு'', ''மத நல்லிணக்கம்'', ''மத்தியில் நிலையான ஆட்சி''க்காக சி.பி.(எம்) அரும்பாடுபட்டு வருகிறது. தற்போதைய அரசியல் அமைப்பின் ஒட்டை உடைசலுக்குப் பத்த வைப்பதுதான் சி.பி.(எம்) கட்சியின் ஒரே அரசியல் பணியாக உள்ளது. நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் ஓட்டுக் கட்சிகள் கலாட்டா - ரகளைகளில் ஈடுபடும்போது, சி.பி.(எம்) அம்மன்றங்களை அம்பலப்படுத்துவதற்கு பதிலாக, அவற்றின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் செயல்படக் கூடாது என்று சக ஓட்டுக் கட்சிகளைக் கண்டித்தே வருகிறது. மொத்தத்தில் அது எப்போதுமே ஒரு சமூக ஜனநாயகக் கட்சியாக (முதலாளிய ஜனநாயகக் கட்சியாக)த்தான் இருக்கிறது.

> **சி.பி.(எம்) கட்சியின் பழைய திட்டமும், நடைமுறையும் இந்தியாவில் முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக இருக்கிறது என்பதை அக்கட்சியில் அரசியல் அறிவு துளியும் இல்லாத ஒரு சில ஏமாளி அணிகளைத் தவிர வேறு யாருமே நம்பியதில்லை என்பதுதான் உண்மை.**

ஆனால், ''கடந்த காலத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்திற்கும் சீர்திருத்தவாத, பிழைப்புவாத, நிலை இருத்தலுக்கான நடைமுறையையும், திட்டத்தையும் தானே வகுத்துக் கொண்டு, தான் அப்படிச் செய்ய வேண்டும் என்று முதலாளிய ஆளும் வர்க்கங்களும் அவற்றின் கைக்கூலி எழுத்தாளர்களும் நம்புவதாகவும் முயலுவதாகவும்'' சி.பி.(எம்) சார்பாகப் புளுகுகிறார் யெச்சூரி.

சி.பி.(எம்) கட்சி நிறுவப்பட்ட 1964-இல் நிறைவேறிய கட்சித் திட்டத்தை மேம்படுத்துவது என்று 1992 சென்னை மாநாட்டில் அக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியால் ஏற்பட்ட சர்வதேச மாறுதல்கள், உள்நாட்டில் அதன் தாக்கங்கள் காரணமாக பழைய திட்டத்தை மேம்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அடுத்த ஆறு ஆண்டுகளாக அந்த வேலையைக் கட்சி மேற்கொள்ளவே இல்லை. நாட்டின் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்தான் இதற்கான காரணமாகக் கூறப்படுகிறது. அந்த ஆறு ஆண்டுகளில் அப்படி என்ன மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றில் சி.பி.(எம்) என்ன தலையீடு செய்தது?

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் அயோத்தி பாபரி மசூதியை இடித்தது; அதற்கு முன்னும் பின்னும் நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகளை நடத்தியது. அதன் எதிர்விளைவாக இசுலாமியத் தீவிரவாத குழுக்களின் குண்டு வெடிப்புகள் நடந்தன. உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை அமலாக்கப்பட்டு, நாட்டை மறுகாலனியாக்கும் நடவடிக்கை தொடங்கியது. இந்த நிகழ்ச்சிகளைக் கைகட்டிப் பார்த்துக் கொண்டு, முணுமுணுத்ததுதான் சி.பி.(எம்) செய்த காரியம். ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலை எதிர்த்துக் கண்டித்து அறிக்கை விடுவதும், மதநல்லிணக்க மாநாடு நடத்துவதும் மட்டுமே செய்தது.

புதிய பொருளாதார கொள்கையைக் கண்டித்து மூன்றாவது ''பாரத் பந்த்'' நடத்திவிட்டு, 1993 ஆகஸ்ட் 15-இல் சட்டமறுப்பு போராட்டம் மூலம் இரண்டாவது விடுதலைப் போர் துவங்கப் போவதாக அறிவித்தது. ஆனால், காரணம் கூறாமல் அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டு அடங்கிப் போனது.

அதன்பிறகு மூன்றாவது அணி அமைப்பது, தேவே கவுடா, குஜ்ரால் தலைமையில் ஆட்சியமைப்பது, அதைக் காப்பது, அதற்காக ஓட்டுக் கட்சிகளிடையே தரகு வேலை பார்ப்பது என்ற முக்கிய வேலையில் இறங்கியது சி.பி.(எம்) தலைமை. மூன்றாவது அணி முயற்சி படுதோல்வி கண்டபிறகு, 1998 அக்டோபரில் கூடிய மாநாட்டில்தான் கட்சித் திட்டத்தை மேம்படுத்தும் ஆறாண்டுகளுக்கு முந்தைய தீர்மானம் நினைவுக்கு வந்தது. ''கல்கத்தாவில் நடந்த 16-வது கட்சி காங்கிரசுக்கு (அக்டோபர், 1998) பிறகுதான் இதுபற்றி பாரிய முயற்சியை நாங்கள்

www.padippakam.com

மேற்கொண்டோம். திட்டத்தின் நகல் தயாரிப்பதற்கான வேலையை ஒரு கமிசனிடம் ஒப்படைத்தோம்'' என்று சுர்ஜித்தே கூறியுள்ளார். அதன் பிறகுதான் நகல் தயாரித்து, உட்கட்சி விவாதம் நடத்தி புதிய திட்டத்தை நிறைவேறியது.

1964 கட்சித் திட்டம் 9 தலைப்புகளைக் கொண்டிருந்தது; தற்போது நிறைவேற்றப் பட்ட திட்டம் 8 தலைப்புகளைக் கொண்டதாகச் சுருக்கப்பட்டுவிட்டது. அவற்றிலும் முன்னுரை, முடிவுரை இரண்டும் சி.பி.(எம்) கட்சி மற்றும் அதன் முன்னோடியான ஒன்று பட்ட கம்யூனிச கட்சியின் பொய்யும் புனைச் சுருட்டும்தான்.

பிரித்தானியக் காலனி ஆதிக்கத்துக்கு எதிரான விடுதலை போராட்டத்தின் போது ஒன்றுபட்ட கம்யூனிசக் கட்சி மட்டுமல்ல, காந்தி - காங்கிரசு இழைத்த துரோகங்கள் சி.பி.(எம்) கட்சித் திட்டத்தில் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. சுதந்திரப் போராட்டமே ஒன்றுபட்ட கம்யூனிசக் கட்சியாலும், பரந்துபட்ட மக்களின் தன்னெழுச்சியாலும்தான் வெற்றி பெற்றது என்று சி.பி.(எம்) சித்தரிக்க முயன்றுள்ளது. உள்ளூர் கம்யூனிசப் போராளிகள் நடத்திய வீரஞ்செறிந்த எழுச்சிகள் ஏதோ கம்யூனிசக் கட்சியின் தலைமை திட்டமிட்டு நடத்தியதைப் போல சித்தரித்திருக்கிறது. அதேபோல புரட்சிகர அணிகளின் மீதான ஒடுக்குமுறை, தியாகம் ஆகியவற்றையும் தலைமைக்கே உரித்தாக்குகிறது. ஆனால், கட்சி நிறுவப் பட்டு 30 ஆண்டுகளாகியும் ஒரு திட்டமோ, போர்த் தந்திரமோ வகுத்துக் கொள்ளவில்லை. காலனிய - எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமையேற்க தவறியதோடு, காந்தி - காங்கிரசின் தலைமையை ஏற்றுக் கொண்டு, அதன் வால் பிடித்துப் போனது.

தனித்தன்மை, தனித் திட்டத்தைக் கொண்ட கம்யூனிசக் கட்சியைக் கட்டுவதற்குப் பதில், காங்கிரசு - சோசலிசக் கட்சி என்கிற பெயரில் காங்கிரசுக்குள் ஒளிந்து கொண்டு கட்சி நடத்தியது ஒன்றுபட்ட கம்யூனிசக் கட்சி. ஆனால், 1921 அகமதாபாத் காங்கிரசு கட்சி மாநாட்டிலேயே முழுச் சுதந்திரம் என்ற பிரச்சினையைக் கிளப்பியதாகப் பீற்றிக் கொள்கிறது சி.பி.(எம்). ஒத்துழையாமை இயக்கம் - சௌரி சௌரா விவசாயிகள் எழுச்சி, சட்டமறுப்பு இயக்கம், கடற்படை எழுச்சி ஆகியவற்றின்போதும் விடுதலைக்கான மக்கள் போராட்டம் உக்கிரமானபோதும், பகத்சிங் போன்ற இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்களின் போதும், காந்தி - காங்கிரசு வெளிப்படையாகத் துரோகமிழைத்துக் காட்டிக் கொடுத்தும் கூட, அதை எதிர்க்கத் துணியாது, போலி கம்யூனிசத் தலைமை காங்கிரசுக்கு வால்பிடித்துப் போனது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஏற்பட்ட நெருக்கடி, உள்நாட்டில் ஏற்பட்ட தன்னெழுச்சியான புரட்சிப் போராட்டங்கள் காரணமாக காலனிய அரசின் ஆட்சி அதிகாரத்தை காங்கிரசு மற்றும் முஸ்லீம் லீக் ஆகிய தரகு அதிகார வர்க்க முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சிகளிடம் கைமாற்றித் தருவது; அதன்மூலம் காலனிய - ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ நலன்களைத் தக்க வைத்துக் கொள்வது என்று பிரித்தானிய அரசு முடிவு செய்து போலிச் சுதந்திரம் வழங்கியது. ஆனால், அப்படிச் செய்ததை, முழுச் சுதந்திரம் பெற்றதாகவும், அதன் மூலம் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதி பூர்த்தியடைந்து விட்டதாகவும் சி.பி.(எம்) திட்டம் சித்தரிக்கிறது. இதன் மூலம் ''காலனிய விலக்கம் (Decolonialism)'' என்ற கேடுகெட்ட திருத்தல்வாதத்தையே சி.பி.(எம்) கட்சி முன்வைக்கிறது.

காங்கிரசு மற்றும் முஸ்லீம் லீக்குடன் ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இரண்டு சுதந்திர அரசுகளை (இந்தியா, பாகிஸ்தான்) உருவாக்கிவிட்டது என்று சி.பி.(எம்) குற்றஞ் சாட்டுகிறது. ஆனால், ஒன்றுபட்டிருந்த போலி கம்யூனிஸ்டுக் கட்சியும் அதற்கு உடந்தையாக இருந்தது என்பதுதான் உண்மை. மத அடிப்படையில் முஸ்லீம்களுக்கான தனி நாடு கோரிக்கையைத் தேசிய இனப்பிரச்சினையாகக் கருதி இவர்களும் ஆதரித்தார்கள். பாக். பிரிவினையின் போதோ, இந்திய ஒன்றியம் உருவாக்கப் பட்ட போதோ, எல்லா தேசிய இனங்களுக்குமான சுயநிர்ணய உரிமைக்காக, ஒன்றுபட்டிருந்த போலி கம்யூனிஸ்டுகள் போராடாது துரோகமிழைத்தனர்.

**பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை என்று சொல்லிக் கொள்ளும் சி.பி.(எம்) கட்சியின் இரண்டாம் மட்டத் தலைமையோ பிழைப்புவாதத் தொழிற்சங்க இயக்கத்துக்குள் மூழ்கிப் போயிருக்கிறது. முதல்மட்டத் தலைமையோ நாடாளுமன்றச் சகதிக்குள் மூழ்கிப் போயிருக்கிறது.**

மொத்தத்தில், மார்க்சிய - லெனினியத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதில் ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'', இந்திய நிலைமைகளுக்கேற்ற பாதை என்ற பெயரில் திருத்தல்வாதத்தையே கடைப்பிடித்தனர். இறுதியாக, மாபெரும் தெலுங்கானா உழவர் எழுச்சியைக் காட்டிக் கொடுத்து, ''ஆயுதப் போராட்டப் பாதையை ஒருபோதும் மேற்கொள்ள மாட்டோம், நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குள்ளேயே இயங்குவோம்'' என்று எழுதிக் கொடுத்துப் பொது மன்னிப்புப் பெற்றனர். இதற்குப் பிரதான காரணமான துரோகிகள் பின்னாளில் சி.பி.(ஐ)-யிலேயே தங்கிவிட்டார்கள். இதற்கு மாறாக நகர்ப்புற ஆயுதந் தாங்கிய பேரெழுச்சி நடத்தப் போவதாக பிரகடனம் செய்து, இடது சந்தர்ப்பவாத, சிறுபிள்ளைத்தனமான ''புரட்சி''யைத் துவங்கி படுதோல்விக்கும் இழப்புக்கும் காரணமானவர்கள் சி.பி.(எம்)-க்குத் தலைமையேற்றனர்.

சி.பி.(எம்) கட்சி தனது திட்டத்தில் ''கம்யூனிசக் கட்சியைக் கட்டுவது'' என்ற தலைப்பில் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக இருந்து தனது இலக்கை - இலட்சியத்தை அடைவதற்கு எப்படியெல்லாம் போராடும் என்று சவடாலடித்திருக்கிறது. ஏகாதிபத்தியம், ஏகபோக முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிராக அரசியல், சித்தாந்தம், பொருளாதாரம், சமூகம், பண்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் நீண்டகால, போர்க்குணமிக்க போராட்டங்களை நடத்தப் போவதாக அறிவிக்கிறது.

பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்று சொல்லிக் கொள்ளும் சி.பி.(எம்) கட்சியின் இரண்டாம் மட்டத் தலைமையோ பிழைப்புவாதத் தொழிற்சங்க இயக்கத்துக்குள் மூழ்கிப் போயிருக்கிறது. முதல்மட்டத் தலைமையோ நாடாளுமன்றச் சகதிக்குள் மூழ்கிப் போயிருக்கிறது. சுர்ஜித், யெச்சூரி, காரத் ஆகிய அறிவுப் பிழைப்புவாத சித்தாந்தத் தலைமையோ, அரசியல் தரகு வேலையில் மூழ்கிப் போயிருக்கிறது. இவ்வாறு கட்சி முழுவதும் முதலாளித்துவ சட்டவாத நடைமுறையில் இருக்கும்போது, அது பீற்றிக் கொள்வதைப் போன்ற போர்க்குணமிக்க போராட்டங்கள் என்பது கனவிலும் நடக்காது. இவர்களுக்கு மறியல், தர்ணா போன்றவைதாம் அதிகபட்சம் போர்க்குணமிக்க போராட்டங்கள். இவையும்கூட தானே முன்வந்து காலையில் கைதாகி மாலையில் விடுதலையாகும் அளவுக்குத்தான். மற்றபடி உண்ணாவிரதம், மனிதச் சங்கிலி, அரை நிர்வாணம், கோவணம், மொட்டை, நாமம், தமுக்கு அடி - இவைதான் சி.பி.(எம்) பெரும்பாலும் நடத்தும் போராட்டங்கள்.

இந்த இலட்சணத்தில், சோசலிசத்துக்கும் சுரண்டலற்ற சமுதாயத்துக்கும் வழிவகுக்கும் புரட்சிகரத் திட்டம் ஒன்றை இந்திய மக்கள் முன் வைப்பதாக சி.பி.(எம்) அறிவிக்கிறது. அது எப்படிப்பட்ட திட்டம் என்பதை அடுத்துப் பார்ப்போம்.

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com



## ஆந்திரப் போலீசாரின் பயங்கரவாத வெறியாட்டம்

சீருடை அணிந்த கிரிமினல்களான போலீசு கும்பலின் அக்கிரமங்களையும் கொலை வெறியாட்டத்தையும் அம்பலப்படுத்தி ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடி வரும் ஆந்திர மக்கள் உரிமைக் கழகத்தின் (APCLC) இணைச் செயலரான புருசோத்தம் என்பவரை கடந்த நவம்பர் மாதத்தில் கூலிப்படையை ஏவி ஆந்திரக் கொலைகாரப் போலீசு கொன்றொழித்தது. புருசோத்தம் கொல்லப்படுவதற்கு முன்பு கரீம் நகர் மாவட்டத்தில் உள்ள பெடதுண்ட்லா கிராமத்தில் 3 சிறுமிகள் உட்பட 7 இளம் பெண்களை தீவிரவாதிகளுடனான மோதல் என்ற பெயரில் ஆந்திர போலீசார் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்டுள்ளனர்.

புஷ்பா (வயது 15), கொமுரக்கா (14), சங்கரம்மா (16), பிரமீளா (14), வசந்தா (18), மானம்மா (20), ஜானகி (24) - ஆகிய 7 பேரும் புரட்சிகர மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள். இதில் ஜானகி தவிர மற்ற அனைவரும் எழுதப் படிக்கக்கூடத் தெரியாத ஏழைகள். ஆறு மாதங்களுக்கு முன்புதான் இச்சங்கத்தில் இணைந்த இவர்கள் அனைவரும் தினக்கூலிகள்.

கடந்த நவம்பர் 6-ஆம் நாளன்று மாலை இவர்கள் தமது கிராமத்துக்கு வெளியிலுள்ள ஒரு கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது, ஒருவர் மட்டும் வழியில் நிற்க மற்ற 6 பேரும் தாழ்வான கிணற்றுக்குச் சென்றனர். திடீரென அங்கு வந்த தீவிரவாத ஒழிப்பு அதிரடிப்படை, வழியில் நின்ற பெண்ணை எவ்வித முன்னறிவிப்புமின்றி சுட்டுக் கொன்றது. இதைக் கண்டு பீதியடைந்து மற்றவர்கள் அலறியடித்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடத் தொடங்கியதும், அவர்களைத் துரத்திய அதிரடிப்படை போலீசார் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் மூவர் மாண்டு, மற்றவர்கள் படுகாயமடைந்து கீழே விழுந்தனர். குற்றுயிரும் குலையுயிருமாகத் துடித்த அவர்களைச் சூழ்ந்த போலீசு வெறியர்கள், ஆடைகளை உருவி மானபங்கப்படுத்தி மிருகத்தனமாகச் சித்திரவதை செய்தனர். அவர்களின் மார்பகங்கள் வெட்டியெறியப்பட்டன. பிறப்புறுப்பு துப்பாக்கி முனையால் கிழிக்கப்பட்டது. பற்களும் கை - கால் எலும்புகளும் முறிக்கப்பட்டன. உடலெங்கும் கத்தியால் கீறி சதைகள் பிய்த்தெறியப்பட்டன. வழக்கம் போலவே நக்சல்பாரி தீவிரவாதக் குழுவினர் ஆயுதங்களுடன் போலீசாரை வழிமறித்துத் தாக்கியதாகவும், அம்மோதலில் 7 பெண் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் ஆந்திரக் கொலைகாரப் போலீசு கதை கட்டியது.



சீக்கிய மதம் இந்துமதத்தின் கிளைதான் என்று இந்துமத வெறியர்கள் புளுகியதை எதிர்த்து, அவர்களது "பாரத மாதா" சுவரொட்டிகளைத் தீயிட்டுக் கொளுத்தும் சீக்கியர்கள்.

இத்தனைக்கும் பிறகும் கூட ஆந்திரக் காட்டுமிராண்டிப் போலீசின் வெறி தீரவில்லை. கொல்லப்பட்ட பெண்களின் உடலை நிர்வாணமாக்கி மன்தாணி போலீசு நிலைய வாசலிலேயே இரு நாட்களுக்குப் போட்டு வைத்தது. பிணங்களைத் துணியால் மூடிப் பராமரிக்க வேண்டும் என்ற குறைந்தபட்ச மனிதப் பண்புகூட அந்த மிருகங்களிடம் இல்லை. கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் வந்து உடலைப் பெற்றுக் கொள்ளும் வரை இந்த அட்டூழியம் நடந்தது.

கொல்லப்பட்ட இந்த இளம் பெண்கள் நக்சல்பாரிகளின் தலைமையிலான புரட்சிகர மகளிர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர, வேறெந்தக் குற்றமும் செய்யாதவர்கள். போலீசு பதிவேடுகளில் அவர்கள் மீது எந்த வழக்கும் இல்லை. கரீம் நகர் மாவட்டத்தில் வரதட்சிணைக் கொடுமையும் பெண்கள் மீதான அடக்குமுறையும் பாலியல் வன்முறைகளும் தீவிரமாகிவிட்டதை எதிர்த்து, புரட்சிகர மகளிர் கழகம் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு பெண்களை அணி திரட்டி வருகிறது. கடந்த ஆண்டில் ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் மட்டும் வரதட்சிணைக் கொடுமையால் 88 பெண்கள் தற்கொலை செய்து கொண்டதையும், 165 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளதையும், இவற்றுக்கு எதிராகப் போலீசார் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததை அம்பலப்படுத்தியும் இச்சங்கம் பிரச்சாரம் செய்து வந்தது. அறியாமையிலுள்ள பெண்களுக்கு எழுதப் படிக்கவும் கற்றுத் தந்தது.

கொல்லப்பட்ட இந்த இளம்பெண்கள் கூட அரிச்சுவடி எழுதக் கற்றுக் கொள்ளச் சென்றுவிட்டு அப்படியே தண்ணீர் எடுக்க வந்துள்ளனர். கிணற்றடியில் அவர்களது சிலேட்டுப் பலகையும் அரிச்சுவடிப் புத்தகமும் கிடந்துள்ளது. இந்த உண்மைகளை வெளிக் கொணர்ந்து, போலீசு அட்டூழியத்தை எதிர்த்து ஆந்திர மக்கள் உரிமைக் கழகத் தலைவரான ரத்னமாலா, உயர்நீதி மன்றத்தில் முறையிட்டு மீண்டும் பிரேதப் பரிசோதனைக்கு மனு செய்த பிறகு, அதை ஏற்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுக்கும் முன்னரே, கொல்லப்பட்டோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களை மிரட்டி, புதைக்கப்பட்ட பிணங்களை போலீசே முன்நின்று எரித்துத் தடயங்களை முற்றாக அழித்துள்ளது.

"எஸ்.எஸ்." என்ற கொலைப் படையைக் கட்டிக் கொண்டு வெறியாட்டம் போட்ட பாசிச இட்லரையே விஞ்சுமளவுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நவீன இட்லராக வலம் வந்து கொண்டிருக்கிறார். பாசிச இட்லருக்கு புளுகுணி பொய்ப் பிரச்சார மந்திரியாக கோயபல்சு அமைந்ததைப் போலவே, முதலாளித்துவப் பத்திரிகைகள் இக்கொடுஞ்செயலை மூடிமறைத்துவிட்டு, பாசிச சந்திரபாபு நாயுடுவை "ஹைடெக் முதல்வர்" என்று துதிபாடிக் கொண்டு, நவீன கோயபல்சுகளாக வெட்கமின்றிப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

## பஞ்சாபில் வாலறுந்த இந்துவெறி நரிகள்

"சீக்கிய, பௌத்த, ஜைன மதங்கள் இந்தியாவில் தோன்றி வளர்ந்ததால் அவை இந்து மதத்தின் சகோதர மதங்கள்; இந்து மதத்திலிருந்து வேறுபட்டிருந்தாலும், அவை இந்து மதத்திலிருந்து தோன்றிய கிளை மதங்கள்தாம்; ஆனால், கிறித்துவ மதமும் இசுலாமிய மதமும் அந்நிய - ஆக்கிரமிப்பு மதங்கள்; அவை இந்து மதத்துக்கும், அனைத்து இந்திய மதங்களுக்கும் எதிரானவை; இவை இந்தியாவைச் சீர்குலைக்கச் சதி - நாச வேலைகளில் ஈடுபட்டு வருவதால் நாமனைவரும் ஒன்றுபட்டு நின்று இவற்றை முறியடிக்க வேண்டும்" - என்று இந்து வெறியர்களின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். நீண்ட காலமாகப் பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால், சீக்கிய, ஜைன, பௌத்த மதத்தினர் இக்கீழ்த்தரமான பொய்ப் பிரச்சாரத்தை ஒரு பொருட்டாக மதித்ததேயில்லை.

சீக்கியர்களின் தாயகமான பஞ்சாபில் ஆளும் அகாலிதளக் கட்சியுடன் பாரதீய ஜனதா கூட்டணி வைத்துக் கொண்டுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு, "சீக்கிய மதமும் இந்து மதமும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகள்" என்று சீக்கியர்களை இசு


படிப்பகம்

www.padippakam.com



லாமியருக்கு எதிரான தமது அணியில் திரட்ட இந்து வெறியர்கள் கிளம்பினர். இசுலாமியருக்கு எதிரான சீக்கியர்களின் பாரம்பரிய பகைமையுணர்வை இதற்குக் கேடாகப் பயன்படுத்தவும் முயன்றனர். இதன்படி "ராஷ்டிரீய சீக்கிய சங்" என்ற அமைப்பை நிறுவி சீக்கிய மதவிவகாரங்களில் தலையிடத் தொடங்கினர்.

சீக்கிய மதத்துக்கும் இந்து மதத்துக்குமிடையே ஒற்றுமையும் ஒத்த தன்மையும் நிலவுவதாக இச்சங்கம் பிரசுரங்களை வெளியிட்டு சீக்கியர்களிடம் விநியோகித்தது. அதில், "சீக்கிய மத நிறுவனர்களில் ஒருவரான குருகோவிந்த் சிங், இந்து மத முறைப்படி பசுக்களைப் பாதுகாத்தார்; சீக்கிய மதத்தை நிறுவும்முன் அவர் காளி கோயிலில் வழிபட்டார்; சீக்கிய மதகுருமார்கள் அன்று இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்; குரு ராம்தாஸ் என்ற சீக்கிய மதகுருமாரின் உயிலின்படி, அவர் இறந்ததும் இந்து பார்ப்பனரால் தகனம் செய்யப்பட்டு, மயானச் சாம்பல் கங்கையில் கரைக்கப்பட்டது. இன்று குருத்துவாரா என்றழைக்கப்படும் சீக்கிய வழிபாட்டுத் தலங்கள், முற்காலத்தில் மந்திர் (கோயில்) என்றே அழைக்கப்பட்டன; குருகோவிந்த் சிங் தனது சுயசரிதையில் சீக்கிய மதத்தை நிறுவிய பத்து குருமார்களும் கடவுள் இராமனின் சீடர்கள் என்று எழுதியுள்ளார்; எனவே சீக்கிய மதம், இந்து மதத்தின் பிரிக்க முடியாத அங்கம்; சீக்கியர்கள் சிறுபான்மை மதத்தினர் அல்ல; அவர்கள் பெரும்பான்மை இந்து மதத்தின் ஒரு பிரிவுதான்; இசுலாமியரும் கிறித்துவர்களும்தான் சிறுபான்மை மதத்தினர்; குருநானக், குருகோவிந்த சிங்கின் இலட்சியத்தை நிறைவேற்ற நாமனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்" என்று பொய்களையும் கட்டுக்கதைகளையும் அவிழ்த்துவிட்டது. சீக்கியர்களின் புனிதத் தலமான பொற்கோயில் அமைந்துள்ள அமிர்தரஸ் நகரில் சுவரெழுத்து, தட்டிகள், சிறு வெளியீடுகள் மூலமும் பிரச்சாரமும் செய்து வந்தது. இவற்றுக்கு உடனடியாக எதிர்ப்புகள் வராத தைரியத்தில், சீக்கியர்களின் புனித நூலான குருகிரந்தத்தை இந்துக் கோயில்களில் வைத்து கடந்த ஜனவரி முதலாக வழிபாடும் பாராயணமும் செய்தது.

இதுவரை பொறுமையாக இருந்த சீக்கிய மதகுருமார்கள், தமது புனித நூலை இந்துக் கோயில்களில் வைத்து இந்து வெறியர்கள் வழிபாடு செய்வதைக் கண்டு ஆத்திரமடைந்து கண்டனம் தெரிவித்தனர். "கொள்கைகள், வழிபாட்டு முறை, வாழ்க்கை முறை, புனித நூல், உடைகள் முதலான அனைத்திலும் இந்து பாரம்பரியத்துக்கு முற்றிலும் மாறுபட்ட பாரம்பரியம் கொண்டது சீக்கிய மதம்; சிலை வழிபாட்டை சீக்கிய மதம் ஏற்காத நிலையில், சிலையை வைத்து வழிபடும் இந்துக் கோயில் எமது புனித நூலை பாராயணம் செய்வது எமது மதத்தை இழிவுபடுத்தும் செயலாகும். உடனடியாக இதை நிறுத்தாவிடில் விபரீத விளைவுகள் ஏற்படும்" என்று சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியின் முக்கிய தலைவர்கள் எச்சரித்தனர். அகால்தக்த் எனும் தலைமை குருபீட மதகுருவான ஜோகிந்தர் சிங். "சீக்கியர்களின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம்" என்று பகிரங்கமாகவே இந்து வெறியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். இதனிடையே சீக்கிய குருத்துவாராக்களில் இந்து கடவுள்களின் படங்களும், இந்து வெறியர்கள் போற்றும் பாரத மாதாவின் படங்களும் பஞ்சாபின் பல பகுதிகளில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதைக் கண்டு பீதியடைந்து, ஆப்பு அசைத்த குரங்காக அலறிய இந்து வெறியர்கள், சீக்கிய புனித நூலை கோயில்களில் வைத்து வழிபாடு செய்ததற்கு வருத்தம் தெரிவித்துள்ளனர். கிணறு வெட்ட, பூதம் கிளம்பியதைக் கண்டு அரண்டு போன இந்து வெறியர்கள் தமது கீழ்த்தரமான செயலுக்கு நியாயம் கற்பிக்க முடியாமல் வாலறுந்த நரியாக வலம் வருகின்றனர்.

## வர்க்கக் கனலை மூட்டிய சணல் ஆலைத் தொழிலாளர்கள்

மே. வங்கத்திலுள்ள பாராநகர் சணல் ஆலையின் நிர்வாக அதிகாரி, ஒரு தொழிலாளியைச் சுட்டுக் கொன்ற கொடுஞ்செயலும், அதற்குப் பதிலடியாக ஆலைத் தொழிலாளிகள் அந்தக் கொலைகார அதிகாரியைக் கொன்றொழித்து தீயிட்டுக் கொளுத்திய செயலும் அம்மாநிலத்தையே உலுக்கியுள்ளது.



தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத் தீயில், கொலைகார ஆலை' நிர்வாகிகள் சுட்டெரிக்கப்பட்ட இடத்தைப் பார்வையிடும் போலீசு.

மே. வங்கத்தின் 24 பர்கானா மாவட்டத்திலுள்ள பாராநகர் சணல் ஆலை, ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட தொன்மை வாய்ந்த ஆலையாகும். பாலிதீன் பைகளின் பெருக்கம் காரணமாக கடந்த 15 ஆண்டுகளாக சணல் ஆலைகள் நலிவடைந்து மூடப்பட்டு வருகின்றன. பாராநகர் சணல் ஆலையும் நலிவடைந்து கடந்த ஓராண்டு காலமாக மூடப்பட்டு, கடந்த டிசம்பரில் மீண்டும் திறக்கப்பட்டு, மொத்தமுள்ள 5000 தொழிலாளிகளில் 3000 பேரை மட்டுமே மீண்டும் வேலையில் அமர்த்தியது. அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நிரந்தரமாக்கப்படாத உதிரித் தொழிலாளிகள். நிரந்தரத் தொழிலாளிக்கு வாரத்தில் 4 நாள் வேலையும், உதிரித் தொழிலாளிக்கு 2 நாள் வேலையும் என நிர்வாகம் அறிவித்தது. உதிரித் தொழிலாளிக்கு ஒருநாள் கூலி ரூ. 50 மட்டும்தான். வேறெந்த சலுகையும் கிடையாது. இந்நிலையில் உற்பத்தி குறைவாக நடப்பதாகக் காரணம் காட்டி ஆலையின் ஒரு பிரிவை மூடிவிடுவதாக நிர்வாகம் அறிவித்தது. தமது வாழ்வுக்கு ஆதாரமாக உள்ள வேலை மீண்டும் பறிக்கப்படுவதைக் கண்டு உதிரித் தொழிலாளிகள் குமுறிக் கொண்டிருந்தனர்.

இதுவொருபுறமிருக்க, தொழிலாளிகளின் சேமநல நிதியில் நிர்வாகத்தின் பங்குத் தொகையைச் செலுத்தாமல், ஆலை நிர்வாகம் பல கோடி ரூபாய் விழுங்கிவிட்டது. இதனால் நிரந்தரத் தொழிலாளிகள் சேமநல நிதி, மருத்துவ ஈட்டுத் தொகை, கிராஜுட்டி தொகை முதலான எதையும் பெற முடியாமல் குமுறிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி நடக்கவில்லை


படிப்பகம்

www.padippakam.com



என்றும், நிர்ணயித்த உற்பத்தி இலக்கின்படி தொழிலாளிகள் வேலை செய்யவில்லை என்றும், தேவைக்கு அதிகமாகத் தொழிலாளிகள் உள்ளதாகவும் பொய்க் காரணங்களைக் கூறி வந்த நிர்வாகம், முதற் தாக்குதலாக இரு தொழிலாளிகளைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தது.

இதைக் கண்டு வெகுண்டெழுந்த நிரந்தரத் தொழிலாளிகளும் உதிரித் தொழிலாளிகளும் ஓரணியில் திரண்டு, வேலையைப் புறக்கணித்துவிட்டு ஜனவரி 13-ஆம் நாளன்று ஆலையின் உள்ளே உள்ள தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். ''பணி நீக்கம் செய்யப்பட்ட இரு தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்து! உதிரித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்! கொள்ளையடித்த சேம நல நிதியை உடனே திருப்பிக் கொடு!'' என்று முழங்கியபடியே வந்த அவர்களின் வர்க்கக் கோபத்தைக் கண்டு நிர்வாக அலுவலக ஊழியர்கள் அஞ்சி தப்பியோடினர். தலைமை நிர்வாக அதிகாரியும், தொழிலாளர் நிர்வாக அதிகாரியும் வாயிற் கதவை அடைத்து விரட்டியதும், ஆத்திரமடைந்த தொழிலாளிகள் கதவை உடைத்து, மேசை - நாற்காலிகளைத் தூக்கி வீசினர். இதைக் கண்டு கோபம் தலைக்கேறி வெறிபிடித்த தலைமை நிர்வாக அதிகாரியான ஜே.பி. திவாரி, தனது கைத்துப்பாக்கியை எடுத்து தொழிலாளிகளை நோக்கி கண்மூடித்தனமாகச் சுட்டான். இதில் போலாதாஸ் என்ற தொழிலாளி கொல்லப் பட்டார். பலர் படுகாயமடைந்தனர்.



இதைக் கண்டு ஆவேசங் கொண்ட தொழிலாளர்கள் கொலைகார நிர்வாக அதிகாரி திவாரி மற்றும் தொழிலாளர் நிர்வாக அதிகாரி கௌதம் கோஷ் ஆகியோரை சுற்றிவளைத்துப் பிடித்து, நாற்காலிகளில் கட்டி வைத்து தாக்கினர். பின்னர், அலுவலக வாயிலில் நின்ற அவர்களது கார்களின் டயர்களைப் பிடுங்கி தீயிட்டுக் கொளுத்தி அத்தீயில் அவ்விரு கொடுங்கோலர்களையும் வீசியெறிந்து கொன்றொழித்தனர்.

முதலாளித்துவம் எவ்வளவு கொடூரமானது என்பதையும், கோடிக்கால் பூதமான தொழிலாளி வர்க்கம் ஓரணியில் வர்க்கக் கோபத்துடன் திரண்டெழுந்தால், அதன் போராட்டத் தீயில் முதலாளித்துவம் சாம்பலாகும் என்பதையும் பாரா நகர் சணல் ஆலைத் தொழிலாளர்களின் வீரஞ்செறிந்த போராட்டம் நிரூபித்துக் காட்டுகிறது. மே. வங்கத்தை ஆளும் போலி கம்யூனிஸ்டுத் தலைவர்களோ, ''ஐயோ! தொழிலாளர்களின் வன்முறை! ஆட்சியைக் கவிழ்க்கச் சதி!'' என்று அலறுகிறார்கள். தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்துப் பழிவாங்கியதோடு, சுட்டுக் கொல்லவும் துணிந்துவிட்ட நிர்வாக அதிகாரிகள், ஆலை முதலாளிகள், இதற்கு உடந்தையாகச் செயல்பட்ட தொழிலாளர் நலத்துறை அரசு அதிகாரிகள் அடங்கிய கொலைகார கும்பலைக் கைது செய்து தண்டிப்பதற்குப் பதிலாக, முன்னணித் தொழிலாளிகள் 20 பேர் மீது கொலைக் குற்றம் சாட்டிக் கைது செய்து, தனது முதலாளித்துவ விசுவாசத்தை நிரூபித்துக் காட்டியுள்ளது. மே. வங்க போலி கம்யூனிஸ்டு அரசு.

## புத்ததேவ் பட்டாச்சார்யா: பாசிச ஜெயாவின் அரசியல் வாரிசு?!

மே. வங்கத்தின் புதிய முதல்வரான புத்ததேவ் பட்டாச்சார்யா பதவிக்கு வந்ததுமே, ''நாங்கள் முதலாளிகளின் நண்பனாக உள்ள அரசாகத்தான் செயல்படுவோம்; தொழிலாளிகள் போராட்டங்களில் ஈடுபட்டால் கடுமையாக ஒடுக்குவோம்!'' என்று தனது முதலாளித்துவ விசுவாசத்தை பகிரங்கமாகவே அறிவித்தார். இப்போது இன்னும் ஒருபடி முன்னேறி, ''அவசியமானால் யாரையும் சுட்டுக் கொல்லுங்கள்; மனித உரிமைகள் பற்றிக் கவலைப்படாதீர்கள்; அதை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கொலைகாரப் போலீசு மிருகத்துக்கு கொம்பு சீவி விட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் 25-ஆம் நாளன்று ஜாதவபூர் போலீசு நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் தலைமை உரையாற்றிய போலி கம்யூனிஸ்டு முதல்வர், ''தெருக்களில் ஆயுதங்களுடன் திரியும் கிரிமினல்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு சில எதிர்க் கட்சியினர் மனித உரிமை பற்றிக் கூப்பாடு போடுகின்றனர். நீங்கள் கிரிமினல்களைக் கண்டதும் சுட்டுக் கொல்லுங்கள். மனித உரிமைகள் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த விவகாரத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். மே. வங்கத்தில் அண்மைக் காலமாகப் பெருகிவிட்ட கிரிமினல் - ரவுடிகளின் அட்டகாசத்தை ஒடுக்க, போலீசு கும்பலுக்கு எல்லையில்லா அதிகாரமளிக்கும் வகையில் முதல்வர் செய்துள்ள அறிவிப்புதான் இது.

மே. வங்கத்தில் கிரிமினல் - ரவுடிகளின் கொட்டம் பெருகிவிட்டது என்பது உண்மைதான். இதற்கு யார் பொறுப்பு? முதல்வராவதற்கு முன்னும், இப்போதும் போலீசுத் துறை அமைச்சராக இருப்பது இதே பட்டாச்சார்யாதான். ஓட்டுக்கும் பதவிக்கும் கிரிமினல்களுடன் கூடிக்குலாவிய சி.பி.எம். கட்சி, இப்போது கிரிமினல் - ரவுடிகளின் அட்டகாசம் எல்லை மீறிவிட்டதும், கூப்பாடு போடுவது நல்ல வேடிக்கைதான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கிரிமினல்களைக் கண்டதும் சுட்டுக் கொல்லுமாறு முதல்வர் உத்தரவிடுவது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்துக்கும், ஜனநாயக உரிமைக்கும் மனித உரிமைக்குள் எதிரான செயலாகும். ஆந்திரா, பீகார் மாநிலங்களுக்கு இணையாக மோதல் என்ற பெயரில் எதிர்த்தரப்பினரையும் அப்பாவிகளையும் சுட்டுக் கொன்று புதிய 'சாதனை' படைத்து வரும் மே. வங்க கொலைகாரப் போலீசுக்கு கண்டபடி சுட்டுக் கொல்ல இன்னும் அதிகாரமளித்தால் மாநிலமே மயானமாகிவிடும். ஏற்கனவே பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதத்தை முறியடிப்பது என்ற பெயரில் போலீசு நடத்திய நரவேட்டையும், தமிழகத்தில் வீரப்பன் வேட்டை என்ற பெயரில் அதிரடிப்படை நடத்திய அட்டூழியங்களும் இதற்கு இரத்த சாட்சிகளாக உள்ளன. அதே வழியில் யாரையும் கிரிமினல் முத்திரை குத்தி போலீசு சுட்டுக் கொல்லவும், கிரிமினல் பட்டியலில் சேர்த்து விடுவதாக மிரட்டி அப்பாவிகளிடம் பணம் பறிக்கவும், ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கவும் போலீசுக்கு வரம்பற்ற அதிகாரம் அளிக்கவும்தான் புத்ததேவ் உத்திரவு போட்டுள்ளார்.

போலி கம்யூனிஸ்டுகள் புதிய முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யாவை ஜோதிபாசுவின் அரசியல் வாரிசு என்கிறார்கள். ஆனால், அவரோ தொழிலாளர்களை ஒடுக்குவதிலும், கொலைகாரப் போலீசுக்கு எல்லையில்லா அதிகாரம் வழங்கி திமிராகக் கொக்கரிப்பதிலும் பாசிச ஜெயலலிதாவின் உண்மையான அரசியல் வாரிசாக உருவாகி வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# பெருகி வரும் பாலியல் வன்முறை
# அதிகாரக் கிரிமினல்கள் உடந்தை

மனித இனத்தின் சரிபாதியாக இருக்கும் பெண்கள் அதற்குரிய பெருமிதத்தோடுதான் நடத்தப்படுகிறார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பெண்ணை ஒரு சமூக உயிரியாக அல்ல; தீனி போட்டு வளர்க்கும் வீட்டு விலங்காகக் கருதும் சமூக மதிப்பீடு கால மாறுபாடுகளால் அப்படியொன்றும் கலைந்து விடவில்லை. படிப்பதற்காகக் கல்லூரிக்கும், உழைப்பதற்காக அலுவலகத்துக்கும் செல்லும் பெண்கள் முன்பைவிட இப்போது அதிகரித்திருப்பது உண்மைதான். இருந்தபோதும் பெண்ணை வேலைக்காரியாக, அடிமையாக, இச்சைப் பொருளாக பார்க்கும் ஆணாதிக்கப் பார்வை கிஞ்சித்தும் மாறிவிடவில்லை. மாறாக, இந்த அடிமை விலங்கையே பெண் விருப்பப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் விதமாகப் பயிற்றுவிக்கப்படுவதும், நியாயப்படுத்துவதும்தான் நிலவும் வெகுசன ஊடகங்கள், கலை, இலக்கிய வடிவங்கள், மதம், அரசு போன்ற நிறுவனங்கள் அனைத்தின் ஊடாகவும் செயல்படும் பெரும்பான்மையான கருத்தாக்கமாக இருக்கிறது. இதன் விளைவாக பெண் தன் சிறுவயது முதலே ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு அசைவையும் 'என்ன நேருமோ?' என்ற அச்சத்துடனும், அலைகழிப்புடனுமே எதிர்கொள்கிறாள். இந்த அச்சுறுத்தலின் உச்சக்கட்டம்தான் பாலியல் வன்முறை.

பாலியல் வன்முறை பெண்ணை உடல் ரீதியாக ஒடுக்குவது மட்டுமல்ல; மனரீதியாகவும் முடங்க வைக்கும் விதமாக செயல்படுகிறது. பாலியல் வன்முறையில் பாதிக்கப்படும் பெண்களை இச்சமூகம் அருவெறுப்போடு ஒதுக்கியே வைக்கிறது. இதற்கு பயந்தே பெரும்பாலான பெண்கள் தனக்கு நேர்ந்த அடக்குமுறையைப் பெற்றோர்களிடமோ, நெருங்கிய உறவினர்களிடமோகூட வெளிப்படுத்தாமல், தனக்குள்ளேயே புழுங்குகின்றனர். சிலர் தற்கொலையும் செய்து கொள்கின்றனர். இவற்றையும் மீறி நீதிகேட்டு வரும் பெண், போலீசும், நீதிமன்றமும், பத்திரிக்கைகளும் கோரும் 'சாட்சிக்கும் நிருபணத்துக்கும்' எங்கே போவது? இத்தகைய அவமானங்கள் எதுவும் ஆணுக்கில்லை. பொதுவாய் இது போன்ற சம்பவங்களில் ஈடுபடும் ஆண்கள் ரவுடிகள், பொறுக்கிகள் என்று சித்தரிக்கப்படுவதும், முன்னைவிட அதிகமாக அவனைக் கண்டு பயந்து ஒதுங்குவதும்தான் நடைமுறையில் இருக்கிறது. அவனே ஒரு அரசு அதிகாரியாகவோ, சமூக செல்வாக்கும், பணபலமும் உடையவனாகவோ இருந்து விட்டால் இந்தக் 'கறையும்' உறுத்தலில்லாமல் அங்கீகரிக்கப்படுகிறது.

தான் வரைந்திருக்கும் அடிமைக் கோட்டினைத் தாண்ட எப்போதெல்லாம் பெண் முயற்சி செய்கிறாளோ அப்போதெல்லாம், தனது ஆளுமையை எப்போதெல்லாம் ஆண் நிலைநாட்ட வேண்டுமென்று நினைக்கிறானோ அப்போதெல்லாம் பாலியல் வன்முறையும் ஒரு ஆயுதமாக ஆண்களால் பிரயோகிக்கப்படுகிறது.

நீதா கோசுவாமி தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். சூரத் நகருக்கு அருகேயுள்ள தன் சொந்த கிராமத்தில் சௌராஷ்டிரா சாதியைச் சேர்ந்த மூன்று நபர்களால் பலாத்காரம் செய்யப்படுகிறார். கிராமத் தலைவருக்கான தேர்தலில் பங்கேற்கப் போவதாக இவர் அறிவித்ததும் இத்தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்டது. வழக்கை புகார் செய்தபோது பதிவு செய்ய மறுத்து இவருக்கே அறிவுரை வழங்கியது போலீசு. தினம் தினம் பரப்பப்படும் அவதூறுகளுக்கும், மிரட்டல்களுக்கும் பயந்து தன் இரண்டு குழந்தைகள், கணவரோடு தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் நீதா கோசுவாமி.

ஒரு தாழ்த்தப்பட்டவர், கிராமத் தலைவராக அதிகாரத்துக்கு வருவதா? என்பதுதான் அடிப்படையான பிரச்சனை. இவரே ஆணாக இருந்திருந்தால் மேலவளவு முருகேசனைப் போல் படுகொலை செய்யப்பட்டிருப்பார். 'பெண்தானே! படுகொலை எதற்கு?' என்று அதைவிடக் கொடூரமாக, உயிரோடு பிணமாக்கும் தாக்குதலாக பாலியல் வன்முறை ஏவிவிடப்பட்டுள்ளது.

இது ஒரு உதாரணம்தான். மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட பெண்களைப் பலாத்காரம் செய்வது மனித உரிமை மீறலாகப் பார்க்கப்படுவதில்லை. மாறாக அதை ஒரு உரிமையாகவே ஆதிக்கச் சமூகம் அங்கீகரித்திருக்கிறது. இந்த மனுதர்மத்தையே பன்வாரி தேவி வழக்கில் "குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் கௌரவமான சாதியைச் சேர்ந்தவர்கள். பாதிக்கப்பட்ட பெண்ணோ மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். இவர்கள் இவரை 'பலாத்காரம்' செய்திருப்பார்கள் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது" என்று வழிமொழிந்தது உச்சநீதி மன்றம்.

சமீபத்தில் தேசிய பெண்கள் கமிசன் என்ற அமைப்பின் பிரதிநிதி பூர்ணிமா அத்வானி, பிரதமர் வாஜ்பாயிடம் 'கற்பழிப்பு - ஒரு சட்ட ஆய்வு' என்ற அறிக்கையை அளித்தார். இவர் மட்டுமல்ல, பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் 'பெண்களின் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுக்க சட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டும்' என்று கோருகின்றன. ஆனால் அதற்கான அருகதை இந்த அரசுக்கு உண்டா?

ஹரியானாவைச் சேர்ந்த உயர் போலீசு அதிகாரியான ரதோர் கடந்த 1990-ம் ஆண்டு தனது மகளின் பள்ளிக்கூடத் தோழியான ருசிகாவிடம் தகாத முறையில் நடந்து கொண்டார். ருசிகாவின் தோழி ரீமுவின் பெற்றோர் மூலம் இச்சம்பவம் வெளியே தெரிய வருகிறது. அதன்பிறகும் அரசு ரதோரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனம் குமைந்த ருசிகா மூன்று



கிராமத் தலைவர் தேர்தலில் நின்றதால் பலாத்காரம் செய்யப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த நீதா கோசுவாமி, தன் கணவருடன்



படிப்பகம்

www.padippakam.com

ஆண்களுக்கு பிறகு தற்கொலை செய்து கொண்டார். அம்மாநில முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலாவுடன் உள்ள உறவின் பின்னணியில் ரதோர் இன்னமும் உயர் போலீசு அதிகாரியாகவே வலம் வருகிறார்.

மத்திய பிரதேசத்தில் ஷிவ்புரி மாவட்டத்தில் பசுமாட்டின் மீது லாரி மோதிய சாதாரண வழக்கில் மாட்டுக்குச் சொந்தக்காரியான ஒரு பெண் குடும்பத்தோடு விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டார். அப்பெண்ணை மாவட்ட ஆட்சியரும், போலீசு அதிகாரியும் சேர்ந்து போலீசு நிலையத்திலேயே பலாத்காரம் செய்தனர். நடந்ததை வெளியில் சொல்லக் கூடாதென்று மிரட்டி, உப்புக்குப் பெறாத அவ்வழக்கில் சிறையிலும் அடைத்தனர். சில பெண்கள் அமைப்புகளின் உதவியோடு அப்பெண் முதல்வர் வீட்டின் முன் நீதிக் கேட்டுப் போராடிக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட இரு வழக்குகளிலும், 'பாதிக்கப்படும் பெண்களால் தன்னை எதுவும் செய்து விட முடியாது' என்கிற அதிகாரத் திமிரல்லவா வெளிப்படுகிறது. இது ஏதோ சில தனிப்பட்ட அதிகாரிகளின் தவறான நடத்தை என்று ஒதுக்கிவிட முடியுமா?

வாச்சாத்தியில் தமிழக காட்டிலாகா அதிகாரிகள், ஊழியர்களும், 'வீரப்பனைத் தேடுகிறோம்' என்று தமிழக, கர்நாடக வனப்பகுதிகளில் அதிரடிப் படையும் நடத்திய மிருகத்தனமான பாலியல் வேட்டை, மனித உரிமைகளைக் காலில் போட்டு நசுக்கியது எல்லோருக்கும் தெரிந்ததே! இந்திய இராணுவம் 'அமைதிப் படை' என்ற பெயரில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதும், காசுமீர் முதலான எல்லையோர பகுதிகளிலும் நிகழ்த்திய பாலியல் சூறையாடலுக்கும் இன்றுவரை எந்த விசாரணையும் இல்லை; எந்தத் தண்டனையும் இல்லை. மாறாக, இவர்களே தேசத்தைப் பாதுகாக்கும் 'மாவீரர்களாக' பதக்கம் கொடுத்து கௌரவிக்கவும்படுகிறார்கள்.

'பாலியல் வழக்குகளில் கைது செய்யப்படும் குற்றவாளிகளைத் தூக்கிலிட வேண்டும்' என்பது உள்துறை அமைச்சர் அத்வானியின் கூற்று. ஆனால், பா.ஜ.க. அரசாங்கமோ நடைமுறையில் எப்படியிருக்கிறது? பாலியல் வன்முறைக்கு ஆளாக நேரிடுமென்பதால், பாதுகாப்புக் கருதிப் பெண்கள் 'முன்கூட்டியே காப்பீடு செய்து கொள்ள வேண்டும்' என்று ஒரு வக்கிரமான திட்டத்தை அறிவித்து, பின் பலதரப்பட்ட எதிர்ப்பால் கைவிட்டது ஒருபுறம்; சிறுபான்மை கிறித்துவ பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்ட போது, 'தேசிய உணர்வின் வெளிப்பாடு' என்று நியாயப்படுத்தியது மறுபுறம்; பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு நிகழ்ந்த வன்முறைகளில் இந்து மதவெறியர்கள் முசுலீம் பெண்களைச் சூறையாடியதோடு, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை பெண்களை அதே அச்சுறுத்தலில் நிறுத்தியும் வைத்திருக்கிறது இன்னொரு புறம்.



பிரதமர் வாஜ்பாயிடம் 'கற்பழிப்பு - ஒரு சட்ட ஆய்வு' என்ற அறிக்கையை அளிக்கும் தேசிய பெண்கள் கமிசன் பிரதிநிதி பூர்ணிமா அத்வானி.

பொதுவாகவே எல்லா சமூகப் பிரச்சனைகளிலும் தன்னை ஒரு நடுநிலையாளனாக, நியாயவானாகக் காட்டிக் கொள்வதே அரசின் இயல்பு. பாலியல் வன்முறையிலும் அப்படித்தான். பாதிக்கப்படும் பெண்ணுக்கு நிவாரணத் தொகை வழங்குவதன் மூலமும் பெயரளவிலான சட்டமியற்றுவதன் மூலமும் ஆணாதிக்கத்தின் கருவியாக புழுத்து நாறுவதை அரசு மூடி மறைத்து விடுகிறது.

ஆக, பெண்களின் மீது இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிரான போராட்டம் சட்டமியற்றச் சொல்லும் கோரிக்கையாக சுருங்கி விட முடியாது. அது போலீசு, இராணுவம், அரசியல் கிரிமினல்கள், அதிகாரிகள், நீதிமன்றம் இவற்றை எதிர்த்த போராட்டமாக, மொத்தத்தில் அரசை வீழ்த்தும் போராட்டமாக மாறவேண்டும். இந்த அரசுதான் பழைய நிலபிரபுத்துவ உறவுகளைக் கட்டிக் காத்துக் கொண்டும், ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தைத் தாராளமாக அனுமதித்துக் கொண்டும் ஆணாதிக்கத்துக்குச் சேவை செய்து வருகிறது. பெண்கள் தங்கள்மேல் திணிக்கப்படும் எல்லாவித ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபட வேண்டுமானால், அதற்கு இடையூறாக இருக்கும் இந்த அரசு இயந்திரத்தை வீழ்த்துவது ஒன்றே அவசியமானதும், தவிர்க்க முடியாதது ஒரே தீர்வுமாகும்.

● கவி

மத்திய பிரதேசம் ஷிவ்புரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் மற்றும் போலீசு அதிகாரியால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண், முதல்வர் வீட்டின் முன் நடத்தும் போராட்டம்.



## கந்திலி சந்தை கேட் கொள்ளையரை எதிர்த்து தொடரும் போராட்டம்

திருப்பத்தூர் அருகேயுள்ள கந்திலி கிராம சந்தையில் ஒப்பந்தக்காரர்கள் நடத்தும் பகற்கொள்ளை பற்றியும், அதை எதிர்த்து அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணி தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருவதையும் ஏற்கனவே செய்தியாக வெளியிட்டிருந்தோம். (பார்க்க: புதிய ஜனநாயகம் 16-31 - டிசம்பர் 2000)

இதன் அடுத்த கட்டமாக 13.01.2001 அன்று காலை 'பகல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தும் போராட்டம்' என்று அறிவித்து விவசாயிகள் விடுதலை முன்னணி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் பெருவாரியாகப் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோழர்களைக் கைது செய்து மாலையில் விடுவித்தது போலீசு. எனினும் சுங்கவரி கொள்ளை, அதிகாரிகள் ஆதரவுடன் தொடர்வதால் அடுத்த கட்டமாக போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறது வி.வி.மு.

தகவல்: வி.வி.மு., வேலூர், தருமபுரி மாவட்டங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# தாராளமய தாசர்களும் நவீன எட்டப்பர்களும்

ஏப்ரல் 1-க்கு என்ன முக்கியத்துவம் என்று கேட்டால், ஆரம்பப் பள்ளியில் படிக்கும் சிறுவன் கூட, ''அன்னைக்கு முட்டாள்கள் தினம்'' எனப் பளிச்சென்று கூறி விடுவான். ''அன்னைக்கு புதுச்சட்டை போட்டுக்கிட்டு வெளியே போயிடாதீங்க சார்; பசங்க இங்க் அடிச்சிடுவானுங்க'' என்று ஆலோசனையும் வழங்குவான்.

வருகின்ற ஏப்ரல் 1 அன்று எத்தனை இந்தியர்களின் சட்டைக்கு ஆபத்து காத்திருக்கிறது என்று இப்போது என்னால் சொல்ல முடியாது. ஆனால், தோராயமாகச் சொன்னால் 70 - 80 கோடி இந்தியர்களின் கோவணத்திற்கு ஆபத்து காத்திருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

தாராளமயத்திற்கு முன்பு உள்நாட்டு சிறுதொழில்கள், விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், கிட்டதட்ட 8,000 பொருட்களை அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்குத் தடைகள்/கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. தாராளமயத்திற்குப் பிறகு, இத்தடைகள்/கட்டுப்பாடுகள் படிப்படியாக ஒழித்துக் கட்டப்பட்டு வருவதன் உச்சகட்டம் ஏப்ரல் 1 அன்றுதான் அரங்கேறப் போகிறது.

அரிசி, கோதுமை, சோளம், தினை, சமையல் உப்பு, தேநீர், காபி, பால் பொருட்கள், பாக்கு, ஆப்பிள் - போன்ற உணவுப் பொருட்கள்; துணி வகைகள், ஆயுத்த ஆடைகள், பட்டு நூல் - போன்ற நெசவுப் பொருட்கள்; தங்கம், வெள்ளி, பிளாட்டிணம், மரகதம், மாணிக்கம், நீலக்கல் ஆபரணங்கள்; சிகரெட், விஸ்கி, வோட்கா, ரம், பீர், பயன்படுத்தப்பட்ட கார்கள், ஜீப்புகள் போன்ற ஆடம்பர நுகர் பொருட்கள்; இவை மட்டுமின்றி, பணக்கார வீட்டுச்செல்லப் பிராணிகளான நாய்க்கும், பூனைக்கும் தேவைப்படும் பிஸ்கெட்டுகளைக் கூட எவ்வளவு வேண்டுமானாலும் இறக்குமதி செய்து கொள்ளலாம்; இந்தியாவில் விற்றுக் கொள்ளலாம்.

பா.ஜ.க. எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, ''உருளைக் கிழங்கு வறுவல் தயாரிக்கும் தொழில்நுட்பம் நமக்குத் தேவையில்லை. கணினி சில்லு (கம்ப்யூட்டர் சிப்ஸ்) தயாரிக்கும் தொழில் நுட்பம்தான் தேவை'' என்று சுதேசி சவடால் அடித்தது. ஆனால், அவர்கள் ஆட்சியில்தான், ''இந்தியர்களுக்கு, அந்நியத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருளைக் கிழங்கு வறுவல் தயாரிக்கும் ஆற்றல்கூட இனி தேவையில்லை. அந்நிய நாட்டு உருளைக் கிழங்கு வறுவலைத் திண்ணும் வாய்கள் இருந்தால் மட்டும் போதும்'' என்ற கேவலம் நடைமுறைக்கு வருகிறது.

அந்நியப் பொருட்கள் இறக்குமதிக்குத் தடைகள் நீக்கப்படுவதால், உள்நாட்டுத் தொழில் நசிந்து போகும் எனக் கூறுவது, தேவையற்ற பயம் என வாதிடுபவர்கள், தாராளமயத்திற்குப் பிறகு சாலிடெர், டயோனரா, ஆல்வின் போன்ற நிறுவனங்களுக்கு நேர்ந்த கதியை நினைத்துப் பார்ப்பது நல்லது.

தொலைக்காட்சி சேவை இந்தியா வெங்கும் பரவலாக அறிமுகமானபொழுது, சாலிடெர், டயோனரா, எல்காட் தொலைக் காட்சி பெட்டிகள்தான் பெரும்பாலான வீடுகளில் இருந்தன. குளிர்சாதனப் பெட்டி, ஸ்கூட்டர் விற்பனையில், ஆந்திர அரசுக்குச் சொந்தமான ''ஆல்வின்'' நிறுவனம்கூட வலுவாக இருந்து வந்தது.

தாராளமயம் நடைமுறைக்கு வந்த பிறகு ஐவா, சாம்சங், நேஷனல், சான்சுயி உள்ளிட்ட பல அந்நிய நாட்டு நிறுவனங்களின் நுகர்பொருள் தயாரிப்புகள் இந்தியாவினுள் நுழைந்தன. இப்பொழுது, சாலிடெர், டயோனரா தொலைக்காட்சி பெட்டிகளையும், ஆல்வின் நிறுவனத்தின் தயாரிப்புகளையும் தேடி காயலாங் கடைக்குப் போனால்கூட கிடைக்காது என்பதுதான் கசப்பான உண்மை.

வரும் ஏப்ரல் 1 தொடங்கி ஆடம்பர நுகர்பொருட்களை மட்டுமல்ல, அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கூட இறக்குமதி செய்து விற்கலாம் எனுமளவுக்குத் தாராளமயம் மிகவும் தீவிரமாக நடைமுறைக்கு வரவுள்ளது. இதனால், சாலிடெர், டயோனரா போன்ற நிறுவனங்களுக்கு நேர்ந்த கதி, இந்திய விவசாயத்துக்கு நேரக் கூடிய அபாயம் உருவாகியிருக்கிறது.

''இப்படி எச்சரிப்பதெல்லாம் போட்டியிடப் பயப்படுவர்களின் அழுகுணி வாதம்; பத்தாம் பசலித்தனம்'' எனத் தாராளமயத்தின் ஆதரவாளர்கள் சாடுகிறார்கள். மேலும், இந்திய நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருளை, உலகத் தரம் வாய்ந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வாய்ப்பைத் தாராளமயம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. எனவே, தாராளமயத்தை எதிர்ப்பது, இந்திய நுகர்வோனின் தேர்ந்தெடுக்கும் உரிமையை மறுப்பதாகும்; அவன் கொடுக்கும் பணத்திற்கு, உலகத்தரம் வாய்ந்த பொருள் கிடைக்கும் வாய்ப்பை மறுத்துவிட்டு, இந்தியத் தரம் மட்டுமே கொண்ட அல்லது உலகத்தரமற்ற பொருளை அவன் தலை யில் கட்டுவதாகும்'' என அவர்கள் தர்க்க வாதம் செய்கிறார்கள்.

அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால், இந்திய மக்கள் அனைவரும் கையில் பணத்தை வைத்துக் கொண்டு, 'எப்படா நமக்கு உலகத்தரம் வாய்ந்த பொருள்கிடைக்கும்' என்று ஏங்கிக்

சென்னைக்கு அருகிலுள்ள மங்களா ஏரிக் குடியிருப்புப் பெண்கள் குடிநீர் வழங்கக் கோரி நடத்திய சாலை மறியல்.





படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்ததைப் போலவும், அந்த ஏக்கத்தை உலகமயம் தீர்த்து வைப்பது போலவும் தோன்றும். தாராளமயத்தின் முன்னும் சரி, அதன் பின்னும் சரி இந்திய மக்கள் அனைவரின் வாழ்க்கையும் இது போலவா இருந்தது? இருந்து வருகிறது?

தாராளமயத்திற்கு முன்பும், இந்தியாவில் ஆடம்பர நுகர்பொருள் கிடைப்பதற்கு எந்தப் பஞ்சமும் இருந்ததில்லை. ஆனால், ஒரே வேறுபாடு என்னவென்றால், அவையெல்லாம் இந்தியத் தரத்தில் கிடைத்து வந்தன. கார்களை எடுத்துக் கொண்டால், அம்பாஸிடர், ஃபியட்; இரு சக்கர வாகனங்கள் என்றால், லாம்பி, ஜாவா, என்ஃபீல்ட். துணிமணி வகைகள் என்றால் பாம்பே டையிங், பின்னி... இப்படி இந்தப் பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தாராளமயத்திற்கு முன்பு, எல்லா இந்தியர்களும், ஒருவர் பாக்கியின்றி, வேறுவழியின்றி இந்தப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தும் அளவிற்கா வசதியுடன் இருந்தார்கள்? பதினைந்து வருடங்களுக்கு முன்பு, ஒரிசாவின் கலாகந்தி மாவட்டத்தில் இறந்து போன விவசாயிகள், ஒரு வேளை சோத்துக்கு வழியின்றி பட்டினியால் மாண்டு போனார்களேயன்றி, இந்திய நுகர்பொருட்களை வாங்க முடியவில்லை என்பதனாலோ, அல்லது உலகத் தரம் வாய்ந்த பொருட்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தாலோ செத்துப் போகவில்லை.



தனியாருக்குப் போட்டியாக சென்னையில் இயங்குகின்ற அரசின் சொகுசுப் பேருந்து. இருபத்தைந்து ரூபாய் கொடுத்து உழைக்கும் மக்கள் அன்றாடம் இதில் பயணம் செய்ய முடியுமா?

இந்தியத் தரம் வாய்ந்த அரிசி, கோதுமையைக் கூட வாங்க முடியாதவனிடம், "இதோ உலகத்தரம் வாய்ந்த அரிசி, கோதுமை வந்துவிட்டது; வாங்கிச் சாப்பிடு" எனக் கூறுவதை, வஞ்சனை என்பதா? வக்கிரம் என்பதா? பிரெஞ்சு புரட்சி நடப்பதற்கு முன், அந்நாட்டு மக்கள் ரொட்டி வாங்க முடியாமல் பசியால் துவண்டு கிடந்தபொழுது, அந்நாட்டின் ராணியாக இருந்த மேரி ஆன்டனாய்ட் "ரொட்டி கிடைக்கவில்லையென்றால், கேக் சாப்பிடுங்கள்" எனத் திமிராகக் கூறினாள். அந்த எதேச்சதிகாரத் திமிர், கொழுப்பு இப்பொழுது நாடாளுமன்றத்தின் வழியே, ஓட்டுக் கட்சிகளின் வழியே, முதலாளித்துவ கூலி எழுத்தாளர்களின் வழியே வழிகிறது.

ஆடம்பர நுகர்பொருட்களை விட்டுவிடுவோம். அத்தியாவசியப் பொருட்கள்/சேவையில் கூட, உலகத்தரம் வாய்ந்ததைப் பயன்படுத்துபவர்கள் யார்?

சென்னையில் பிறந்து, வளர்ந்து, (அமெரிக்காவில் குடியேறி) இப்பொழுது அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவனமான "பெப்சி"யின் தலைவராகிவிட்ட இந்திரா நூயி கிருஷ்ணமூர்த்தி, சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபொழுது, "இங்கே தண்ணீர் குடிக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது; பெப்சியோ, மிரண்டாவோ குடிப்பது பாதுகாப்பானது" என்றார்.

இந்திரா நூயி கிருஷ்ணமூர்த்தி என்ற மேட்டுக்குடிப் பெண் நமது மாநகராட்சியின் தண்ணீரைக் குடிக்கப் பயப்படுகிறார். நமது வீட்டுப் பெண்களோ "அந்தத் தண்ணீரை ஒழுங்காகக் கொடு" என்று கோரி, அடிக்கடி குடங்களுடன் மறியல் போராட்டம் நடத்துகிறார்கள்.

காசை விட்டெறிந்தால் "மினரல் வாட்டர்" கிடைக்கும் உலகமயக் காலத்தில் இந்தப் பெண்கள் மாநகராட்சியின் தண்ணீருக்காக, அதுவும் சுகாதாரமற்ற குடிநீருக்காக ஏன் சாலை மறியல் போராட்டம் நடத்த வேண்டும்? போலீசிடம் உதைபட வேண்டும்? கிராமப்புறப் பெண்கள் இன்னும் ஏன் குளத்து நீரைக் குடிக்க வேண்டும்? இல்லை, குடி தண்ணீரைத் தேடிக் கொண்டு நாயாய் அலைய வேண்டும்?

அரசாங்கம் நடத்தும் "சூப்பர் டீலக்ஸ்" பேருந்துகளைவிட, தனியார் நடத்தும் "ஆம்னி" பேருந்துகள் சொகுசானவைதான். சிறிதளவுகூட ஓட்டை உடைசல் இல்லாதவைதான். ஆனாலும், பெரும்பாலான மக்கள் வெளியூர்ப் பயணம் போவதென்றால், அரசாங்கப் பேருந்தை எதிர்பார்த்துதானே, எரிச்சலையெல்லாம் சகித்துக் கொண்டு, கால் கடுக்க காத்துக் கிடக்கிறார்கள்.

அந்தப் பேருந்தில் உட்கார இடம் கிடைக்கவில்லையென்றால் கூட நின்று கொண்டோ, கூட்டம் பிதுங்கி வழிந்தால் தொங்கிக் கொண்டோதானே ஊர்போய்ச் சேருகிறார்கள். கிராமத்தில் இருந்து நகரத்திற்குப் பஞ்சம் பிழைக்க வரும் கூலி விவசாயக் குடும்பங்களோ, லாரிகளின் பின்புறம் சரக்கு மூட்டைகளைப் போன்றல்லவா பயணம் செய்கிறார்கள். இந்த இம்சையையெல்லாம் இவர்கள் ஏன் உலகமயமாக்கத்திற்குப் பின்னும் சகித்துக் கொள்ள வேண்டும்? தனியாரின் தரமான சேவையை இவர்கள் ஏன் பயன்படுத்திக் கொள்வதில்லை?

பேருந்துச் சேவையை மட்டுமல்ல, மிகவும் அத்தியாவசியமான மருத்துவ சேவையிலும் தாராளமயம் கொண்டு வந்திருக்கும் உலகத்தரத்தை பெரும்பாலான இந்திய மக்களால் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. எப்படிதான் தரமற்றதாக இருந்தாலும், என்னதான் நடந்தாலும் அரசாங்க மருத்துவமனைதான் நமக்கு கதி என்று நினைக்கின்றனர்.

இந்திரா நூயி கிருஷ்ணமூர்த்தி போன்ற மேட்டுக்குடியினர் உலகத்தரம் வாய்ந்த பொருள்/சேவையினை விலைக்கு வாங்கி அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது, பெரும்பாலான இந்திய மக்களால் அதை நினைத்துக்கூட பார்க்க முடிவதில்லை. இதற்கான காரணத்தை இங்கே புதிதாக விளக்கத் தேவையுமில்லை. அதேசமயம், பெரும்பாலான உழைக்கும் மக்கள், "சாலை போட்டுக் கொடு; குடிநீர் வசதி செய்து கொடு; மருத்துவமனையை ஒழுங்காக நடத்து" என்று கோரிதான் அடிக்கடி போராட்டம் நடத்துகின்றனர். ஆனால், மேட்டுக்குடியினரும், நடுத்தர வர்க்கத்து கனவான்களும், "பொருள்/சேவை அனைத்தும் இந்திய மக்களுக்குத் தரமாகக் கிடைக்க வேண்டும் என்றால், (உலகமயமாக்கத்திற்குப் பின் தரம் என்றால் உலகத்தரம்தான்; அதற்கு வேறு பொருள் கிடையாது) அரசாங்கம் எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட வேண்டும்; அனைத்தையும் தனியாரிடம் ஒப்படைத்து விட வேண்டும்" என்கிறார்கள்.

போலீசையும், இராணுவத்தையும் தவிர, பாக்கி அனைத்தையும் அரசாங்கம் தனியாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் விருப்பம். இதைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், அரசு என்பது அடியாள் பட்டாளமாக, கூலிப்படைக் கும்பலாக இருக்க வேண்டும் என்பதுதான்.

எல்லாமும் தனியாரிடம் போனால் நிலைமை எப்படி விபரீதமாகப் போகும் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போம். பேருந்து முதலாளிகள் இலாபமில்லை என்று கூறி, கிராமத்திற்கு பேருந்து வசதி செய்துதர மாட்டார்கள். பேருந்து சேவையில் அரசாங்கத்தின் கட்டுப்பாடும் இல்லாமல் போவதால் கட்டணமும் இரண்டு, மூன்று மடங்காக எகிறிவிடும். ஏன்? எப்படி? என்ற கேள்வியெல்லாம்


படிப்பகம்

www.padippakam.com

எழுப்ப முடியாது.

உற்பத்தியான நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்யாது. விவசாயிகள், மண்டி வியாபாரிகளின் கைகளைத்தான் நம்பி இருக்க வேண்டியிருக்கும். தனியார் வங்கிகள் விவசாயிகளுக்குக் கடன் தரப் போவது கிடையாது. பிறகு, விவசாயிகள் கடன் வாங்க கந்து வட்டிக்காரனைவிட்டால் வேறு போக்கிடமே கிடையாது.

நோய் - நொடி என்று வந்துவிட்டால் தனியார் மருத்துவமனையில் போய்ப் படுத்துக் கொண்டு வைத்தியம் பார்த்துக் கொள்ள நம்மிடம் காசு - பணம் இருக்காது; அடகு வைத்துப் பணத்தைப் புரட்டுமளவுக்கு அண்டா குண்டாவோ நகை நட்டோ தேறாது. எந்தவொரு தனியார் மருத்துவமனையும் உலகத்தரம் வாய்ந்த சேவையை, ஏழைகளுக்காவது இலவசமாகச் செய்து கொடுப்போமே என்று முன்வரப் போவதும் கிடையாது.

''இதையெல்லாம் செய்து கொடு'' என்று நாம் தனியாரிடம் போய் உரிமையோடு கேட்க முடியாது. வரி வசூலிக்கும் அரசாங்கத்திடம் உரிமையோடு கேட்டுப் போராடினால், அதிகார வர்க்கம் அடியாள் படையை அனுப்பி வைக்கும். காசு இருப்பவனுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்குவதாகக் கூறும் தாராளமயம், காசு இல்லாதவனை, எந்தவித உரிமைகளும் அற்ற, பலிகிடாவாக மாற்றி விடுகிறது.

அவர்கள் உலகத்தரம் வாய்ந்த அரிசியையும், கோதுமையையும் வாங்கித் தின்ன வேண்டும் என்பதற்காக, நமக்கு ரேஷன் மூலம் அரிசியும், கோதுமையும் குறைந்த விலையில் கொடுக்கக் கூடாது என்கிறார்கள். மின்சாரத் துறையில் முதலீடு செய்த என்ரானும், இந்துஜாவும் இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை ரத்து செய்யச் சொல்கிறார்கள். உலகத்தரம் வாய்ந்த கார், டி.வி., துணிமணிகள், அழகு சாதனப் பொருட்களை அவர்கள் வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சுங்க வரியைக் குறைக்கச் சொல்லுகிறார்கள்; இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கச் சொல்கிறார்கள். அதனால் ஏற்படும் பற்றாக்குறையைச் சமாளிக்க மானியங்களை வெட்டச் சொல்லுகிறார்கள்; பொதுத் துறையை விற்கச் சொல்கிறார்கள்; சுயவிருப்பு ஓய்வுத் திட்டத்தின் (வீ.ஆர்.எஸ்.) மூலம் தொழிலாளர்களை வேலையை விட்டே துரத்தியடிக்கிறார்கள்.

உலகமயமும், தாராளமயமும் உலகத்தரம் வாய்ந்த பொருளையும், சேவையினையும் எல்லா இந்தியர்களின் மடியிலும் கொண்டுவந்து கொட்டிவிடப் போவதில்லை. மாறாக, தற்பொழுது பெரும்பாலான இந்திய மக்களுக்குக் கிடைத்துவரும் அரைகுறை தரமான சேவையினையும், பொருட்களையும் தட்டிப் பறிப்பதாகவே இருக்கும்.

★★★

உலகமயத்தின் ஆதரவாளர்கள், ''தரம்'', ''தரம்'' என்று கூப்பாடு போடுகிறார்களே, இந்தத் தரத்தை நிர்ணயிப்பது யார்? ''காளிமார்க் கோலாவை விட, கோகோ கோலா இன்னென்ன விதத்தில் தரமானது; அதனால்தான் கோகோ கோலாவைத் தேர்ந்தெடுத்தேன்'' என்று யாராவது ஒரு நுகர்வோர் தனது ''உரிமை''யைச் சோதனை செய்து பார்த்ததுண்டா?

''மைக்ரோ சாஃப்ட்'' நிறுவனம் உலகத் தரம் வாய்ந்த கணினி நிறுவனம் என்று கூறப்படுகிறது. ஆனால், அந்த நிறுவனம் தனது ஏகபோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கணினி - இணையத் தொழில் நுட்பத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்படாமல் தடுத்துவிட்டதாக அமெரிக்க நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.



சாக்கடை அடைப்பை நீக்கும் சென்னை மாநகராட்சித் தொழிலாளி; உலகமயம் இவருக்கு என்ன உரிமைகளை, வசதிகளை வாரி வழங்கியது?

அதாவது, காசுக்கு நுகர்வோனுக்குத் தரத்தைச்சோதித்துப் பார்க்கும் அறிவு கிடையாது. பன்னாட்டு நிறுவனங்களோ, தங்களது பணபலம் மூலம் ஒருபுறம் சாதாரண போட்டியாளர்களை அமுக்கிவிடுகின்றன. ''தங்களது தயாரிப்புகளை விட்டால் உலகத் தரத்தில் வேறு பொருளே கிடையாது'' என்று கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் பிரமையூட்டுகின்றன; ''டாடா'' உப்பு வாங்கிப் பயன்படுத்து; இல்லையென்றால், முன்கழுத்துக் கழலை நோய் வந்துவிடும்'' என்று நுகர்வோனைப் பயமுறுத்துகின்றன.

''வேட்டி கட்டியவன் பட்டிக்காட்டான்; கைலி கட்டியவன் பொறுக்கி; பேண்ட் - சட்டை போட்டவன் படித்தவன், நாகரிகமானவன்'' என்ற கலாச்சார மதிப்பீடுகளைப் போல, ''காலில் நைக் ஷூ; இடுப்பில் பெர்முடாஸ்; மார்பில் டி-ஷர்ட்; கையில் கோலா; கண்களில் ரே-பான் கண்ணாடி'' என்று உலகமயமான மனிதன் உருவகப்படுத்தப்படுகிறான். வெள்ளைத் தோல் - ஆங்கிலம் - அந்நிய நுகர்பொருள் கலாச்சார மோகத்தில் கிறங்கிப் போயிருக்கும் மேட்டுக்குடி கும்பலும், நடுத்தர வர்க்கமும் ''இதுதாண்டா உலகத்தரம்'' என்று அடித்துப் பேசி வருகிறது.

இப்படி உருவாக்கப்படும், வலிந்து திணிக்கப்படும் உலகத்தரத்தைக் கூட, உலகமயத்தின் ஆதரவாளர்கள் எல்லா விசயங்களிலும் பின்பற்றுவதில்லை. தாராளமயத்தின் முன் சாதாரண நகராக இருந்த சென்னையை, இப்பொழுது சிங்கார சென்னையாக மாற்றுவதற்கு ஒரு சிங்கப்பூர் நிறுவனம் (ONYX) இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. குப்பை அள்ளுவதில் உலகத்தரம் வாய்ந்தது எனப் பீற்றிக் கொள்ளும் இந்த நிறுவனம், தனது (சென்னை) தொழிலாளர்களை உள்ளூர் தரத்தில் கூட நடத்துவதில்லை. அந்நிறுவனத் தொழிலாளர்கள் விடுப்பு எடுத்தால் சம்பளம் கிடையாது என்பதோடு, அதற்கு அபராதமும் கட்ட வேண்டும். உலகத்தரம் வாய்ந்த கார்களைத் தயாரிக்கும் ஹூண்டாய் நிறுவனம், சென்னையில் தொழிற்சாலையை நிறுவியதற்குக் காரணமே, தென்கொரியாவை விட இங்கு, தொழிலாளர்களின் உழைப்பை அடிமாட்டு விலைக்குச் சுரண்ட முடியும் என்பதுதான். உலகத்தரத்தைப் பற்றிக் கூப்பாடு போடும் இந்திய ஆளும் வர்க்கத்தினர்தான் தொழிலாளர் நலன் - உரிமை பற்றிய தகுதிகளை உலக வர்த்தகக் கழகத்தில் ஏகாதிபத்தியங்கள் திணிக்க முயன்றபொழுது, கொதித்தெழுந்து எதிர்த்தார்கள்.

உலகத்தர நிர்ணயத்திற்கு, குழந்தைத் தொழிலாளர் உழைப்பு இருக்கக் கூடாது; ஆனால், உலகத்தரம் வாய்ந்த சால்வைகள், ரத்தினக் கம்பளங்கள், தயாரிப்பில் குழந்தைகள்தான் ஈடுபடுத்தப்படுகின்றனர்; பன்னாட்டு நிறுவனங்கள் கூட, குறைந்த கூலியில் உழைப்பைச் சுரண்டுவதற்காகதான் ஏழை நாடுகளில் தொழிற்சாலைகளை அமைக்கின்றன. உலகத்தரம் வாய்ந்த பொருட்கள்/சேவைக்கு நாடுகளின் எல்லைகள் ஒரு பொருட்டே கிடையாது. ஆனால், திறமை வாய்ந்த தொழிலாளி மட்டும் தனது நாட்டின் எல்லையை எளிதாகத் தாண்ட முடியாது.

ஏழை நாடுகளின் தொழிலாளர்களை விடுங்கள். தேர்ந்த நுணுக்கத்தோடும், தரத்



படிப்பகம்

www.padippakam.com

தோடும் ஏழை நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பல பொருட்களும் சாமானியமாக மேலை நாடுகளுக்குள் நுழைந்துவிட முடியாது. இந்தியாவில் இருந்து குட்டைப் பாவாடைகளை இறக்குமதி செய்ய அமெரிக்காவும், சீனாவில் இருந்து ஆயத்த ஆடைகளை இறக்குமதி செய்ய ஜப்பானும் தடைகளை விதித்துள்ளன. ஏழை நாடுகளின் மீது வலுக்கட்டாயமாக உலகமயத்தைத் திணித்து வரும் ஏகாதிபத்திய நாடுகள், இப்படி "லைசென்ஸ் ராஜ்ஜியம்" நடத்தி வருவதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

பொருட்களிலும்/சேவையிலும் உலகத் தரத்தை, "சுதந்திர" பரிமாற்றத்தை விரும்பும் உலகமய ஆதரவாளர்கள்தான், தொழிலாளர்களை அவனது உரிமைகளை யெல்லாம் பறித்து, கொத்தடிமைத்தனத்தில் அமுக்கிவிடத் துடிக்கிறார்கள். தரமான அந்நியப் பொருளோடு போட்டியிட முடியாமல், 'தரமற்ற' உள்நாட்டுப் பொருட்கள் அழிந்து போவதைப் போல, தரமான பொருளை வாங்க முடியாத உழைக்கும் மக்களும் அழிந்து போக வேண்டும் என்பதுதான் இவர்கள் உருவாக்கி வரும் சமூக நியதி. இட ஒதுக்கீட்டிற்கு எதிராக "தகுதி", "திறமை"யைப் பற்றிப் பேசுவதற்கும், பொருட்களில் 'தரம்' பற்றிப் பேசுவதற்கும் பெருத்த வேறுபாடு கிடையாது.

இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் மேல்சாதிக் கும்பல் சாதி ஒழிய வேண்டும் எனப் பேசுவதைப் போல, உலகமய ஆதரவாளர்கள் தாராளமயம் ஏழைகளைப் பாதிக்கக் கூடாது என்கிறார்கள். முன்னாள் பிரதமர்கள் வி.பி.சிங், சந்திரசேகர், தேவே கௌடா மூவரும் கூட்டுச் சேர்ந்து, விவசாயப் பொருட்களைத் தாராள இறக்குமதி செய்ய அனுமதித்ததை எதிர்த்து ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். ஆந்திர முதல்வர் சந்திரபாபு நெல் விவசாயிகளுக்காக மைய அரசோடு மோதுகிறார். மைய வர்த்தகத்துறை அமைச்சர் மாறன், உலகமயத் தாக்குதலில் இருந்து சிறு தீப்பெட்டித் தொழிலைக் காப்போம் என்கிறார். வலது, இடது போலி கம்யூனிஸ்டுகளும், பல்வேறு தன்னார்வக் குழுக்களும் தாராளமயமே கூடாது என்கின்றன. இவ்வளவு ஏன், காங்கிரசைவிடத் தீவிரமாகத் தாராளமயத்தை நடைமுறைப்படுத்திவரும் பா.ஜ.க.வின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்., "சுதேசி" பிரச்சாரம் செய்து வருகிறது.

தாராளமயத் தாக்குதலில் இருந்து உழைக்கும் மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள இவர்களைதான் நம்ப வேண்டுமா? தாராளமய எதிர்ப்பில் இவர்களின் உண்மை முகம் என்ன? ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் மக்கள் விரோத தாராளமய - உலகமயப் பொருளாதாரத்திற்கு மாற்று என்ன என்பது பற்றி அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்)

# தோழர் செல்வராசு படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

★ கரூரில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர் செல்வராசு ரவுடி கும்பலால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து 05.01.01 அன்று ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பு.மா.இ.மு. நடத்திய இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள், பொது மக்கள் உட்பட 200-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



ரவுடித்தனத்தை எதிர்த்த போராட்டத்தில் தோழர் செல்வராசு இறந்ததையும், தோழர் பழனிச்சாமி தாக்கப்பட்டதையும் திரித்து செய்திகள் வெளியிட்ட பத்திரிக்கைகளைக் கண்டித்தும், ரவுடித்தனம் செழித்து வளர்வதற்கு காரணமான இந்த அரசமைப்பை வீழ்த்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், தோழர் செல்வராசின் அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

— தகவல்: பு.மா.இ.மு.,
ஈரோடு.

# வாசகர் கடிதம்

★ அட்டைப்படம் "அயோத்தி: தமிழினத் தலைவர்களின் கர சேவை" என்று எழுதி ராமதாசு, வை.கோ., கருணாநிதி இவர்களைத் தீட்டியுள்ள விதம் அற்புதமான உண்மை.

— செம்மலர் மா. நடராஜன்,
அறந்தாங்கி.

★ கள்ளச் சரக்கு, சீமைச் சரக்கு என்ற சாராய போதையால் சமுதாயம் கெட்டழிந்ததை விடவும் போலீசின் அதிகார போதையால் சமுதாயம் சுட்டுப் பொசுங்கிய கொடுமைதான் தாங்க முடியவில்லை. ஒரிசாவில் சரோஜ் சந்தாவுக்கு இழைத்த போலீசு அக்கிரமத்தை வட்டியும் முதலுமாக ஒருநாள் மக்கள் திருப்பி தருவார்கள் என்பது வெகு நிச்சயம். அதேசமயம், அஞ்சா நெஞ்சமுடன் இந்தச் சீரழிவுகளை எதிர்த்து வீரத்தோழர் செல்வராசு உயர்த்தியாகம் செய்ததும், புரட்சிப் பெண்கள் யசோதா, மாரி ஆகியோரின் போர்க்குணமும் பற்றி பு.ஜ.வில் படித்து மனதில் தெம்பும் நம்பிக்கையும் தோன்றின.

— ஆர்.ஆர். சாமி,
திருவண்ணாமலை.

★ "தாகத்துக்குத் தண்ணீர் கேட்டவரின் வாயில் மூத்திரத்தைப் பெய்த போலீசுகாரன்" படத்தைப் புதிய ஜனநாயகத்தில் பார்த்த கணம் என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. உண்மையாகவும், திண்மையாகவும் செய்திகளைச் சமுதாய நலன் மீது அக்கறை கொண்டு வெளிவரும் பத்திரிக்கை புதிய ஜனநாயகம் என்றால் அது மிகையில்லை.

— காயத்ரி
சொக்கப்பா,
அம்மையப்பன்.

★ புதிய ஜனநாயகம் மக்களின் விடுதலைப் பத்திரம். இடது, வலது போலிகளின் முகத்திரையைக் கிழித்தது சிறப்பாக இருந்தது.

— சி. அசோக்குமார், அம்பத்தூர்.

★ இம்முறை பு.ஜ. அட்டைப்படம் எளிமையாகவும், அருமையான கருத்தோடும் வெளிவந்திருக்கிறது. இருந்தாலும் சிறு குறை. ராமனுக்கு பூணூல் போட மறந்தது ஏனோ? தோழர் செல்வராசு படுகொலையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது, இன்றைய அவசியமாகவும் உள்ளது 'நம்முடைய தயக்கத்தை உடைத்தெறிந்துவிட்டு போர்க் குணத்தோடு செயல்படுவது' என்பது நூற்றுக்கு நூறு உண்மையே! இதைத்தான் இதுவரை சாமான்யமானவர்களாக இருந்த பீமன்தோப்பு பெண்களும் செய்திருக்கின்றனர்.

— வாசகர் வட்டம்,
திருவாரூர்.

★ தோழர் செல்வராசு அவர்களின் உயிர்த் தியாகம் புரட்சிகர உணர்வுள்ளவர்களுக்கும், சமுதாயத்தை நேசிப்பவர்களுக்கும் ஓர் அடையாளம். அதனை சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தும் போதுதான் அவரின் இழப்புக்கு ஈடு செய்வதாக இருக்கும்.

— வாசகர் வட்டம்,
நெய்வேலி.


படிப்பகம்

www.padippakam.com

## ஒரிசா பழங்குடி மக்களின் துயரக்கதை:

# வாழ்வைப் பறித்து முன்னேற்றமா?

ஒரிசா மாநிலத்தின் தென்பகுதியிலுள்ள ரயகடா மாவட்டத்தின் காசிபூர் வட்டாரம். காடுகளில் விறகு பொறுக்குதல், தேன் எடுத்தல், கூடைகள் முடைதல், மழைக்குப் பின் ஒருபோகம் சாகுபடி செய்தல் - என விவசாயத்தையும் கைத்தொழிலையும் சார்ந்துள்ள பழங்குடியின மக்களைக் கொண்ட மைகஞ்ச் கிராமம். அக்கிராமத்தின் எல்லையில் மூங்கில் குழாய்களைக் கொண்ட ஒரு தடுப்பு அரண். அதில் சிவப்பு எழுத்துக்களைக் கொண்ட ஓர் எச்சரிக்கைப் பலகை. "இது எங்கள் பூமி! இதை அந்நியர்கள் அபகரிக்க ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம்! அரசு அதிகாரிகள் - சுரங்க நிறுவன ஊழியர்கள் எவரும் ஊருக்குள் நுழையக் கூடாது!"

இங்கிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவிலுள்ள லட்சுமிபூர் வட்டாரத்திலுள்ள கிராமங்களிலும் இதேபோன்ற எச்சரிக்கைப் பலகையே வரவேற்கிறது. வறட்சிக்கும் பட்டினிச் சாவுக்கும் பேர்போன பின்தங்கிய கலாகந்தி மாவட்டத்தின் துவாமுல்ராம்பூர் வட்டாரமெங்கும் இதேபோன்ற எச்சரிக்கைப் பலகைகள் கிராமங்கள் தோறும் வைக்கப்பட்டுள்ளன.

"எங்கள் போராட்டம் நீதியானது; அமைதியானது. எங்களை வெளியேற்ற அரசு வன்முறையை ஏவினால், இந்த பூமி குருதிச் சேறாக மாறும்" என்று உறுதியுடன் எச்சரிக்கிறார், ராம் ஜோடியா என்ற பழங்குடியின விவசாயி. கடந்த டிசம்பர் 16-ஆம் நாளன்று மைகஞ்ச் கிராமத்தில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி பழங்குடியினர் மூவர் கொல்லப்பட்ட கொடுமையைப் பற்றிக் கூறும்போது அவரது நெஞ்சம் வேதனையில் விம்மித் தணிந்தது. "நாங்கள் கடந்த 5 ஆண்டுகளாக எங்களது வாழ்வுரிமைக்காகப் போராடி வருகிறோம். சுரங்க முதலாளிகளும், அரசு அதிகாரிகளும் போலீசாரும் எங்கள் எதிரிகள். எல்லா ஓட்டுக் கட்சிகளும் முதலாளிகளின் கைக்கூலிகள். எங்கள் நிலத்தையும் வளத்தையும் வாழ்வையும் பறித்துக் கொண்டு அவர்கள் மாநிலத்தைத் தொழில்மயமாக்கி முன்னேற்றப் போகிறார்களாம்! இந்த அநீதிக்கு எதிரான எங்கள் போராட்டம் ஓயாது!" என்று உறுதிபடக் கூறுகிறார் அவர்.

வறட்சியும் பஞ்சமும் பாரித்து, பட்டினியால் மக்கள் பரிதவிக்கும் பின்தங்கிய ஒரிசா மாநிலத்தில் பழங்குடியின விவசாயிகள் வெகுண்டெழுந்து போராடக் காரணம் என்ன?

★★★

ஆந்திராவுக்கு வடகிழக்கில் வங்கக் கடலை ஒட்டியுள்ள ஒரிசா மாநிலம் தாது வளமும் கனிம வளமும் செறிந்த மாநிலமாகும். குரோமியம், நிக்கல் முதலான கனிமங்களும், அலுமினிய உலோகத்தின் மூலப் பொருளான பாக்சைட் கனிமமும் நிறைந்த மாநிலமாகும். குறிப்பாக, பாபிலிமாலி குன்றுப் பகுதியிலும் காடின்காமாலி, சசுபோகுமாலி, சதுராமாலி முதலான பகுதிகளிலும் பல லட்சம் டன் அளவுக்கு பாக்சைட் கனிமங்கள் உள்ளன. காசிபூர் வட்டாரத்தில் நால்கோ எனப்படும் அரசுத்துறை நிறுவனம் பாக்சைட் சுரங்கத் தொழிலிலும், அலுமினிய உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகிறது.

தாராளமயக் கொள்கையைத் தொடர்ந்து, 1995-இல் பாக்சைட் கனிம வளத்தைச் சூறையாட தனியார் - அந்நிய முதலாளிகளுக்குத் தாராள அனுமதி அளிக்கப்பட்டது. டாடா, பிர்லா ஆகிய தரகுப் பெருமுதலாளிகள் மட்டுமின்றி, நார்வேயின் ஹைட்ரோ அலுமினியம், கனடாவின் அல்கான் முதலான அந்நிய நிறுவனங்களும் பாக்சைட் கனிமச் சுரங்கத் தொழிலில் இப்போது இறங்கியுள்ளன. குறிப்பாக, பிர்லா குழுமத்தின் உத்கல் அலுமினியா - இண்டால் நிறுவனம் 1750 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயல்படத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் நூறு சதவீத ஏற்றுமதி அடிப்படையிலானது.

பாக்சைட் கனிமவளப் பகுதியானது பழங்குடி மக்கள் நிறைந்த ரயாகடா, கோரபுட், கலாகந்தி மாவட்டங்களில் உள்ளது. பழங்குடி மக்கள் தமது நிலங்களைச் சட்டபூர்வமாக உரிமையாக்கிக் கொண்டதில்லை. தமது கிராமத்தின் பெரியவர்கள் முன்னிலையில் வாய்வழி ஒப்பந்தம் மூலம் உரிமையாக்கிக் கொள்வதுதான் அவர்களது வழக்கமாக உள்ளது. இப்பகுதியில் காட்டு நிலங்கள், மேட்டு நிலங்கள் என்று இரு பிரிவு உள்ளது. மேட்டு நிலங்களில் மழைக்குப் பின் தானியங்களைப் பயிரிடுவது பழங்குடி மக்களின் பாரம்பரிய விவசாய முறையாக உள்ளது.

பாக்சைட் சுரங்கத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தானதும், ஒரிசா மாநில அரசு இந்நிலங்கள் அனைத்தையும் அந்நிய மற்றும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்குக் கையளித்துவிட்டது. பழங்குடியினரின் நிலங்கள் இப்போது கைமாறி விட்டதாகக் கூறி, அரசு அதிகாரிகள் பழங்குடியினரை ஊரைக் காலி செய்துவிட்டு ஓடுமாறு விரட்டுகின்றனர். பழங்குடியினரது நிலங்கள் பத்திரப் பதிவு செய்யப்படாததைச் சாதகமாக்கிக் கொண்டு, இப்போது அந்நிலங்களை அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் சொந்தம் கொண்டாடுகின்றனர். மாநில அரசு, உள்ளூராட்சி நிர்வாகம், சட்டம், போலீசு, நீதித் துறை மற்றும் அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஆதரவோடு இந்த அட்டூழியம் நடந்துள்ளது.

பழங்குடி மக்கள் நிலங்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு வெளியேற்றப்படுவது மட்டுமல்ல; அவர்களது மறுவாழ்வுக்கு எவ்வித நிவாரண உதவியுமின்றி விரட்டப்படுகிறார்கள். மேலும், இப்பகுதிகள் மட்டுமின்றி சுற்றியுள்ள பகுதிகளிலும் அலுமினியக் கழிவுகளால் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பு

வாழ்வுரிமையைப் பறிக்கும் பாக்சைட் சுரங்கத் திட்டத்தை எதிர்த்துப் பழங்குடியினர் நடத்தும் பேரணியைத் தடுத்து நிறுத்தும் போலீசு: ஏகாதிபத்திய அடியாள் படை.





படிப்பகம்

www.padippakam.com

ஏற்படும். விவசாயம் நாசமாகி, நிலத்தடி நீரும் நஞ்சாகும். சுவாசக் கோளாறு, தோல் நோய்கள் முதல் இனம் புரியாத நோய்கள் மக்களைத் தாக்கும். இருப்பினும், இவற்றையெல்லாம் மூடிமறைத்துவிட்டு, மாநிலத்தைத் தொழில்மயமாக்கும் மகத்தான நடவடிக்கை என்ற பெயரில் அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஆதரவோடு இந்த அயோக்கியத்தனம் நடந்து வருகிறது.



பாக்சைட் சுரங்கத் திட்டத்தை ஆதரித்து நடக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரச்சார ஊர்வலம்: நாட்டை விற்கும் எட்டப்பர்கள்.

இக்கொடுமைக்கு எதிராக கண்டன ஊர்வலம், சாலை மறியல், ஆர்ப்பாட்டம், தொடர் முழக்கப் போராட்டம் முதலானவற்றை காசிபூர், ரயாகடா வட்டாரங்களில் பழங்குடி மக்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். பிராகுருதிக் சம்பாடா சுரக்யா பரிசத், பாகிலிமாலி சுரக்யா சமிதி முதலான அமைப்புகளில் அணிதிரண்டு, அரசு அதிகாரிகளையும் நில அளவையாளர்களையும் தமது ஊருக்குள் நுழைய விடாமல் விரட்டியடிக்கின்றனர். எல்லா கிராமங்களிலும் தமது அமைப்புகளிலுள்ள இளைஞர்களைக் கொண்டு ரோந்து சுற்றும் குழுக்களை நிறுவி, இரவும் பகலும் கண்காணிக்கின்றனர்.

அரசாங்கமும் ஓட்டுக் கட்சிகளும் இத்தனைக்கும் பிறகும் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யக்கூடத் தயாராக இல்லை. மாறாக, போராடும் பழங்குடி மக்களைத் தேச விரோதிகளாகச் சித்தரித்து, ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதில் ஒன்றுபட்டு நிற்கின்றன. 1995-லிருந்து பழங்குடி மக்கள் மீது நூற்றுக் கணக்கான பொய் வழக்குகளை போலீசார் சோடித்துள்ளதோடு, போராடும் மக்கள் மீது காட்டு மிராண்டித்தனமாக தடியடித் தாக்குதல் நடத்தி பலரது மண்டையைப் பிளந்துள்ளனர். முன்னணியாளர்களைக் கொட்டடியில் அடைத்துக் கொடூரமாக வதைத்துள்ளனர். இப்பகுதியில் நுழையும் பத்திரிகை செய்தியாளர்களைக் கூட தாக்கி விரட்டியுள்ளனர். இத்தனை அடக்குமுறை நீடித்தபோதிலும், பழங்குடி மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை.


இது ஒருபுறமிருக்க, போராடும் மக்களை அவதூறு செய்து தனிமைப்படுத்தவும், தமது அடக்குமுறைக்கு நியாயம் கற்பிக்கவும் அரசாங்கமும் ஓட்டுக் கட்சிகளும் இப்போது புதிய உத்தியுடன் கிளம்பியுள்ளன. இதன்படி, ''அனைத்துக் கட்சி - மக்கள் கமிட்டிகள்'' பல பகுதிகளில் கட்டியமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைத் தடுக்கும் சதிகாரர்கள் என்று போராடும் மக்கள் மீது பழிதூற்றும் இக்கமிட்டிகளில் அரசு உயர் அதிகாரிகள், சுரங்கத் திட்ட ஒப்பந்தக்காரர்கள், பெரு வியாபாரிகள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் முதலானோர் அங்கம் வகிக்கின்றனர். அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் இக்கமிட்டிகளின் புரவலர்களாக உள்ளனர்.

அவர்கள் வீசும் எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு, இக்கமிட்டிகள் கூலிப் பிரச்சாரகர்களையும் அடியாட்களையும் திரட்டிக் கொண்டு பழங்குடியினரின் பகுதிகளில் ஒருபுறம் ஆசை வார்த்தைகளுடன் பிரச்சாரம் செய்தும், மறுபுறம் எச்சரிக்கை விடுத்து அச்சுறுத்தியும் வருகின்றன. இக்கூலிப் படைக்குப் பாதுகாப்பாக போலீசுப் படையும் உடன் செல்கிறது. கிராமங்களில் நுழையும் இக்கூலிப் படையைத் தடுத்தாலோ, அதன் பொய்ப் பிரச்சாரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தாலோ பழங்குடியினர் தாக்கப்படுவதும், போலீசாரால் கைது செய்யப்படுவதும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது.

இவ்வாறு தொடரும் தாக்குதலையும், கூலிப்படையினரின் பொய்ப் பிரச்சாரத்தையும் முறியடிக்கவும், வாழ்வுரிமைக்கான தமது போராட்டத்தைத் தொடரவும் தீர்மானித்த மைகஞ்ச் கிராமத்து பழங்குடி மக்கள் டிசம்பர் 20-ஆம் தேதியன்று சாலை மறியல் போராட்டம் நடத்துவதென முடிவு செய்தனர். இதற்கான ஏற்பாடுகள் - தயாரிப்புகள் பற்றி டிசம்பர் 15-ஆம் தேதியன்று இரவில் கூடி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்த போது, ஆளும் பிஜு ஜனதாதளக் கட்சியின் மாவட்டத் தலைவரான பாஸ்கர் ராவ் தலைமையில் வந்த சர்வகட்சி குண்டர் படை, பழங்குடி மக்கள் மீது தாக்குதல் நடத்தி அடித்து விரட்டியது. தமது போராட்டத்தைத் தடுக்க வன்முறையில் இறங்கிய இக்கூலிப்படை மீது கல்லெறிந்து பழங்குடி மக்கள் துரத்தியடித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த அனைத்துக் கட்சி கமிட்டியினர் போலீசிடம் முறையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வெறியூட்டியதும், டிசம்பர் 16-ஆம் தேதியன்று காசிபூர் போலீசு நிலையத்திலிருந்து இருபெரும் படைகளாக ஆயுதப் போலீசுப் படை மைகஞ்ச் கிராமத்தை நோக்கிப் புறப்பட்டது. துப்பாக்கியுடன் பெரும்படையாகப் போலீசு வருவதைக் கண்டதும் கிராமத்திலுள்ள ஆண்கள் அனைவரும் அருகிலுள்ள குன்றுப் பகுதிக்குத் தப்பியோடினர். கிராமத்தில் நுழைந்த போலீசு வெறியர்கள் பெண்களையும் குழந்தைகளையும் மிருகத்தனமாகத் தாக்கி, வீடுகளைச் சூறையாடினர். போலீசு வதையினால் வேதனையில் துடித்த பெண்களின் மரண ஓலத்தைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஆண்கள், கைகளை உயர்த்தியபடியே நிராயுதபாணியாகச் சரணடையும் முகமாக

மைகஞ்ச் கிராமத்தில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட விவசாயி: 'வளர்ச்சி'க்கு அரசு கொடுத்த நரபலி!




படிப்பகம்

www.padippakam.com

குன்றுப் பகுதியிலிருந்து கிராமத்தை நோக்கி வரத் தொடங்கினர்.

தொலைவில் கும்பலாக ஆண்களைக் கண்டதும், ஏதோ எதிரிப் படையைக் கண்டது போல வெறிபிடித்த போலீசு குண்டர்கள், எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இம்மிருகத்தனமான நரவேட்டையில் மூன்று அப்பாவி பழங்குடியினர் கொல்லப்பட்டனர். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இத்துப்பாக்கிச் சூட்டில் பழங்குடியினர் மட்டுமின்றி, குன்றுப் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த மூன்று பசுக்களும் ஒரு எருதும் கொல்லப்பட்டுள்ளன. போலீசு குண்டர்கள் எந்த அளவுக்கு காட்டுமிராண்டித்தனமாக இக்கொலை வெறியாட்டத்தை நடத்தியுள்ளார்கள் என்பதைக் காட்ட இது வொன்றே சாட்சி கூறப் போதுமானது.

ஆளும் பிஜூ ஜனதாதளம், அதன் கூட்டணிக் கட்சியான பாரதீய ஜனதா, எதிர்க்கட்சியான காங்கிரசு ஆகியன இக்கொடுஞ்செயலை ஆதரித்து ஓரணியில் நின்ற அதேசமயம், இடது - வலது போலி கம்யூனிஸ்டு கட்சிகள் மட்டும் உண்மையறியும் குழுவை நிறுவி, பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிட்டு துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டன. அதன் பின்னரே மாநில அரசு விசாரணைக்கு உத்தரவிட்டு, கொல்லப்பட்டோர் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையை வழங்குவதாக அறிவித்தது. இருப்பினும் இத்துப்பாக்கிச் சூட்டை தலைமை தாங்கி ஏவிய வட்டார போலீசு ஆய்வாளர், உத்தரவிட்ட வட்டார வளர்ச்சி அதிகாரி, பிஜூ ஜனதாதளத் தலைவர்கள், அனைத்துக் கட்சி மக்கள் கமிட்டி எனும் கூலிப்படை - ஆகிய கொலைகார கும்பல் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையுமில்லை.

மொத்தத்தில் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் அரசாங்கமும் நமது நாட்டின் கனிம வளத்தை அந்நிய ஏகாதிபத்தியங்கள் சூறையாடுவதற்கு வெளிப்படையாகவே அடியாள்படையாகவேச் செயல்படுகின்றன. மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து, போராடும் ஜனநாயக உரிமையையும் நசுக்கி கொலை வெறியாட்டம் போடுகின்றன. ஒரிசாவின் பாக்சைட் கனிமவளம் மட்டுமின்றி, நீர்வளமும் நிலவளமும் அரசுத்துறை நிறுவனங்களும் அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்பட்டு நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருகிறது.

ஒரிசா பழங்குடி மக்களின் போராட்டம் வெறுமனே மறுவாழ்வு உரிமைக்கான போராட்டமல்ல; சாராம்சத்தில் இது நாட்டை மீண்டும் காலனியாக்கிவரும் அனைத்து ஓட்டுக் கட்சி துரோக அரசுகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான போராட்டம். தன்னார்வக் குழுக்களின் தலைமையில் மறுவாழ்வு - சுற்றுச்சூழல் கோரிக்கைகளுடன் வரம்பிட்டுக் கொண்டு பழங்குடி மக்கள் நடத்தும் போராட்டம், நாளை கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான சுதந்திரப் போராகப் பற்றிப் படரவே செய்யும்.

இந்நிலையில், நாட்டைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் நமது வளத்தையும் வாழ்வையும் பறித்துக் கொண்டு நாட்டை மீண்டும் காலனியாக்கி வரும் சர்வ கட்சி துரோகத்தை ஆதரித்து நிற்கப் போகிறோமா? அல்லது ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை முறியடித்து, நாட்டைச் சூறையாடும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான சுதந்திரப் போரில் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளப் போகிறோமா? நாட்டுப்பற்றும் தன்மான உணர்வும் கொண்ட ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டிய கேள்வி இது.

● மனோகரன்

# போபாலுக்கு ஒரு யூனியன் கார்பைடு! அங்குல் நகருக்கு ஒரு ''நால்கோ'' !

ஒரிசா மாநிலத்தின் அங்குல் நகரிலுள்ள "நால்கோ" நிறுவனத்தின் அலுமினியச் சாம்பல் கழிவு ஏரி கடந்த ஜனவரியில் உடைந்து, கழிவுகள் திடீர் வெள்ளமெனப் பாய்ந்ததால், அங்குல் - தால்சர் வட்டங்களில் 2400 ஏக்கர் விளைநிலங்கள் பாழாகி விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

தேசிய அலுமினிய நிறுவனம் (நால்கோ) எனப்படும் அரசுத்துறை நிறுவனம், அலுமினியச் சாம்பல் கழிவுகளை இரு பெரும் ஏரிகளில் தேக்கி வைத்துள்ளது. அவற்றின் கொள்ளளவுக்கு மேலாகக் கழிவுகளைத் தேக்கியதால், அவற்றின் மண்சுவரிலான கரைகள் உடைந்து, திடீர் வெள்ளமென சுற்றுப்புறப் பகுதிகளில் பாய்ந்தது. பல வீடுகள், பயிர்களையும் கால்நடைகளையும் இந்த நச்சு வெள்ளம் அடித்துச் சென்றது. 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 5 அடி முதல் 10 அடி வரை அலுமினியச் சாம்பல் கழிவுகள் மேடுகளாகி நிற்கின்றன.

சாம்பல் கழிவு நீர் ஏரி உடைப்பால் பெருகிய வெள்ளம், பல கிராமங்களில் பாய்ந்தோடி அருகிலுள்ள நந்திரா ஆற்றையும் நஞ்சாக்கியுள்ளது. அதன் கரைகள் எங்கும் அலுமினியச் சாம்பல் கழிவுகள் வெள்ளியாய் மின்னுகின்றன. கிராமங்களையும் பயிர்களையும் நாசமாக்கிய இந்த நச்சுக் கழிவு நாளடைவில் காய்ந்து, அதன் மென்மையான சாம்பல் காற்றில் பரவி மக்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்படும். ஒவ்வாமையினால் தோல் நோய்கள் பெருகும். நிலமும் நீரும் நஞ்சாகிப் போகும். எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு வாழ்வும் வளமும் சுற்றுச் சூழலும் நாசமாகும்.

பேரழிவை விளைவித்துள்ள இந்த நச்சுக் கழிவுத் தாக்குதலுக்குப் பின்னரும், அரசாங்கமோ நால்கோ நிறுவனமோ எந்தவொரு நிவாரண நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. நால்கோ அதிகாரிகளோ இந்தக் கழிவுகள் நச்சுத்தன்மை கொண்டதல்ல; இவை பயிருக்கு உரமாகக் கூடிய சத்துக்களைக் கொண்டவை என்று கூசாமல் புளுகி வருகின்றனர். ஆனால் "நால்கோ"வின் கழிவுச் சாம்பல் ஏரிகள் உள்ள பகுதிகளில் புல் - பூண்டு கூட இதுவரை முளைத்ததில்லை.

இந்நச்சு கழிவுத் தாக்குதலால் விவசாயமும் விவசாயிகளும் பெருத்த பாதிப்பு அடைந்துள்ளதைப் பற்றி எதிர்க் கட்சிகள் முணுமுணுக்கத் தொடங்கியதும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாக ரூ. 10 கோடி அளிக்க நால்கோ நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. ஏறத்தாழ 50,000 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அற்பமான நிவாரணத் தொகையைக் கொண்டு விவசாயிகள் தமது நிலத்திலுள்ள கழிவுகளை அகற்றவோ, நீர் நிலைகளைத் தூய்மைப்படுத்தவோ ஒருக்காலும் சாத்தியமே இல்லை.

விவசாயமும் விவசாயிகளும் பாழ்: "நால்கோ" அலுமினிய கழிவு ஏரி உடைந்து பாயும் நச்சு வெள்ளம்.



இந்தியத் தரச் சான்றிதழ் (ஐ.எஸ்.ஓ.) பெற்ற "நால்கோ" நிறுவனத்தின் யோக்கியதையே இப்படியென்றால், இலாப வெறிபிடித்த தனியார் - அந்நிய பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் இங்கு அலுமினிய ஆலை தொடங்கினால், நாட்டு மக்களின் கதி என்னவாகும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

வறுமையின் கொடுமையைச் சகித்துக் கொள்ள முடியாமல், தற்கொலை செய்து கொண்ட கூலித் தொழிலாளியின் குடும்பம் இது. கோவையைச் சேர்ந்த கண்ணன், சில ஆண்டுகளுக்கு முன்பு சொந்தமாகவே தங்கப்பட்டறையொன்றை நடத்தி வந்தார். கடன் தொல்லையால் அந்த தங்கப்பட்டறையைத் தொடர்ந்து நடத்த முடியாமல் போகவே, அதை மூடிவிட்டு, வேறொருவரின் தங்கப் பட்டறையில் கூலித் தொழிலாளியாக வேலைக்குச் சேர்ந்தார் அவர். அதில் கிடைத்த கூலியைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியாமல் திக்கு முக்காடிப் போன அவரை, குழந்தைகளின் படிப்பும், எதிர்காலமும் மிரளவே வைத்துவிட்டன. எதிர் நீச்சல் போட முடியாமல், சயனைடு கலந்த பாலைக் குடித்து விட்டு, வாழ்க்கையை முடித்துக் கொண்டது அவரது குடும்பம்.



# இதுதான் இன்றைய இந்தியா

தானும், தனது மனைவியும், தனது குழந்தைகளும் ஒரு நாள் இப்படி அவலமாகச் செத்துப் போவோம் என்று கண்ணன் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். தங்களுக்கு உயிர் கொடுத்த பெற்றோரே, தங்களின் உயிரைப் பறித்துக் கொள்வார்கள் என்று சயனைடு கலந்த பாலைக் குடித்த பொழுதாவது அந்தக் குழந்தைகள் அறிந்திருக்குமா? சோறு போட்ட கையாலேயே, குழந்தைகளுக்கு விஷம் கொடுத்துத் தீர வேண்டிய வேதனை எவ்வளவு கொடூரமானது! ஆனால், அந்த வேதனையை விட, அவர்களுக்கு வறுமையின் வேதனை சகிக்க முடியாததாக இருந்திருக்கிறது.



தாராளமயமாக்கத்திற்கு பிறகு வறுமைக்கு ஈடுகொடுக்க முடியாமல், தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால் கண்ணன் குடும்பத்தின் சோக முடிவு புதியதுமல்ல, முடிவானதுமல்ல. "மொத்த மக்கள் தொகையோடு ஒப்பிட்டால், வறுமைக்குப் பயந்து இப்படி தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவுதான்" என்று சிலர் நம்மை மடக்கலாம். உண்மைதான். ஆனாலும், உழைக்கும் மக்களிடம், "உங்களின் வாழ்க்கை எப்படியிருக்கிறது?" என்று கேட்டுப் பாருங்கள். "தினம் தினம் செத்துப் பிழைக்கிறோம்" என்பார்கள்.

இதோ இந்தப் படத்தில் இரண்டாவது வரிசையில் இடப்புற ஓரத்தில் நிற்பவர் அமர் சிங். அவர், 'சமூக நீதி'க் கட்சிகளில் ஒன்றான சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர்களுள் ஒருவர். அமர் சிங் சென்ற தீபாவளியை எங்கே, எப்படி கொண்டாடினார் தெரியுமா? எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில், நைல் நதியில் படகு சவாரி செய்து கொண்டே, பிரமிடுகளைப் பார்த்து ரசித்துக் கொண்டே கொண்டாடினார். இவர் இப்படியென்றால், பா.ஜ.க.வைச் சேர்ந்த மைய சட்டத்துறை அமைச்சர் அருண் ஜெயிட்லி தனது சட்டை, பேண்டுகளை இலண்டனிலும், துபாயிலும்தான் வாங்குகிறார். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கமல்நாத் தனது துணிகளை வெளிநாடுகளில் தான் தைத்துக் கொள்கிறார்.

ஓட்டுக் கட்சிகளைச் சேர்ந்த வார்டு உறுப்பினர்கள்கூட டாடா சுமோவில் பறக்கும் காலத்தில், அக்கட்சிகளின் பெரிய தலைவர்கள், அமைச்சர்கள் டாடா, பிர்லாக்களைப் போல வாழ்க்கை நடத்துவது ஆச்சரியப்படத்தக்க விசயமில்லைதான். ஜெயாவின் ஆடம்பர - களியாட்ட வாழ்வைக் கண்கூட கண்டவர்கள் தானே நாம். கதராடை அணிந்து கொண்டு, ஏழைப் பங்காளனைப் போல நடிக்கக் கூட இப்பொழுது ஓட்டுக் கட்சித் தலைவர்கள் தயாராக இல்லை. இப்படிபட்டவர்களுக்கு மக்களின் வாழ்க்கை குறித்து என்ன அக்கறை இருந்து விட முடியும்?

வாங்கும் கூலி போதாமல், வேலை கிடைக்காமல், வறுமையோடு போராட முடியாமல், தற்கொலைப் பாதைக்குத் தள்ளப்படும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; மக்களின் வரிப் பணத்திலும், இலஞ்சத்திலும் ஊறித் திளைத்து உல்லாச வாழ்வு வாழும் ஓட்டுக் கட்சித் தலைவர்கள் மறுபுறம். நமது வாழ்க்கை கரை சேர, இந்த ஓட்டுண்ணிக் கூட்டத்தையா இனியும் நாம் நம்பி ஏமாற வேண்டும்?

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED W[...] PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG. 544 / 2000

www.padippakam.com

மார்ச் 23

பகத்சிங் நினைவு நாளில் அணி திரள்வோம்



ஒழிக
அமெரிக்க மோகம்!

ஓங்குக
நாட்டுப்பற்று!!

அமெரிக்காவுக்கு
நாட்டை அடிமையாக்காதே!

விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின்

# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடு

மார்ச் 23 - 24 கோவை

பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள், தேசியத் தொழில் முனைவோர் மற்றும் அறிவுத் துறையினர் பங்கேற்கும்

- கருத்தரங்கம் - பேரணி - பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சிகள்

## அணிதிரள்வோம்! ஆர்த்தெழுவோம்!



**ம.க.இ.க. - வி.வி.மு - பு.மா.இ.மு - பு.ஜ.தொ.மு.**

படிப்பகம்